பக்கங்கள் : 14+கல்விச்சுடர்
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 11 திங்கட்கிழமை (24.04.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :148

# நிழல் யுத்தம் நிஜ யுத்தமாகி இனப்போர் மூளும் பேராபத்து



## மதியுரைஞர் பாலா எச்சரிக்கை

கொழும்பு, ஏப்ரல் 24

**தமிழர் துணைப்படைகளைப் பராமரித்துப் பேணி, அவற்றின் வன்முறைகளைத் தடுத்து நிறுத்த மறுத்து, அதன் மூலம் ஒரு நிழல் யுத்தத்துக்கு - நாசகாரப் போருக்கு - வழி செய்துள்ள இலங்கை அரசுத் தரப்பின் செயற்பாடுகளினால் நாடு மீண்டும் ஒரு தடவை பெரும் இனப் போருக்குள் மூழ்கப் போகின்றது.**

**- இவ்வாறு எச்சரித்திருக்கின்றார் தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.**

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார்.

அந்த வார இதழுக்கு அவர் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

வடக்கு - கிழக்கில் கள நிலைமைகள் மிகவும் மோசமானவையாகவும் ஆபத்து நிலையை நோக்கியனவாகவும் மாறிக்கொண்டிருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும்.

அதிகரித்து வரும் வன்முறைகள் கடந்த டிசெம்பர், ஜனவரி மாதங்களில் நிலவியதை ஒத்த ஒரு நிழல் யுத்தத்துக்குரிய - அல்லது மறைமுக நாசகார யுத்தத்துக்குரிய - கோர வடிவத்தை எடுத்து வருகின்றன.

ஜெனீவாப் பேச்சுகளை அடுத்து கிழக்கில் முன்னணிக் காவல்நிலைகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலோடுதான் இம்முறை வன்முறைகள் ஆரம்பித்தன.

இந்த மோதலின்போது தாக்குதல் நடத்திய கருணா குழுவுக்கு இலங்கைப் படைகள்

(1'4ஆம் பக்கம் பார்க்க)

## சேமமடுவில் கிளைமோர் தாக்குதல்!

புளியங்குளம்,ஏப்.24

வவுனியாவில் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் நேற்று இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்தார்.

மன்னார் வீதி, குருமண்காட்டைச் சேர்ந்த லொறி உரிமையாளரான இளையதம்பி பாலசிங்கம் (வயது 54) என்பவரே இதில் படுகாயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சேமமடு சமனங்குளம் வீதியில் நேற்று இவர் செலுத்திச் சென்ற லொறி பிற்பகல் ஒரு மணியளவில் கிளைமோர்த் தாக்குதலுக்கு இலக்கானது. இதில் அவர் காலில் படுகாயமடைந்தார். (ஒ-335)

## ஐஸ்கிறீம் வான் மீது துப்பாக்கிச் சூடு!

யாழ்ப்பாணம், ஏப்.24

காங்கேசன்துறை வீதி நாச்சிமார் கோயிலடியில் நேற்றிரவு 7 மணியளவில் ஐஸ்கிறீம் வாகனத்தை நோக்கி நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அதில் இருந்த பணியாளர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

எஸ்.கஜேந்திரன்(வயது 25) என்பவரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை நேற்றிரவு 8 மணியளவில் வண்ணார்பண்ணை சிவன்கோயிலடி இராணுவக் காவலரண் பகுதியில் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டது. (ஒ-13)

## புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை விரைவில் என்கிறது அரச சமாதான செயலகம்

கொழும்பு, ஏப்.24

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையை வெகு உன்னிப்பாக அவதானித்து வரும் ஐரோப்பிய ஒன்றியம், விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வதற்கு ஆயத்தமாகி வருவதாக அரசாங்க சமாதான செயலகத்தின் பணிப்பாளர் கலாநிதி பாலித கொஹன்ன நேற்றுத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

அமைதிப் பேச்சுகளின் பிந்திய நிலைமை குறித்து நேற்று 'உதயனு'க்குக் கருத்து வெளியிட்ட பாலித கொஹன்ன, விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் விடயம் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசுக்கு அறிவித்திருப்பதாகவும், இது விடயத்தில் அடுத்த கட்ட நடவடிக்கைக்காக அரசு ஐரோப்பிய ஒன்றியத்துடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் கூறினார்.

அமைதிப் பேச்சுகளை முன்னெடுப்பதற்கு அரசு முன்வைத்த பல யோசனைகளை நிராகரித்து, வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் வன்முறைகளில் ஈடுபடுகின்றனர் எனக் குற்றஞ்சாட்டிய பாலித கொஹன்ன, ஐரோப்பிய ஒன்றியத்தின் அதிருப்திக்கும் இதுவே முக்கிய காரணமென்றும் குறிப்பிட்டார். (14ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலையில் நேற்று 6 சிங்களவர் வெட்டிக்கொலை!

திருகோணமலை கோமரங்கடவலைப் பகுதியில் நேற்று 6 சிங்கள விவசாயிகள் இனந்தெரியாத ஆயுததாரிகளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை நகரில் இருந்து 40 கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் கோமரங்கடவலைப்பகுதி உள்ளது. இப்பகுதியில் கல்லம்பத்துக் கிராமத்தில் விவசாய அறுவடைக்குச் சென்றுவிட்டு வீடுதிரும்பிய சிங்கள விவசாயிகள் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் 6 பேர் கத்திவெட்டுக்கு இலக்கான நிலையில் பலியாகியுள்ளனர். மேலும் 4 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## இருபாலை மற்றும் நாவாந்துறையில் நேற்று இருவர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்,ஏப்.24

குடாநாட்டில் இருவேறு இடங்களில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் இருவர் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

இருபாலைச் சந்தியில் நேற்று நண்பகல் 12.15 மணியளவில் ஓட்டோச் சாரதியான, கட்டைப்பிராயைச் சேர்ந்த குருநாதன் ஜனார்த்தனன் (வயது 23) என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று கூறப்பட்டது. சூட்டுச் சம்பவம் நடந்த இடத்திலிருந்து சுமார் 50 மீற்றர் தூரத்தில் இராணுவத்தினரின் காவலரண் ஒன்று அமைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவரைச் சுட்டுக்கொன்றவர்கள் பயணித்த மோட்டார்சைக்கிள் புறப்பட்ட சிறிது நேரத்தில் பழுதடைந்ததாகவும் -

அவர்கள் அந்த மோட்டார் சைக்கிளை அங்கேயே கைவிட்டு அவ்வழியே தனது

(14ஆம் பக்கம் பார்க்க)

## சுற்றிவளைப்புத் தேடுதலின்போது திருமலையில் ஒருவர் சுட்டுக்கொலை!

### மேலும் 6 தமிழ் இளைஞர்கள் கைது

திருகோணமலை,ஏப்.24

திருகோணமலை கப்பல்துறைப் பகுதியில் நேற்றுக்காலை விமானப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலின்போது இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இச்சுற்றிவளைப்புத் தேடுதல் நேற்றுக்காலை 6 மணி தொடக்கம் 9 மணிவரை இடம்பெற்றது.

தமது சுற்றிவளைப்பின்போது தம்மீது இந்த இளைஞர் கைக்குண்டு ஒன்றை எறிய முற்பட்ட வேளையில் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று விமானப் படையினர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## இன்று பணிப் புறக்கணிப்பில் ஈடுபட ஓட்டோச் சாரதிகளுக்கு அழைப்பு

ஓட்டோச் சாரதிகள் கொல்லப்படுவதைக் கண்டித்து இன்று திங்கட்கிழமை குடாநாட்டில் ஓட்டோச் சாரதிகளை பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுமாறு வட பிராந்திய முச்சக்கரவண்டிச் சேவைச் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

நெல்லியடி பஸ்நிலையப் பகுதியில் வடமராட்சி முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத் தலைவர் சுப்பிரமணியம் வசீகரன், மற்றொரு ஓட்டோச் சாரதி இரத்தினம் றசிந்தன் ஆகியோர் நேற்றுமுன்தினம் ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். நேற்று இருபாலையில் ஓட்டோச் சாரதியான குருநாதன் ஜனார்த்தனன் என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்நிலையில் ஓட்டோச் சாரதிகள் இலக்குவைத்துக் கொல்லப்படுவதற்குக் கண்டனம் தெரிவித்தே ஓட்டோச் சாரதிகளைப் பணிப் பகிஷ்கரிப்பில் இன்று ஈடுபடுமாறு அழைப்பு விடுத்துள்ளதாக மேற்படி சங்கம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

## மட்டு. பொலீஸ் நிலையம் மீது நேற்றுக் கைக்குண்டு வீச்சு!

### மூன்று பொலீஸார் படுகாயம்

மட்டக்களப்பு,ஏப்.24

அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்தின் மீது நேற்று முற்பகல் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலினால் மூன்று பொலீஸார் படுகாயமடைந்தனர்.

நேற்றுமுற்பகல் 11.45 மணியளவில் - சனநடமாட்டம் நிறைந்த வேளையில் - இந்தத் துணிகரத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள இந்து ஆலய வளவுக்குள் மறைந்திருந்த இளைஞர் ஒருவர் ஆலய மதிலின் மேலாக கைக்குண்டை எறிந்துவிட்டுத் தப்பிச் சென்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கைக்குண்டு வீச்சில் சப் இன்ஸ்

(14ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்படும்: குடாநாட்டை விட்டு வெளியேறுங்கள்!

## பொங்கி எழும் மக்கள் படை அறிவிப்பு

கொழும்பு,ஏப்.24

குடாநாட்டில் இராணுவத்தினருக்கு எதிரான தாக்குதல்களைத் தொடர்ச்சியாகத் தீவிரப்படுத்தவுள்ளதாக பொங்கியெழும் மக்கள் படை நேற்று அறிவித்திருக்கின்றது. அத்துடன் பெரும் எடுப்பில் தாக்குதல்கள் நடத்தப்படவுள்ளதால் பாதுகாப்புக் கருதி குடாநாட்டை விட்டு வெளியேறுமாறு மக்களை அது கேட்டிருக்கிறது.

'பொங்கியெழும் மக்கள் படை யாழ். மாவட்டம்' என்ற பெயரில் நேற்று ஊடகங்களுக்கு விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சிங்கள ஆட்சியாளர்களால் தமிழின அழிப்பின் புதிய வடிவமாக குடாநாட்டில் காலநேரம் பாராமல் - வயது வேறுபாடின்றி எம் மக்கள் அழித்தொழிக்கப்படுகின்றனர். இனியும் தொடரும் காலங்களில் சிங்கள ஆட்சியாளர்களின் நோக்கம் தமிழீழ இளைஞரைக் கொல்வதே என்பதை நாங்கள் புரிந்து கொண்டுள்ளோம்.

இதுவரையும் எம் மக்களைப் பாதுகாக்கவும் இயல்புவாழ்வுக்காகவும் பொங்கியெழும் மக்கள்படையாகிய நாம் பொறுமை காத்து வந்தோம். தொடரும் இன அழிப்பின் நோக்கத்தைப் புரிந்துகொண்ட நாங்கள் தொடர்ந்தும் எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் இருப்பதை எமது பலவீனம் எனக் கருதி சிங்களக் கூலிப்படையினரும் ஒட்டுக்குழுக்களும் தமது கொலை வெறியாட்டத்தின் வெளிப்பாடாக புத்தூரிலும், காரைநகரிலும், நெல்லியடியிலும், இருபாலையிலும் இன்னும் தமிழர் படுகொலைகளைத் தொடர்வதை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

சிங்களக் கூலிப்படைக்கு எதிரான எமது தாக்குதல்கள் பாரிய அளவில் பரவலாக எம்மால் நடத்தப்படுமென்பதைக் கூறுவதுடன் அன்பான மக்களே! உங்கள் பாதுகாப்புக் கருதியும் எமது தாக்குதல்களுக்கு இடையூறு இன்றியும் மிகவிரைவாக யாழ். குடாநாட்டை விட்டு வெளியேறுங்கள். இது எங்கள் அன்பான கட்டளை. - என்று அந்த அறிக்கை கூறுகின்றது. (ஐ-203-202)

## கூல் நியமனத்தை எதிர்த்து மனு

கொழும்பு,ஏப்.24

யாழ்.பல்கலைக்கழகத்தின் கணனி, விஞ்ஞானப்பிரிவிற்கான சிரேஷ்ட பேராசிரியர் பதவிக்கு பேராசிரியர் ரட்ணஜீவன் கூல் நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்து மேன்முறையீட்டு நீதிமன்றில் கடந்த புதன்கிழமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடப் பீடாதிபதி பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல் இம்மனுவை சட்டத்தரணி மோகன் பாலேந்திரா மூலம் தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவில் பிரதிவாதிகளாகப் பேராசிரியர் ரட்ணஜீவன் கூல், பல்கலைக்கழகச் சேவைகள் மேன் முறையீட்டு சபையின் தலைவர் ஜீ.டபிள்யூ.எதிரிசூரிய, அதன் உறுப்பினர் அன்ரல் அல்பிரட், யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ், யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானப் பிரிவின் தலைவர் கலாநிதி எஸ்.மகேசன், யாழ்.பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர், பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பேராசிரியர் ரட்ணஜீவன் கூலுக்கு வழங்கப்பட்டிருக்கும் இந்நியமனத்தை ரத்துச் செய்யுமாறு பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீட்டுச் சபைக்கு உத்தரவிட வேண்டுமென இந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. (ஒ-203)

## வீட்டுத் திட்டத்திற்கு தெரிவானோரில் ஓர் அங்கத்தவர் குடும்பங்கள் நீக்கம்

தென்மராட்சி,ஏப்.24

தென்மராட்சியில் உலக வங்கியின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் வீட்டுத் திட்டத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிக் குடும்பங்களில் ஓர் அங்கத்தவரை மட்டும் கொண்ட குடும்பங்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

தகைமையுள்ளதாக கணனியால் தெரிவு செய்யப்பட்ட ஓர் அங்கத்தவரைக் கொண்ட குடும்பங்களே பட்டியலிலிருந்து நீக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களின் இடங்களுக்கு தெரிவின் அடிப்படையில் முன்னிலையில் உள்ள குடும்பங்கள் தெரிவுசெய்யப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

தெரிவுப் பட்டியலில் பெயர் இல்லாத பெருமளவு மக்கள் பிரதேச செயலகத்தில் அதிகாரிகளுடன் வாக்குவாதப்பட்டனர். ஒவ்வொருவருக்கும் விளக்கம் கொடுத்து அதிகாரிகள் களைப்படைந்த நிலையில் காணப்பட்டனர். (ஒ-117)(22)

## கிராம அலுவலர் அலுவலகம் முன்பாக கோவில்குடியிருப்பு மக்கள் இன்று மறியல்

தென்மராட்சி,ஏப்.24

வீடமைப்புத் திட்ட பயனாளிகள் தெரிவில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாகக் கூறும் தென்மராட்சிப் பிரதேச மக்கள் இன்று கிராம அலுவலர் அலுவலகத்தை முற்றுகையிட்டு செயலிழக்க வைக்க உள்ளனர் என்று கூறப்படுகிறது.

சாவகச்சேரி கோவில்குடியிருப்பு கிராம மக்களே இப்போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இப்பிரிவில் உலக வங்கியின் நிதி உதவியுடன் 40 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன என்று முன்னர் அறிவிக்கப்பட்டது. இதற்கென மக்களிடம் படிவங்களும் பெறப்பட்டன.

ஆனால், அண்மையில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் வெளியிடப்பட்ட பயனாளிகளின் பட்டியலில் இப்பிரிவில் 11 பேரே தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

தெரிவு செய்யப்பட்ட பதினொரு பேரில் எட்டுப் பேர் நிரந்தர காணி வசதி இல்லாதவர்கள் என்பதால் பிரிவில் ஏனைய மூன்று பேருக்கு மட்டுமே வீடமைக்கும் வசதி கிடைத்துள்ளது.

இந்நிலையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இன்னமும் நிரந்தர வீடுகளை அமைக்க முடியாத பல குடும்பங்கள் ஓலைக் கொட்டில்களில் வசித்து வருகின்றனர் என்றும் -

பாதிக்கப்பட்ட பிரதேசத்தினை மீளக் கட்டி எழுப்புவதில் பிரதேச செயலகத்தினர் பாரபட்சம் காட்டுகின்றனர் என்றும் -

இதனால் இன்று இப்பகுதிக் கிராம அலுவலர் அலுவலகத்தின் முன்பாக பாதிக்கப்பட்ட மக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்றும் - யாழ்.அரச அதிபருக்கு இப்பிரிவு மக்கள் அனுப்பிய மகஜரில் குறிப்பிட்டுள்ளனர். (ஒ-117)

## பிலியந்தலையில் தேவாலயம் அடித்து நொறுக்கப்பட்டது

### குண்டர் குழுவில் தேரர்களும் அடக்கம்?

கொழும்பு,ஏப்.24

பிலியந்தலை நகரிலிருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில் குடாமாதுவ வீதியில் அமைந்துள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றின் மீது பௌத்த தேரர்கள் சிலரின் தலைமையிலான குழுவினர் நேற்றுக்காலை தாக்குதல் நடத்தியிருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

அந்தப் பிரதேசத்திலுள்ள பௌத்தர்களை கிறிஸ்தவ மதத்துக்கு மாற்ற அந்தத் தேவாலயத்தினர் முயற்சி செய்து வருகின்றனர் எனக்கூறியே இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

இவர்கள் தேவாலயத்திற்குள் புகுந்து தேவாலய ஜன்னல், கண்ணாடிகள் மற்றும் தளபாடங்கள் போன்றவற்றை அடித்து நொறுக்கியதோடு தேவாலயத்தினுள் பிரார்த்தனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பக்தர்களையும் அடித்துக் காயப்படுத்தினர் எனக் கூறப்படுகின்றது.

பக்தர்களின் வான், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகள் போன்றவற்றையும் அடித்து நொறுக்கிய இக்கும்பல், அந்த வாகனங்கள் எல்லாவற்றையும் அங்கேயே விட்டு விட்டு, கால்நடையாகச் செல்லுமாறு தேவாலயப் பக்தர்களைப் பணித்தனராம்.

சம்பவத்தைக் கேள்விப்பட்டு அங்கு விரைந்த பொலீஸார் நிலைமையை ஒருவாறு கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தனர்.

இதுபற்றி மேலும் அறிய வருவதாவது:-

பிலியந்தலை, குடாமாதுவ வீதியில் இந்தத் தேவாலயம் இரண்டு வருடங்களுக்கு முன்னரே நிறுவப்பட்டது.

அப்பிரதேசத்திலுள்ள பௌத்தர்களை கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றும் நடவடிக்கையில் இந்தத் தேவாலயத்தினர் ஈடுபட்டு வருகின்றனர் என அப்பகுதியிலுள்ள பௌத்த தேரர்கள் குற்றம் சுமத்தி வந்தனர்.

இந்தத் தேவாலயத்தை உடனடியாக மூடிவிடவேண்டும் என்றும் அவர்கள் தொடர்ச்சியாக தேவாலய நிர்வாகத்தினருக்கு அழுத்தம் கொடுத்து வந்தனர்.

கடந்த ஒரு மாதமாக இந்த அழுத்தம் வலுவடையத் தொடங்கியது. இந்தத் தேவாலாயத்தில் பிரார்த்தனை வழிபாடு நடைபெறும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் அங்கு பௌத்த தேரர்கள் சகிதம் அப்பிரதேசத்தைச் சேர்ந்தோர் வந்து வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருப்போரை அச்சுறுத்துவது வழமை என்று கூறப்படுகின்றது.

இது குறித்து தேவாலய நிர்வாகத்தினர் பிலியந்தலை பொலீஸில் முறைப்பாடும் செய்துள்ளனர்.

(13ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசின் கபட நாடகத்தை தமிழர்கள் இனியும் சகிக்கமாட்டார்கள்

### நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.24

இலங்கை அரசின் கபட நாடகத்தை தமிழ் மக்கள் இனிமேலும் சகித்துக்கொண்டிருக்கமாட்டார்கள்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் புதிய ஜனாதிபதி பதவியேற்றதன் பின்னர் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் கட்டவிழ்த்துவிட்ட அரச பயங்கரவாத் நடவடிக்கைகளால் தமிழ் பேசும் மக்கள் கொலைசெய்யப்படுவதும் காணாமற்போவதும் அவர்களது உடைமைகள் எரியூட்டப்படுவதும் கொள்ளையிடப்படுவதும், உடல்ரீதியாக துன்புறுத்தல்களுக்கு உள்ளாவதும் சர்வசாதாரணமாக நடந்தேறி வருகின்றன.

ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சில் அரசுத் தரப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அடுத்த பேச்சுவார்த்தையில் மேலும் தொடர்ந்து கதைப்பது முடியாத நிலை என்பதை உணர்ந்து இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையைக் குழப்பும் நோக்கத்தோடு அரசு இராணுவ அடாவடித்தனத்தை தமிழ் பேசும் மக்கள் மீது நடத்தி, போரினை தொடர எண்ணியுள்ளமை அவர்களின் நடவடிக்கைகள் மூலம் அவதானிக்க முடிவதை சர்வதேசம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

வடக்கு - கிழக்கு தாயகத்தின் மையப் பகுதியான திருகோணமலையிலும் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்துவரும் மட்டக்களப்பு மற்றும் யாழ்.குடாநாட்டிலும் அரச பயங்கரவாத இன அழிப்பு வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளமையை சர்வதேசம் கவனத்தில் கொள்ளவேண்டும். இந்த நடவடிக்கை தமிழர் தாயகத்தில் வாழ்வோர் அனைவரையும் அழித்து இலங்கையை பௌத்த சிங்கள தேசமாக்கும் முயற்சியாகவே கருதவேண்டியுள்ளது.

இன்றும் திருகோணமலையில் மக்களைத் தேடி கொலைசெய்வதும் இருப்பிடங்களைத் தீயிடுவதும் அவர்களின் நிலங்களில் இருந்து விரட்டியடிப்பதும் தொடர்கிறது. இந்த நடவடிக் கைக்கு துணையாக அரச படைகளும் ஒட்டுக்குழுக்களும் செயற்படுவதை பாதுகாப்பு அமைச்சராகவும் ஜனாதிபதியாகவும் இருக்கும் மஹிந்தவால் கட்டுப்படுத்த முடியாதிருப்பதன் காரணம்தான் என்ன?

மேலும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில அண்மைய கொலைச் சம்பவங்கள் மக்களை மீண்டும் போருக்கு தூண்டும் நிகழ்வாகவே கருதவேண்டியுள்ளது.

இக்கொலைகளுக்கு அரசே பொறுப்பேற்கவேண்டும் ஏனெனில் இக்கொலைகளின்

(13ஆம் பக்கம் பார்க்க)






இருபாலையில் நேற்றுச் சுட்டுக்கொல்லப்பட்ட ஒட்டோச் சாரதி குருநாதன் ஜெனார்த்தனனின் சடலத்தை யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் பார்வையிட்டபோது எடுக்கப்பட்ட படம் இது. கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி விசாரணைக்கு உதவுகிறார். (படம் : நேசன்)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# யுத்தப் பிடிக்குள் நாடு மூழ்கும் ஆபத்து நிலை!

இந்த நாசகாரப் போர் - நிழல் யுத்தம் - நிஜ யுத்தமாக, பெரும் இனப் போராக வெடிக்கப் போகும் ஆபத்து - ஏது நிலை - ஏற்பட்டிருப்பதை விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் கோடிகாட்டியிருக்கின்றார்.

'மஹிந்த சிந்தனை' என்ற இறுக்கமான கருத்துலகத்துக்குள் தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு நீதி, நியாயமான தீர்வு கிட்டுவதற்கு சாத்தியமே இல்லை என்பதை தெளிவாக எடுத்துரைத் திருக்கிறார் மதியுரைஞர் பாலசிங்கம்.

இந்த வெளிப்படுத்தலை கடந்த நவம்பர் மாதம் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே. பிரபாகரன் தமது வரலாற்றுப் புகழ்மிக்க வருடாந்த மாவீரர் தின உரையில் தெரிவித்த கருத்துகளின் பின்னணியில் நோக்குவோமானால் ஓர் உண்மை புலனாகும்.

*"சிங்கள - பௌத்த மக்களின் நலனைப் பேணும் அரச அதிபரா கவே மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றிருக்கிறார். அரச அதிபர் மஹிந்தவின் சிந்தனைகளையும், கொள்கைகளையும் நாம் நன்கறிவோம்.*

*''தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக அவரது அரசியல் தரிசனத்திற்கும் தமிழரின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கும் மத்தியிலான இசைவற்ற இடைவெளிகளையும் இணங்காத முரண்பாடுகளையும் நாம் அறிவோம்.*

*''ஜனாதிபதி மஹிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்ட சிந்தனைகளை ஆழமாக அலசிப் பார்க்கும்போது தமிழ்த் தேசிய இனப் பிரச்சினையின் அடிப்படைகளையோ, அதன் மூலக் கேட்பாடுகளையோ அவர் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.*

*கொள்கை ரீதியாக எமக்கும் அவருக்கும் மத்தியிலான இடைவெளி மிகப்பெரியது. எனினும், அவர் நடைமுறை அரசியலில் நம்பிக்கை கொண்ட யதார்த்தவாதி என்று கருதப்படுவதால், சமாதான வழிமுறையை எவ்விதம் கையாளப் போகிறார் என்பதையும், தமிழ் மக்களுக்கு எவ்விதம் நீதி வழங்கப் போகிறார் என்பதையும் முதலில் நாம் அறிந்து கொள்வது அவசியம். ஆகவே, ஜனாதிபதி ராஜபக்ஷவின் நகர்வுகளை, அவர் மேற்கொள்ளப் போகும் நடவடிக் கைகளை சிறிது காலம் பொறுத்திருந்து பார்ப்பதென முடிவு செய்துள்ளோம்.''*

- இப்படி தலைவர் பிரபாகரன் தமது மாவீரர் தின உரையில் சுட்டிக் காட்டியிருந்தார்.

ஜனாதிபதி ராஜபக்ஷவின் நகர்வுகளை, அவர் மேற்கொண்ட நடவடிக்கைகளை சிறிது காலம் பொறுத்திருந்து பார்த்த பின்னர் புலிகள் தரப்பிலிருந்து வந்திருக்கும் அவதானிப்பாகவே மதியுரைஞர் பாலசிங்கத்தின் தற்போதைய கருத்துகளை நோக்க வேண்டியிருக்கின்றது.

தீவிரப் போக்குடைய வல்லூறு சக்திகளைப் பாதுகாப்புத் துறையில் பொறுப்பான பதவிகளில் அமர்த்தியமை, இணங்கியே வராத கடும்போக்குத் தனத்தை அமைதிப் பேச்சுகளில் வெளிப்படுத்தியமை, நோர்வே அனுசரணைப் பணிக்கு எதிராக விரோத மற்றும் சந்தேகப் போக்கை வெளிக்காட்டி நிற்கின்றமை, புலிகளுக்கு எதிராக சர்வதேச ரீதியில் மேற்கொண்ட வன்மப் பிரசாரச் செயற்பாடுகள் போன்ற ராஜபக்ஷ அரசின் நடவடிக்கைகளையும், நகர்வுகளையும் நன்கு கவனத்தில் எடுத்த பின்னரே இந்தக் கருத்துகளை பாலா வெளியிட்டிருக்கின்றார்.

பாலா கூறுவது போல இராணுவ மனப்போக்குப் பொறிக்குள் சிக்கியிருக்கும் 'மஹிந்த சிந்தனை' என்ற இறுக்கமான கருத்துலகுக்குள் தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு நீதி, நியாயமான தீர்வு கிட்டப் போவதில்லை. தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவுசெய்யும் மனப்பக்குவம் 'மஹிந்தசிந்தனை'க்கோ, அதனை முன்னெடுக்கும் ராஜபக்ஷவின் ஆட்சி நிர்வாகத்துக்கோ கிடையவே கிடையாது என்பதும் தெளிவாகி, உறுதியாகி வருகின்றது.

இவற்றை ஆராய்ந்து நோக்கும்போது -

இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காண்பதற்கு மஹிந்தவின் அரசுக்கு தமிழர் தரப்பு - விடுதலைப் புலிகள் - வழங்கிய குறுகியகால அவகாசத்தின் இறுதி அந்தத்தில் நின்றே மதியுரைஞர் பாலா இந்தக் கருத்துகளை முன்வைத்திருக்கிறார் என்று கருத வேண்டியுள்ளது.

புலிகள் வழங்கும் குறுகியகால அவகாசத்தை மஹிந்த அரசு சரிவரப் பயன்படுத்தாமல், புலிகளின் கோரிக்கையை நிராகரித்து, காலத்தை இழுத்தடித்து, கடும் போக்கைக் கடைப்பிடிக்குமானால் தமது சுய நிர்ணயப் போராட்டத்தை - தமது தாயகத்தில் தன்னாட்சியை நிறுவும் தேச சுதந்திரப் போராட்டத்தைத் தாங்கள் தீவிரப்படுத்துவார்கள் என கடந்த மாவீரர் தின உரையில் தலைவர் பிரபா எச்சரித்திருந்தார்.

நாடு பெரும் இனப்போருக்குள் மூழ்கும் ஆபத்து நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாக பாலசிங்கம் விடுத்திருக்கும் தற்போதைய அறிவிப்பை, தலைவர் பிரபா எச்சரித்துக் குறிப்பிட்ட அந்த நிலைக்கு கட்டியம் கூறும் விடயமாகவே கொள்ள வேண்டியிருக்கின்றது.

# கிராம அலுவலர்களுக்கு வழங்கப்படும் சகல கொடுப்பனவுகளும் அதிகரிப்பு

நாடு பூராவும் கடமையாற்றும் கிராம அலுவலர்களின் சகல கொடுப்பனவுகளும் இந்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் அதிகரிக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கம் உள்நாட்டலுவல்கள் அமைச்சரையும் நிதி அமைச்சின் செயலாளரையும் சந்தித்துப் பேச்சு நடத்தியதைத் தொடர்ந்து கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளை வழங்குவதற்குத் திறைசேரி அனுமதி வழங்கியுள்ளது.

சீருடைக்கான கொடுப்பனவு ஆயிரம் ரூபாவில் இருந்து 2ஆயிரத்து 500 ரூபாவாகவும் பிரயாணப்படி 200 ரூபாவில் இருந்து 500 ரூபாவாகவும் பிரிவுக்குள் வழங்கப்பட்ட போக்குவரத்துப் படி 75 ரூபாவிலிருந்து 200 ரூபாவாகவும் காகிதாதிகளுக்கான கொடுப்பனவு 700 ரூபாவிலிருந்து ஆயிரம் ரூபாவாகவும் காரியாலயக் கொடுப்பனவு நகரப் பகுதியில் 500 ரூபாவில் இருந்து 750 ரூபாவாகவும் நகரத்துக்கு வெளியில் 300 ரூபாவில் இருந்து 500 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன. (ஐ-175)

# கரணைக்கிழங்கிற்குச் சந்தைவாய்ப்பு பெற்றுத்தருமாறு விவசாயிகள் கோரிக்கை

அச்சுவேலி,ஏப்.24

குடாநாட்டில் கரணைக்கிழக்கு தற்போது அமோக விளைச்சல் கண்டு வருவதால் அதற்கான சந்தைப்படுத்தல் வாய்ப்பு வசதியை ஏற்படுத்தித் தருமாறு விவசாயிகள் யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் அச்சுவேலி, புன்னாலைக்கட்டுவன், ஈவினை, புத்தூர் நவக்கிரி, குப்பிளான் ஏழாலை, சுன்னாகம், உரும்பிராய், ஊரெழு பகுதிகளில் பெருமளவில் செய்கை பண்ணப்பட்ட கரணைக்கிழங்கு தற்சமயம் அறுவடை செய்யப்பட்டு சந்தைப் படுத்தமுடியாமல் தேங்கிய நிலையில் உள்ளது.

ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாசாலையில் விவசாயத் திணைக்களத்தால் அண்மையில் நடத்தப்பட்ட கண்காட்சியும் நடமாடும் சேவையும் நிகழ்வில் நடமாடும் சேவையின் போது விவசாயிகளால் சமர்ப்பிக்கப்பட்ட முன்னணிக் கோரிக்கையில் பிரதானமானது குடாநாட்டு விவசாய உற்பத்திகளைச் சந்தைப்படுத்துதல், அவற்றுக்கு விலைகளை நிர்ணயம் செய்தல் என்பதாகும்.

ஏனைய விவசாய உற்பத்திப் பொருள்களில் இருந்து மாறுபட்ட கரணைக்கிழங்கு தமிழ் மக்களின் குறிப்பிட்ட சில பிரதேசங்களில் மட்டும் உணவுத் தேவைக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

கரணைக்கிழங்குக்குச் சந்தை வாய்ப்பை ஏற்படுத்துவது தொடர்பாகக் கலந்துரையாடிய, மேலதிக அரச அதிபர் உடனடியாக சந்தைப்படுத்த வேண்டிய கரணைக்கிழங்கின் மொத்த அளவு, அதற்கான ஒரு கிலோவின் விலைப் பெறுமானம் என்பனவற்றை உடன் சமர்ப்பிக்குமாறும் அதனை வெளிமாவட்டங்களுக்கு அனுப்பி வைப்பது தொடர்பாக நடவடிக்கை எடுக்கலாம் எனவும் உறுதியளித்தார்.

கரணைக்கிழங்கு மார்கழி, தை, மாசி மாதங்களில் அறுவடை செய்யப்படுகின்றது. அறுவடை செய்யப்பட்டு ஆறு - ஏழு மாத காலத்துக்குள் விற்பனை செய்யப்படவேண்டும். இல்லாவிடில் மீண்டும் முளைத்து கிழங்கின் தன்மை முற்றாக மாறிவிடும். (ஐ-11)

# சாவகச்சேரி நகரசபையின் 'நகரணி' சஞ்சிகை வெளியீடு

தென்மராட்சி,ஏப்.24

சாவகச்சேரி நகரசபையினால் தயாரிக்கப்பட்ட 'நகரணி' என்னும் சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

'சஞ்சிகை' வெளியீட்டு வைபவம் கடந்த 21ஆம் திகதி நகரசபை மண்டபத்தில் செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது.

யுத்த அனர்த்தங்களினால் நகரசபை சந்தித்த இழப்புகள், சேதங்கள், அழிவுகளின் பின்னர் நகரை மீண்டும் புத்துயிர் பெறச் செய்வதற்கு இச்சபை மேற்கொண்ட முயற்சிகள், அவற்றின் முன்மொழிவுகள், செயற்பாட்டு முன்னேற்றங்கள் கிடைத்த இறுதிப்பலன்கள் ஆகியவற்றின் பொழிப்புகளை சகலரும் அறிந்துகொள்வதற்காக மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை காலாண்டு சஞ்சிகையாக இந்தச் சஞ்சிகை வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## உதயவாக்கு

*உண்மை, அழகு, அன்பு ஆகியவை எங்கு காணப்படுகின்றனவோ அங்கே இறைவன் தன்னை வெளிப்படுத்திக்கொள்கிறான்.*

*- ஆர்த்தர் பொரிட்ஸ்*

## நாளை

**சித்திரை 12**
**செவ்வாய்க்கிழமை**
**25.04.2006**
**திதி: துவாதசி**
**காலை : 07.58 வரை**
**நட்சத்திரம் : உத்தரட்டாதி**
**பின்னிரவு : 03.50 வரை**
**பிரதோஷ விரதம்**
**சுபநேரம் : 10.30 - 12.00**
**ராகுகாலம் : 03.00 - 04.30**

# ஜனாதிபதியின் நியமனங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பு

சுயாதீன ஆணைக்குழுக்களான பொதுச் சேவைகள் ஆணைக்குழு மற்றும் பொலீஸ் ஆணைக்குழு ஆகியவற்றிற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுப்பினர்களை நியமித்துள்ளமையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய கூறினார்.

கடந்த வியாழக்கிழமை எதிர்க்கட்சிக் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

அரசமைப்புக் கவுன்ஸில் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு வேண்டிய உறுப்பினர்களை நியமிக்கவேண்டும். இந்தச் சுயாதீன ஆணைக்குழுக்களுக்காகத் தெரிவு செய்யப்படுபவர்கள் தகைமை, அனுபவம் என்ற அடிப்படையிலேயே தெரிவுசெய்யப்படுவர். இவற்றையெல்லாம் விடுத்து - அரசமைப்புக் கவுன்ஸிலின் சட்டவிதிகளை மீறி - அரசின் விதிகளை மீறி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களை நியமித்திருக்கின்றமை கண்டிக்கத்தக்க செயலாகும்.


சுயாதீன ஆணைக்குழுக்கள் செயலிழந்து போயுள்ளமையினால் மக்கள் பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் இந்த நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்படுமானால் கட்சிகளை ஒன்று கூட்டி நாடாளுமன்றில் தகுந்த முடிவை எடுப்போம். இது குறித்து சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கும் கொண்டுவருவோம்.

ஐக்கிய தேசியக் கட்சியால் அமுல்படுத்தப்பட்ட 17ஆம் திருத்தச் சட்டத்துக்கு இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகள் ஆதரவு தெரிவித்தன. ஆனால், ஜனாதிபதியின் இந்த நிலைமை தொடருமானால், இந்த நாடுகளின் எதிர்ப்புக்குள்ளாக வேண்டியிருக்கும்.

ஜனாதிபதியின் இந்நிலைமை சர்வாதிகார முறைமைக்கு வித்திடுவதாக அமைகிறது. இதனை ஆட்சேபித்தே மக்கள் நீதிமன்றத்தை நாடியுள்ளனர்.

ஆகவே, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவற்றை உடனடியாக நிறுத்திவிட்டு அனைத்துக் கட்சிகளின் உதவியுடன் அரசமைப்பு கவுன்ஸிலின் உறுப்பினர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் - என்றார். (க)





கிளி/வலைப்பாடு றோ.க.த.கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டிகள் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது. பாடசாலை அதிபர் சு.செல்வரத்தினம் பாடசாலைக் கொடியை ஏற்றுவதையும் அருகில் உப அதிபர் சி.ஸ்ரீரஞ்சன் காணப்படுவதையும் படத்தில் காணலாம். (எ)(24)

# கிளிநொச்சி மாவட்டத்தில் சதுரங்க சம்மேளனம் அங்குரார்ப்பணம்

கிளிநொச்சி, ஏப்.24

கிளிநொச்சி மாவட்டத்தில் முதன்முதலாக சதுரங்கச் சம்மேளனம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை காலமும் சதுரங்கச் சம்மேளனம் அமைக்கப்படாமல் இருந்து வந்தது.

கடந்த திங்கட்கிழமை இந்தச் சம்மேளனம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

சுவிஸிலிருந்து வருகை தந்த சதுரங்க ஆட்டக்காரர்களான க.சிங்கம், ச.சிவாஜி ஆகியோரால் இந்த அங்குரார்ப்பண நிகழ்வு நடத்தப்பட்டது.

இந்த சதுரங்க சம்மேளனத்திற்குத் தலைவராக நி. சிவரூபனும் செயலாளராக எஸ். ஜெயராஜாவும் பொருளாளராக ச. கௌரீசனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் ஆலோசகர்களாக க. சிங்கம், ச.சிவாஜி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (எ-203)(18)

# வேலணைப் பிரதேச கரபந்தாட்டம் நயினாதீவு அண்ணா வி.க. சம்பியன்

வலி.வடக்கு, ஏப்.24

வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற கரபந்தாட்டப் போட்டியில் நயினாதீவு அண்ணா விளையாட்டுக்கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வேலணை துறையூர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் நயினாதீவு அண்ணா விளையாட்டுக்கழகமும் நயினாதீவு இஸ்லாமிய விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

இரண்டு நேர் செற்களில் முறையே 25:15, 27:25 என்ற புள்ளிகள் கணக்கில் அண்ணா விளையாட்டுக்கழகம் இஸ்லாமிய விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டு வேலணைப் பிரதேச சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. (எ-86)(18)

# யூனியன் கல்லூரி அணிகள் இருபோட்டிகளில் சம்பியன்

யாழ்ப்பாணம்,ஏப்.24

வலிகாமம் வலயமட்ட பாடசாலைகளுக்கு இடையேயான 15, 17, 19 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் யூனியன் கல்லூரி இரு பிரிவுகளில் சம்பயினாகியுள்ளது.

**15 வயதுப்பிரிவு**

முதலாம் இடம்: யூனியன் கல்லூரி, 2ஆம் இடம்: வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, 3ஆம் இடம்: இராமநாதன் மகளிர் கல்லூரி.

**17 வயதுப்பிரிவு**

முதலாம் இடம்: சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, 2ஆம் இடம்: யூனியன் கல்லூரி, 3ஆம் இடம்: வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.

**19 வயதுப்பிரிவு**

முதலாம் இடம்: யூனியன் கல்லூரி, 2ஆம் இடம்: உடுவில் மகளிர் கல்லூரி, 3ஆம் இடம்: இராமநாதன் மகளிர் கல்லூரி. (எ-190) (24)

# உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி திகதி குறிப்பிடாது ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.24

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களிடையே நடத்தவிருந்த விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் கிளிபேட் அன்ரனிப்பிள்ளை தெரிவித்தார். (எ-190) (24)

# மட்டுவிலில் நடந்த வலைப்பந்தாட்டம்

தென்மராட்சி,ஏப்.24

தென்மராட்சிப் பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கரபந்து, வலைப் பந்து ஆகிய போட்டிகளின் இறுதிப்போட்டிகள் அண்மையில் மட்டுவில் வளர்மதி வி.க. மைதானத்தில் நடைபெற்றன.

கரபந்தாட்டப் போட்டிகளில் மட்டுவில் மோகனதாஸ் வி.க. ஆண்கள் பிரிவும் கோவிலாக்கண்டி ஸ்ரீமகாவிஷ்ணு வி.க. பெண்கள் பிரிவும் -

வலைப்பந்தாட்டப் போட்டியில் சாவகச்சேரி புனித லிகோரியார் வி.க. அணியும் முதலிடத்தினைப் பெற்று சம்பியனாகின.

இந்தப் போட்டிகளில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக அணிகள் இரண்டாமிடங்களைப் பெற்றன. (எ-117)(24)

## யாழ். பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட

# உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி வெற்றி

யாழ்ப்பாணம்,ஏப்.24

யாழ். பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடைபெற்ற பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

அரியாலை காசிப்பிள்ளை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பாஷையூர் புனித அந் தோனியார் விளையாட்டுக்கழக அணி மோதி யது.

ஆட்டம் ஆரம்பமானது முதல் இரண்டு அணியினரும் எதுவித கோலினையும் அடிக்காததினால் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காகச் சமநிலை உடைப்பு வழங்கப்பட்டது. இதில் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோலினை அடித்து பாஷையூர் புனித அந்தோனியார் கழக அணியை வெற்றி கொண்டது.

பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த றொபேக்கா சிறந்த வீராங்கனையாகத் தெரிவுசெய்யப்பட்டார். (எ-190) (24)

# மட்டுவில் வளர்மதி முதலாம் இடம்

தென்மராட்சி,ஏப்.24

தென்மராட்சி பிரதேச விளையாட்டுக் கழகங்களிடையே நடத்தப்பட்ட எல்லே போட்டிகளில் ஆண், பெண் பிரிவுகளில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக அணிகள் முதலிடத்தினைப் பெற்றுச் சம்பியனாகின.

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டிகளில் ஆண்கள் பிரிவில் மட்டுவில் மோகனதாஸ் வி.க. அணியும் பெண்கள் பிரிவில் சாவகச்சேரி தென்னகத்தாரகை வி.க. அணியும் இரண்டாம் இடங்களைப் பெற்றன. (எ-117) (24)

# 13 வயதுப் பிரிவினரின் துடுப்பாட்டம்: சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றி

யாழ்ப்பாணம்,ஏப்.24

யாழ். மாவட்டப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்திய 13 வயதுப் பிரிவினருக்கான துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் கடந்த திங்கள் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றபோது இந்த ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணியினர் சகல விக்கெட்டுகளையும் இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றனர்.

எஸ்.யதீரிசன் 33 ஓட்டங்களையும் ஆர். எடின் 11 ஓட்டங்களையும் ஜீ.துசாந் 10 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சார்பில் ச.யோ.சஞ்சீவ்ராஜ் 7 ஓட்டங்களுக்கு மூன்று இலக்குகளையும் - யே. கிளிங்டன் 9 ஓட்டங்களுக்கு மூன்று இலக்குகளையும் ஆர்.யே.யெபரீசன் 18 ஓட்டங்களுக்கு மூன்று இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி, 9 விக்கெட்டினை இழந்து 124 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது.

ஆர்.யே.யெபரீசன் 45 ஓட்டங்களையும் ஜீ.யெகான் றெயிலஸ் 40 ஓட்டங்களையும் ச.யோ.சஞ்சீவ்ராஜ் 17 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் ரி.கோகுலன் 29 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டினையும் ஜீ. துசாந் 31 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

சிறந்த பந்து வீச்சாளராக யாழ். மத்திய கல்லூரி அணியைச்சேர்ந்த ரி.கோகுலன் தெரிவுசெய்யப்பட்டார். சிறந்த துடுப்பாட்ட வீரனாக சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியைச் சேர்ந்த ஆர்.யே.யெபரீசன் தெரிவுசெய்யப்பட்டார்.

சிறந்த களத்தடுப்பாளராக சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியைச் சேர்ந்த ஜீ. யொகான் றெயிலஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

போட்டித் தொடரின் சிறந்த பந்துவீச்சாளராக சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியைச் சேர்ந்த ஆர்.யே.யெபரீசன் தெரிவுசெய்யப்பட்டார்.

போட்டித் தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரனாக யூனியன் கல்லூரி அணியைச் சேர்ந்த கே.நகுலன் தெரிவுசெய்யப்பட்டார்.

ஆட்டநாயகனாக சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியைச் சேர்ந்த ச.யோ.சஞ்சீவ்ராஜ் தெரிவு செய்யப்பட்டார். (எ-190 )(24)




# துணுக்காய் பாடசாலையின் விளையாட்டுச் சாதனைகள்

பரந்தன்,ஏப்.24

முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற தடகள விளையாட்டுப்போட்டிகளில் துணுக்காய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிக வெற்றிகளைப் பெற்று முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இந்தப் போட்டிகள் கடந்த 4ஆம்,5ஆம் திகதிகளில் மாங்குளம் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

இந்தப் போட்டிகளில் துணுக்காய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை பெற்ற வெற்றிகளின் விவரம் வருமாறு:-

- ✱ 15 வயதின்கீழ் பெண்கள் - சி.பபிதா- உயரம் பாய்தல், நீளம் பாய்தல் - இரண்டிலும் இரண்டாம் இடம்.
- ✱ 15 வயதின்கீழ் பெண்கள் - சி.நிலானி - 100 மீற்றர் ஓட்டம் - மூன்றாமிடம்.
- ✱ 13 வயதுப் பிரிவு பெண்கள் - அஞ்சல் ஓட்டம் - இரண்டாம் இடம்.
- ✱ 17 வயதுப் பிரிவு ஆண்கள் - உ.சயந்தன் - 800 மீற்றர் ஓட்டம், 1,500 மீற்றர் ஓட்டம் இரண்டிலும் முதலிடம்.
- ✱ 17 வயதுப் பிரிவு பெண்கள் - ந.சிந்துஜா - 800 மீற்றர் ஓட்டம் - இரண்டாம் இடம்.
- ✱ 17 வயதுப் பிரிவு பெண்கள் - தி.வாசுகி - உயரம்பாய்தல் -மூன்றாம் இடம்.
- ✱ 19 வயதுப் பிரிவு ஆண்கள் - செ.செல்வகுமரன் - 5 ஆயிரம் மீற்றர் ஓட்டம் - இரண்டாம் இடம்.
- ✱ 19 வயதுப் பிரிவு ஆண்கள் - பா.கிருஷ்ணகுமணன் - ஈட்டி எறிதல் - மூன்றாமிடம்.

(எ-352-203)(24)






வலிகாமம் வடக்குப் பிரதேச செயலகமும் பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த பாரம்பரிய விளையாட்டுப்போட்டிகள் அண்மையில் பிரதேச செயலக வளாகத்தில் நடைபெற்றன. தயிர்முட்டி உடைப்பதற்கு வீரர் ஒருவர் தயாராவதையும் தயிர்முட்டி உடைக்கப்படுவதையும் கைக்கொட்டிச்சவாரி, போர்த்தேங்காய் அடித்தல் போன்ற காட்சிகளையும் படங்களில் காணலாம்.

# வலிகாமம் வடக்கில் மீளக்குடியமர இதுவரை 7 ஆயிரத்து 615 குடும்பங்கள் விருப்பம் தெரிவிப்பு

வலி.வடக்கு,ஏப்.24

அதியுயர் பாதுகாப்பு வலயமான வலி. வடக்கில் மீளக் குடியமர 7 ஆயிரத்து 615 குடும்பங்கள் விருப்பம் தெரிவித்துள்ளன.

வலி. வடக்கு மீள் குடியமர்வு தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் உள்ள வழக்கு ஒன்றில், குழுக்கள் குழுக்களாக மக்கள் மீளக் குடியமர ஏற்பாடு செய்யலாம் என்று ஆலோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து மீள்குடியமர விரும்புபவர்களின் விவரங்கள் கிராம சேவையாளர் மூலம் திரட்டப்பட்டன.

வன்னி, சாவகச்சேரி தவிர்ந்த ஏனைய பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் 7 ஆயிரத்து 615 குடும்பங்கள் மீளக் குடியமர விருப்பம் தெரிவித்துள்ளன.

வலி. வடக்கு பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் பி.இராஜகோபால் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் அந்தப் பிரதேச கிராம சேவையாளர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான அ.விநாயகமூர்த்தி, தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத் தலைவர் சி.சிவமகாராசா, மனித நேய அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் எஸ்.பரமநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வலி. வடக்கில் இருந்து 21ஆயிரத்து 847 குடும்பங்களைச் சேர்ந்த 91 ஆயிரத்து 394 பேர் இடம்பெயர்ந்தனர் என்றும் -

ஏனையோர் தமது பதிவுகளை எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர், பிரதேச செயலரிடம் மேற்கொள்ளலாம் என்றும் - கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது. (எ-3-86)

## மானிப்பாய் வடக்கில் அடிக்கடி மின் தடை

மானிப்பாய், ஏப்.24

மானிப்பாய் வடக்கில் அடிக்கடி மின் தடை ஏற்படுகிறது. குறிப்பாக வாரம்தோறும் வியாழக்கிழமைகளில் பல மணிநேர மின் தடையும், ஏனைய தினங்களில் இடை இடையேயும் மின்தடை ஏற்படுவதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இதனால் பொதுமக்களும் மாணவர்களும் பல்வேறு அசௌகரியங்களுக்கு இலக்காவதாகவும்- கூறப்பட்டது.

மின்தடையைப் பயன்படுத்தி வீடுகள், கடைகளில் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன என்றும்- பொதுமக்கள் தெரிவித்தனர். (எ-90)

## கலை, இலக்கியப் போட்டி முடிவுகள் வெளியாகின

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளினால் நடத்தப்பட்ட கலை, இலக்கியப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படி பிரதேசங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள், தீவகக் கல்விவலய அதிகாரிகள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்ட இந்தப் போட்டிகளில் 220 மாணவர்களும், 20 ஆசிரியர்களும், 15 அரச ஊழியர்களும் பங்கு கொண்டு தமது ஆக்கங்களைச் சமர்ப்பித்திருந்தனர் என்று ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் பகுதிக்கான பண்பாட்டலுவலர் தெரிவித்தார். பிரதேசமட்டப் போட்டிகளில் முதலிடம் பெற்றவர்களின் ஆக்கங்கள் மாவட்ட மட்டப் போட்டிகளுக்காக யாழ்மாவட்ட செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் - போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் பெயர்ப்பட்டியல் கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றும்- அவர் மேலும் கூறினார். (எ)(39)



அராலி இந்துக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சண்முகசுந்தரம் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். வலிகாமம் கல்வி வலய முன்னாள் கணித ஆசிரிய ஆலோசகர் க.நடராஜா, சங்கானைப்பகுதி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சிவகணேஸ், கல்லூரி அதிபர் வே.மோகனநாதன் ஆகியோரும் மற்றும் பிரமுகர்களும் படத்தில் உள்ளனர். (எ-69)

# அராலி ஊரத்தியில் வசிக்கும் குடும்பங்களுக்கு காணி பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை இல்லை

## மக்களும், சமூக அமைப்புகளும் விசனம் தெரிவிப்பு

வலி.மேற்கு,ஏப்.24

அராலி ஊரத்தியில் வலி.மேற்குப் பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் சுமார் 50 வருடங்களுக்கு மேலாகக் குடியமர்ந்திருக்கும் 20 குடுங்பங்களுக்கும் காணியினைப் பகிர்ந்தளிப்பதற்கு குறிப்பிட்ட பிரதேச சபையினர் இதுவரை உரிய நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்களும் மற்றும் சமூகமட்ட அமைப்புகளும் விசனம் தெரிவித்துள்ளன.

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குச் சொந்தமான இந்தக் காணியினை சம்பந்தப்பட்ட 20 குடும்பங்களுக்கும் வழங்குவதற்குரிய நடவடிக்கையினை எடுக்குமாறு வலி. மேற்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் பல தடவைகள் தொடர்புடைய அதிகாரிகளிடம் தொடர்புகொண்டும் பயன் எதுவும் கிடைக்கவில்லை என்றும் - தெரியவருகின்றது.

வருமானம் குறைந்த வசதிகளற்ற இந்தக் குடும்பங்கள் காணி சொந்தமாக இல்லாத காரணத்தினால் தமது அடிப்படை வசதிகளை குறிப்பாக தற்போதைய வீடமைப்பு மற்றும் மலசலகூடம் அமைத்தல் போன்ற திட்டங்களைக் கூடப் பெறமுடியாமல் திண்டாடுகின்றனர் என்றும் - தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் காணியைப் பகிர்ந்தளிப்பது தொடர்பாக வலி.மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் பல தடவைகள் பிரஸ்தாபிக்கப்பட்டது.

வலிகாமம் மேற்கு பிரதேச சபையினர் இத் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை துரிதகதியில் மேற்கொள்ள வேண்டுமென்று அராலியிலுள்ள சமூகமட்ட அமைப்புகளும் பாதிக்கப்பட்ட மக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-175)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# வலிகாமம் தென்மேற்கில் பாவனையாளர் ஒருங்கமைப்புக் குழுவின் பணிகள் ஆரம்பம்

வலி.தென்மேற்கு,ஏப்.24

அண்மையில் புதிதாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்ட வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவுக்கான பாவனையாளர் ஒருங்கமைப்புக் குழு தற்போது செயற்பட ஆரம்பித்துள்ளதாகவும் -

மேற்படி பிரிவைச் சேர்ந்த பாவனையாளராகிய பொதுமக்கள் தங்கள் முறைப்பாடுகளை இந்தக் குழுவுக்கு எழுத்துமூலம் சமர்ப்பிக்கமுடியும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

குழுவின் தலைவரும், மாதகல் விவசாயிகள் சம்மேளனத் தலைவருமான வி.சிற்றம்பலம் இத்தகவலைத் தெரிவித்தார்.

கடைகளிலும் வர்த்தக நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களிலும் பொருள்களை நிறைகுறைத்து விற்பனை செய்தல் -

கடைகளில் வைக்கப்பட்டிருக்கும் விலைப் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கும் விலையிலும் பார்க்க அதிகரித்த விலையில் பொருள்களை விற்பனை செய்தல் -

தரம் குறைந்த பாவனைக்குதவாத நிலையிலுள்ள பொருள்களை விற்பனை செய்தல் ஆகியன பற்றி இந்தக் குழுவிற்கு எழுத்து மூலம் புகார்களை அனுப்பிவைக்கலாம் என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி முறைப்பாடுகளை 'செயலாளர், பாவனையாளர் ஒருங்கிணைப்புக் குழு, வலி. தென்மேற்கு பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும் என்றும் கூறப்பட்டது.

நவாலி தெற்கைச் சேர்ந்த யெ.பெ.அருமைநாயகம் இந்தக் குழுவின் செயலாளராகப் பணியாற்றி வருகின்றார். (எ-135)

# வீடமைப்புக்கு உள்ளூர் மூலப்பொருள்களை இலகுவாகப் பெறுவது குறித்து ஆலோசனை

## செயலகத்தில் நடந்த கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், ஏப்.24

உள்ளூர் மூலப்பொருள்களை இலகுவாகப் பெற்று வீட்டுத் திட்டங்களுக்கு பயன்படுத்துவது குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்படுகின்றது.

கடந்த 8 ஆம் திகதி யாழ். செயலகத்தில் நடைபெற்ற வடக்கு- கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் வள ஆளணியினருக்கான பயிற்றுநரைப் பயிற்றுவிக்கும் பயிற்சித்திட்டத்தின் போதே இந்த ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர் நிர்மாணத்திட்டத்தின் யாழ். மாவட்டத்திற்கான பிரதித் திட்டப் பணிப்பாளர் வே.சாம்பசிவம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மேலும் பல திட்டங்கள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் வீடுகள் புனர்நிர்மாணத்திட்டத்தின் மூலம் கிடைத்த அனுபவங்களைக் கொண்டு இந்த ஆண்டின் வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கு வழிகாட்டுதல், பயனாளிகள், கிராமங்கள் தெரிவு, அத்திட்டத்தின் பயனாளிகளுக்கு ஏற்படக்கூடிய காணிப் பிரச்சினைகள், வங்கிகளின் வீடமைப்புக் கொடுப்பனவு தொடர்பாக சம்பந்தப்படும் வங்கிக் கிளைகளின் நிலைப்பாடுகள் என்பவை தொடர்பாகக் கிடைக்கும் சகல முறைப்பாடுகளும் -

பிரதேச செயலர் பிரிவுகள், உதவி அரச அதிபர் பிரிவுகள் ஆகிய மட்டங்களில் ஆவணப்படுத்தப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுப்பது என்றும்- இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வீடமைப்பு உதவி பெறுவதற்குத் தகைமைகள் இருந்தும் தாம் தெரிவு செய்யப்படவில்லை எனக் கருதும் மக்களின் நியாயங்கள், கோரிக்கைகள் என்பன எழுத்தில் பெறப்பட்டு ஆவணப்படுத்தப்படவுள்ளன.

இந்நிகழ்வில் யாழ்.அரச அதிபர் கே. கணேஸ், யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, திட்டத்தின் தகவல், கல்வி தொடர்பாடல் நிபுணர் எஸ்.வன்னியசிங்கம், பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்கள், புனர்வாழ்வுக் குழுக்களின் பிரதிநிதிகள், யாழ். மாவட்ட முகாமைத்துவப் பிரிவின் உத்தியோகத்தர்கள், ஆலோசகர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-202)



'சீடா' நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட சிறுவர் மகிழ்வகம் கடந்த புதன்கிழமை யாழ். ஆஸ்பத்திரி வீதியில் - ஆசீர்வாதம் ஒழுங்கையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. இதன்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் மங்கள விளக்கு ஏற்றுவதை முதலாவது படத்திலும் -

நாவற்குழி சிறுவர் கழகத்தைச் சேர்ந்த ஜே.பிரசன்னியா நாடாவெட்டி சிறுவர் மகிழ்வகத்தை திறந்துவைப்பதினை இரண்டாவது படத்திலும் -

குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் சிதம்பரநாதன் உரையாற்றுவதை மூன்றாவது படத்திலும் - நிகழ்வில் கலந்துகொண்ட சிறுவர்கள், உத்தியோகத்தர்களை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

*(படங்கள்:- தமிழினியன்)*

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 29-05-1928

மறைவு 09-05-2002

## அமரர் வ.இ.நடனசிகாமணி

(மணி அண்ணா).

(கொரனேசன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்,
நியூ சிட்டி ஜுவலர்ஸ் பங்குதாரர், திருகோணமலை)

திதி: 24-04-2006

ஆண்டுகள் நான்கு ஆயிற்றோ ஐயா உமைப் பிரிந்து
உங்கள் நிழலில் வாழ்ந்த வாழ்வு இனிவரும் காலங்களில் வருமா?
எங்கள் மனங்களில் ஆறிடுமோ ஐயா உமைப் பிரிந்த துன்பம்
உங்கள் திருமுகத்தை இனி எப்போது காண்போமையா?

அம்மன் கோயிலடி,
வல்வெட்டித்துறை.

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், நட்டப்பிள்ளை,
கோரனேசன் ஸ்ரோர்ஸ், நியூ சிட்டி ஊழியர்கள் - திருமலை.

(49674) (24-11-45)

# சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## வாக்காளர் இடாப்பு மூடுதல்

31.03.2006இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான வாக்காளர் இடாப்பு மூடப்பட்டுள்ளது. இந்த இடாப்புக்கள் அங்கத்தவர்களின் ஆட்சேபனைகளைப் பெறுவதற்காக 24.04.2006 தொடக்கம் 10.05.2006 வரை கிளைகளில் வைக்கப்பட்டுள்ளது. அவற்றைப் பின்வரும் எமது விற்பனை நிலையங்களில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். விவரம் வருமாறு:-

| கிளை / இலக்கமும் கிளையும் | காட்சிப்படுத்தும் விற்பனை நிலையங்களும் | இலக்கமும் |
|---|---|---|
| 03 சித்தன்கேணி | சித்தன்கேணி | 03 |
| 04 பனிப்புலம் | பனிப்புலம் | 04 |
| 05 பண்ணாகம் | பண்ணாகம். | 05 |
| 06 சுழிபுரம் வடகிழக்கு | சுழிபுரம் வடகிழக்கு | 06 |
| 07 சுழிபுரம் மத்தி | சுழிபுரம் மத்தி | 07 |
| 08 சுழிபுரம் குகன் | சுழிபுரம் குகன் | 08 |
| 09 சுழிபுரம் மேற்கு | சுழிபுரம் மேற்கு | 09 |
| 10 பொன்னாலை | தொல்புரம் | 12 |
| 11 மூளாய் | மூளாய் | 11 |
| 12 தொல்புரம் | தொல்புரம் | 12 |
| 12 ஏ நெல்லியான் | தொல்புரம் | 12 |
| 14 தொல். மத்தி | தொல்.மத்தி | 14 |
| 15 தொல். கிழக்கு | தொல்.கிழக்கு | 15 |
| 16 வட்டு. பிளவத்தை | வட்டு. பிளவத்தை | 16 |
| 17 வட்டு.சிவன் | வட்டு.சிவன் | 17 |
| 18 வட்டு.கிழக்கு | வட்டு.கிழக்கு | 18 |
| 19 வட்டு.மூளாய் | வட்டு. மூளாய் | 19 |
| 20 வட்டு. மேற்கு | வட்டு. மேற்கு | 20 |
| 21 வட்டுக்கோட்டை | வட்டுக்கோட்டை | 21 |
| 22 அராலி மேற்கு வடக்கு | அராலி மேற்கு வடக்கு | 22 |
| 23 அராலி வடக்கு | அராலி வடக்கு | 23 |
| 24 அராலி தெற்கு கிழக்கு | அராலி தெற்கு கிழக்கு | 24 |
| 25 அராலி விக்னேஸ்வரா | அராலி விக்னேஸ்வரா | 25 |
| 26 அராலி ஐயனார் | அராலி ஐயனார் | 26 |
| 27 செட்டியாமடம் | செட்டியாமடம் | 27 |
| 28 துணவி | சங்கரத்தை துணவி | 29 |
| 29 சங்கரத்தை துணவி | சங்கரத்தை துணவி | 29 |
| 30 சங்கானை கிழக்கு மத்தி | சங்கானை கிழக்கு மத்தி | 30 |
| 31 நிற்சாமம் | நிற்சாமம் | 31 |
| 32 சிலம்புப்புளியடி | சிலம்புப்புளியடி | 32 |
| 33 சங்கானை கிழக்கு | சிலம்புப்புளியடி | 33 |
| 34 தொல்.மேற்கு | தொல்.மேற்கு | 34 |

ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் 10.05.2006 இற்கு முன்னர் சங்கச் செயலாளருக்கு எழுத்துமூலம் தெரியப்படுத்தி வாக்காளர் இடாப்பைப் பூர்த்தி செய்ய உதவும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

செயலாளர்,
சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

(49071) (24-11-45)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

## அமரர் செல்லையா வடிவேலு



தோற்றம்
25.10.1930
மறைவு
25.03.2006

25.03.2006 அன்று அமரத்துவம் அடைந்த எமது குலவிளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (24.04.2006) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொண்டு அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மட்டுவில் வடக்கு,
பொற்கொல்லர் வீதி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்,
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(49714) (39-11-24)

# கொடிவாரம் அனுஷ்டிப்பு

யாழ். மாவட்ட கலை, கலாசாரப் பேரவை கொடிவாரம் ஒன்றை நடத்தவுள்ளது. எதிர்வரும் முதலாம் திகதிமுதல் 7ஆம் திகதிவரையுள்ள காலப்பகுதியில் இந்தக் கொடிவாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. மாவட்ட கலை, கலாசாரப் பேரவையின் செயற்பாடுகளுக்கு ஊக்குதல் அளிக்கும் வகையில் இந்தக் கொடிவாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டது.

பாடசாலைகள், அரச அலுவலகங்கள், பொது அமைப்புகள் இந்தக் கொடிவாரத்துக்குப் பூரண ஆதரவளிக்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் இந்தக் கொடிவாரத்தின் போது கொடிகளை விநியோகிப்பது மற்றும் நிதி சேகரிப்பது தொடர்பான பணிகளில் ஈடுபடும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)(24)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

773 சிவப்பு

இடபம்

21-04-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 5124360-5136125

வெற்றி இலக்கங்கள் 06 13 15 54

ஜக்பொட் பரிசு ரூபா 10,00,000/- வெல்லப்படவில்லை

மொத்தப் பரிசுத் தொகை ரூபா 59,83,160/-
தொடர் இல. 4225205 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கெட்டுக்கள் 2006 ஏப்ரல் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 2,55,753 | 10/- | 25,57,530/- |
| 2 இலக்கங்கள் | 23,543 | 20/- | 4,70,860/- |
| 1 இல+லக்கினம் | 23,304 | 30/- | 6,99,120/- |
| 2 இல+லக்கினம் | 2,139 | 100/- | 2,13,900/- |
| 3 இலக்கங்கள் | 619 | 500/- | 3,09,500/- |
| 3 இல+லக்கினம் | 56 | 5,000/- | 2,80,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 1,00,000/- | 4,00,000/- |
| 4 இல+லக்கினம் | - | 10,00,000/- | - |
| மொத்தம் | | | 49,30,910/- |
| முச்சக்கர வண்டிகள் | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,05,423 | | 59,83,160/- |

இந்த செவ்வாய்க்கிழமை ரூபா 15,71,450/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 05 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 5127194-5-57 |
| இரத்தினபுரி | 5130142-6-63 |
| மட்டக்களப்பு | 5126043-2-71 |
| அனுராதபுரம் | 5126618-0-47 |
| காலி | 5133506-9-74 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி, கொழும்பு-03

# காசநோயால் பீடிக்கப்படுவோர் தொகை வன்னிப் பெருநிலப்பரப்பில் அதிகரிப்பு

## அதனைக் கட்டுப்படுத்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு

பரந்தன்,ஏப்.24

வன்னிப் பெருநிலப்பரப்பில் காசநோய்த் தாக்கத்திற்கு உள்ளாவோரின் தொகை அதிகரித்து வருவதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட காசநோய் மருத்துவ ஆய்வுப் பரிசோதனையின் மூலம் வன்னிப் பெருநிலப்பரப்பில் 59 பேர் காசநோயால் பீடிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம்வரை வன்னிப் பெருநிலப்பரப்பில் 20 இற்கும் மேற்பட்டோர் காசநோய்த் தாக்கத்திற்குள்ளாகியுள்ளதாக தமிழீழ சுகாதார சேவையினரின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

காசநோய்த் தாக்கம் அதிகரித்து வருவதையடுத்து வன்னியில் இதுதொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஐ.ஓ.எம். நிறுவனத்தின் நிதியுதவியுடன் தமிழீழ சுகாதார சேவையினர் இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்திவருகின்றனர். இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை மேலும் துரிதப்படுத்தி காசநோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளைத் தற்போது சுகாதார சேவையினர் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்துடன் இணைந்து மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (8-352) (24)

## ஜெயபுரம் அ.த.க. பாடசாலை மகாவித்தியாலயமாகத் தரமுயர்வு

பூநகரி,ஏப்.23

கிளிநொச்சி ஜெயபுரம் அ.த.க. பாடசாலை அண்மையில் மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து இதுவரை காலமும் ஜி.சீ.ஈ. சாதாரணதரத்துடன் இயங்கிவந்த இப்பாடசாலையில் இவ்வாண்டு முதல் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புகளை ஆரம்பிப்பதற்கான அனுமதியை மாகாணக் அமைச்சு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை ஊடாக கடந்த மார்ச் மாதம் வழங்கியுள்ளதாகப் பாடசாலை முதல்வர் திருமதி ஸ்ரீ.முருகசோதி தெரிவித்தார். (8-403) (24)

## குஞ்சுப்பரந்தன் உபதபாலகத்துக்கு நிரந்தரக் கட்டடம் இல்லை

பூநகரி,ஏப்.24

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட குஞ்சுப்பரந்தன் உபதபாலகம் நிரந்தரக் கட்டடம் இன்றி இயங்கிவருகின்றது. இதனால் தமது தேவைகளை அப்பகுதி மக்கள் உடன் நிறைவு செய்யமுடியாதுள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

1996ஆம் ஆண்டு கிளிநொச்சியில் நடந்த 'சப் ஜெய' படை நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மேற்படி உபதபாலகம் 2003ஆம் ஆண்டு மீண்டும் குஞ்சுப்பரந்தன் பகுதியில் இயங்க ஆரம்பித்தது. 3 ஆண்டுகள் நிறைவடைந்தபோதும் இதுவரை நிரந்தரக் கட்டடம் அமைக்கும் பணி எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை.

இதனால் கிராம மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, உரிய தரப்பினர் இவ்விடயத்தில் அக்கறை கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு இக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-403) (24)

## ஓர் ஆசிரியருடன் இயங்கிவரும் மன்னார் சாந்தபுரம் பாடசாலை

பரந்தன்,ஏப்.24

மன்னார் மாவட்டத்திலுள்ள மன்னார் சாந்தபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக மாணவர்களின் பெற்றோர் புகார் தெரிவிக்கின்றனர்.

இப்பாடசாலையில் நீண்டகாலமாக ஆசிரியர் பற்றாக்குறை உள்ளதாகவும் ஆயினும், இதுதொடர்பான உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இப்பாடசாலையில் நீண்டகாலமாகப் பாடசாலை அதிபருடன் ஓர் ஆசிரியர் மட்டுமே கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொண்டு வருகிறார். சாந்தபுரம் கிராமத்தில் 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இக்குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் அனைவரும் இந்தப் பாடசாலையிலேயே கல்வி பயில்கின்றனர்.

பாடசாலை அதிபருடனும் ஓர் ஆசிரியருடனும் இயங்கிவரும் இப்பாடசாலைக்கு ஆசிரியர்களை நியமித்து மாணவர்கள் சிறந்த முறையில் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கைகளைச் சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்ளவேண்டும் எனவும் பெற்றோர் கோரியுள்ளனர். (8-352) (24)

## துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 322 வீடுகள் அமைக்க நடவடிக்கை

பரந்தன்,ஏப்.24

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் இவ்வாண்டுக்கான வீடமைப்புத் திட்டங்களூடாக மக்களுக்கு 322 வீடுகள் நிர்மாணித்துக்கொள்ளப்படவுள்ளன.

இதன்படி வடக்கு - கிழக்கு சமுதாய அபிவிருத்தித் திட்டத்தால் உயிலங்குளத்தில் 15 வீடுகளும் நமனங்குளத்தில் 60 வீடுகளும் அமைக்கப்படவுள்ளன.

வடக்கு - கிழக்கு வீடமைப்புப் புனரமைப்பு திட்டத்தால் (நேர்ப்) அமைதிபுரம், அனஞ்சியன்குளம், கல்விளான், பழையமுறிகண்டி, ஆலங்குளம் ஆகிய கிராமங்களில் 105 வீடுகளும் கியூடெக் நிறுவனத்தால் ஐயங்கன்குளத்தில் 125 வீடுகளும் ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தால் (யு.என்.டி.பி.) கோட்டைகட்டியகுளத்தில் 17 வீடுகளும் அமைக்கப்படவுள்ளன. இவ்வீடமைப்பிற்கான ஆரம்பகட்ட வேலைத்திட்டங்கள் உரிய நிறுவனங்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (8-322) (24)




## முல்லைத்தீவில் அன்னை பூபதியின் 18ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு

அன்னை பூபதியின் 18ஆம் ஆண்டு நினைவின் இறுதிநாள் நிகழ்வுகள் கடந்த 19ஆம் திகதி தமிழர் தாயகமெங்கும் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்திற்கான பிரதான நிகழ்வு முல்லைநகரில் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியைத் தமிழீழ கடற்படையின் முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மா.ரங்கன் ஏற்றினார்.

அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரை தமிழீழ கடற்படையின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூரணி ஏற்றினார். மலர்மாலையை முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் அ.மரியராசா அணிவித்தார்.

தொடர்ந்து மலர் வணக்கத்தை முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் க.பார்த்தீபன் ஆரம்பித்துவைத்தார். நினைவுரைகளை கரைதுறைப்பற்று விசேட ஆணையாளர் இ.கிருஸ்ணபிள்ளை, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் பணிமனை நிர்வாக அலுவலர் ம.காசிப்பிள்ளை, தமிழீழ கடற்படையின் முல்லைநகரத் தளபதி தினேஸ் ஆகியோர் நிகழ்த்தினர். (8) (24)

## கிளிநொச்சியில் மூன்று நாள் நூலகப் பயிற்சித் திட்டம்

கிளிநொச்சி,ஏப்.24

வடக்கு - கிழக்கு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் ஏற்பாட்டில் மூன்று நாள் நூலகப் பயிற்சித் திட்டத்தின் தொடக்கநாள் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடனும் சிறுவர் பாதுகாப்பு நிறுவன நிதிப் பங்களிப்புடனும் இந்நிகழ்வு நடத்தப்பட்டது.

கிளிநொச்சி கனகபுரம் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையக் கேட்போர் கூடத்தில் முற்பகல் 9 மணிக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆரம்பப் பிரிவு இணைப்பாளர் லோ.ரேணுகா தலைமையில் இந்த நிகழ்வு ஆரம்பமானது.

மங்கள விளக்கு ஏற்பட்டதையடுத்து தமிழீழத் தேசியக் கொடி, தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடி, முன்பள்ளிக்கல்வி மேம்பாட்டுக்கொடி ஆகியன ஏற்றிவைக்கப்பட்டன.

தலைமையுரையையடுத்து தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட சிறுவர் பாதுகாப்பு நிதிய நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர், கொழும்பு சிறுவர் பாதுகாப்பு நூலகச் செயற்பாட்டுப் பணிப்பாளர், சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் ஆலோசகரும் மொழிபெயர்ப்பாளருமான சுப்பிரமணியம், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர், கொழும்பு தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதி, வடக்கு - கிழக்கு முன்பள்ளிகளின் கண்காணிப்பாளர் மோ.நிலா ஆகியோர் கருத்துரைகளை நிகழ்த்தினர்.

இப்பயிற்சித் திட்டமானது மாணவர்களுக்கு வாசிப்புப் பழக்கமுறைமையை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு பயிற்சியளிக்கப்பட்டு வருவதோடு, முதற்கட்டமாக 50 நூலகங்கள் அமைத்து பயிற்றுவிக்கப்பட்ட 30 பயனாளிகள் மூலம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (8)(24)

## தர்மபுரம் ம.வியில் விளையாட்டு முற்றம் திறந்து வைப்பு

பரந்தன்,ஏப்.24

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தருமபுரம் மகாவித்தியாலயத்தில் விளையாட்டு முற்றம் ஒன்று அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. தர்மபுரம் மகாவித்தியாலய சாரண ஆசியர்களும் மாணவர்களும் இணைந்து இந்தச் சிறுவர் விளையாட்டு முற்றத்தை அமைத்துள்ளனர்.

விளையாட்டு முற்றத்தை அமைத்த ஆசிரியர்களும் மாணவர்களும் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (8-352) (24)

## புலமைப்பரிசில் பரீட்சையில் கூடுதல் புள்ளிபெற்ற மாணவர் கௌரவிப்பு

பரந்தன்,ஏப்.24

கடந்த வருடம் நடைபெற்ற ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வு கடந்த 6ஆம் திகதி மாங்குளம் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட ஒட்டுசுட்டான் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஜெயபாலன், தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செ.முகுந்தன், நிதித்துறை வணிக ஒன்றியத் தலைவர் வெற்றியரசன், தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள்.

இதனைத் தொடர்ந்து பரிசில் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு தமிழீழ வைப்பகத்தின் 'அமுதம்' கணக்கில் 500 ரூபா வைப்பிலிடப்பட்ட வங்கிப் புத்தகங்கள் மற்றும் சான்றிதழ்கள் என்பன வழங்கப்பட்டன. (8-352) (24)



புதுக்குடியிருப்பு மாணவர் அமைப்பால் நடத்தப்பட்ட கணனிப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி நெறியை முடித்த மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவம் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் பொதுச்சுடர் ஏற்றுவதையும் தமிழீழ அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் தமிழீழ தேசியக்கொடி ஏற்றுவதையும் [illegible]சியக் கொடிக்கு மரியாதை செலுத்தப்படுவதையும் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்கப்[illegible]டு

(படங்கள்: புதுக்குடியிருப்புச் செய்தியாளர்)

## நயினாதீவில் திடீர் பரிசோதனை காலாவதியான பொருள்கள் சிக்கின

யாழ்ப்பாணம், ஏப்.24

நயினாதீவில் உள்ள வர்த்தக நிலையங்களில் கடந்த வாரம் நடத்தப்பட்ட திடீர் பரிசோதனையின் போது பெரும் தொகையான காலாவதியான பொருள்கள் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. நயினாதீவு சுகாதாரப் பரிசோதகர் க. ஜெய்கணேஷ், நெடுந்தீவு சுகாதாரப் பரிசோதகர் எஸ். தயாளன் மற்றும் வேலணை பிரதேசசபையின் நயினாதீவு உப அலுவலக அதிகாரிகள் இந்தத் திடீர் சோதனையில் ஈடுபட்டனர்.

மேற்படி திடீர் சோதனை குறித்து பிரதேச சுகாதாரப் பரிசோதகர் விடுத்த செய்திக் குறிப்பில்:

நயினாதீவில் இயங்கி வரும் உணவு கையாளும் நியைங்களான பலசரக்குக்கடைகள், தேநீர் கடைகள், வெதுப்பகங்கள், பல.நோ.கூட்டுறவு சங்கக்கிளைகள் போன்ற அனைத்து நிலையங்களிலும் கடந்த 18, 19 ஆம் திகதிகளில் திடீர் சோதனை மேற் கொண்டனர்.

இந்த திடீர் சோதனையின் போது காலாவதியான உணவு பொருள்கள், குளிர்பானங்கள், பிஸ்கட்டுக்கள், உப்பு பைக்கட்டுக்கள் போன்ற பெருந்தொகையான பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட பொருள்களின் பெறுமதி ரூபா 25 ஆயிரத்துக்கும் அதிகம் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட பொருள்கள் நயினாதீவில் உள்ள பிரதேசசபையின் உப அலுவலகம் முன்பாக அழிக்கப்பட்டன. (எ)

## வெள்ளாம் போக்கட்டியில் பொது மண்டபம் நிர்மாணிப்பு

சாவகச்சேரி,ஏப்.24

வெள்ளாம் போக்கட்டி கிராம சேவையாளர் பிரிவில் நியாப் திட்டத்தின் கீழ் பொது நோக்கு மண்டபம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி பொதுநோக்கு மண்டபம் நிர்மாணிப்பதற்கான காணியை இந்தப் பகுதியைச் சேர்ந்த திருமதி தம்பிராசா நாகம்மா அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

வெள்ளாம் போக்கட்டி கிராமசேவையாளர் பொ. லோகேந்திரன் மற்றும் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கு அமைய இந்தக் காணி அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

அன்பளிப்புச் செய்யப்பட்ட 3 பரப்புக் காணியில் 2 பரப்புக் காணி பொது நோக்கு மண்டபம் அமைக்கவும், மிகுதி ஒரு பரப்புக்காணி பொதுசன நூலகம் அமைக்கவும் பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-31)


ஓம்
ஸ்ரீராம ஜெயம்



யாழ்ப்பாணம் - வண்ணை
ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
ஏகாதசி உற்சவம்- 24.04.2006
நிகழும் விய வருடம் சித்திரை மாதம் 11 ஆம் திகதி பி.ப. 5 மணிக்கு ஏகாதசி உற்சவம் நடைபெறும். அடியார்கள் இவ்வுற்சவத்தில் பங்கு பற்றி ஸ்ரீமத் நாராயணன் அருள் பெற்று ஸ்ரீமகாலக்ஷ்மி விலாச சம்பன்னராக வாழ்வீர்களாக.
ஆதீன மகாசபை.

**வைத்தியம்**
செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, மகப்பேற்றின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.
வேலணை வைத்திய கலாநிதி
சி.இராசரத்தினம்
121,2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்:222 2459

AIMS
Your Training Partner
ACADEMY OF INFORMATION MANAGEMENT & SYSTEM STUDIES
Aim 01: Microsoft Office
Introduction,
Word, Excel, Access, PowerPoint.
Morning& Evening Batches
Morning : 9.30 am
Evening : 3.30 pm
இன்று ஆரம்பம்
Fast Track
1500/- மட்டும்
Introduction, Generation & Types, Components, Assembling, Basic DOS Commands, O/S Installation, Setup & Configuration.
Aim 02: Computer Hardware
10 நாட்கள் மட்டும்
Center for FOSS & LAMP
Director AIMS
#118, பலாலி வீதி,
தபால் பெட்டிச் சந்தி அருகில்,
திருநெல்வேலி


## மூன்றாம் வருட நினைவுகள்



பிறப்பு 20 - 05 - 1927
இறப்பு 24 - 04 - 2003

### அமரர் தொம்மை பிலிப்பு

ஆண்டுகள் மூன்று ஆனதுவோ
ஆறவில்லை எம் துயரம்
அவனியில் எம்மை ஆளாக்கி
ஆறுதல் கூறும் அன்பு நிறை பப்பாவே
ஆறுதல் இன்றித் தவிக்கின்றோம்
நித்தமும் உங்கள் நினைவில்
நெஞ்சுருகி வாழ்கின்றோம் -நின்
ஆன்மா சாந்தி பெற இறையருள் வேண்டுகின்றோம்

கச்சாய்,
கொடிகாமம்.

நீங்கா நினைவில்
குடும்பத்தினர்.

The President and Members of the Executive Committee of the

**JAFFNA SCIENCE ASSOCIATION**

have pleasure in inviting

**ALL WELL WISHERS**

to the Presidential Address

**"RESEARCH AND IDENTIFYING RESEARCH PROBLEMS"**

By

**Prof. K. Kandasamy B.Sc.(Ceylon), Ph.D(Keele,UK)**

on 28th April, 2006, Friday at 2.00p.m.
at Kailasapathy Auditorium,
University of Jaffna.

ALL ARE WELCOME.


# வெளிவந்துவிட்டது

பல்கலைக்கழக உளவியல் கற்கை மாணவர், B.Ed(NIE), Dip in Te, Dip in Ed,ஆசிரிய கலாசாலை மாணவர் MA (Teacher Ed), M.Ed, ஆசிரியர், அதிபர், கல்வியியலாள்ர் ஆர்வலர்களுக்கு உதவும் புதிய ஆக்கத்தின் இரண்டாம் பகுதி, உளவியல் கோட்பாடுகளில் இருந்து நடைமுறைகளுக்கும், நடைமுறைகளில் இருந்து செயல் முறைகளுக்கும் வழிகாட்டும் நூல்!

## பிரயோக உளவியல் II
## APPLIED PSYCHOLOGY II

நூலாசிரியர், கல்வியியல் ஆய்வாளரும், எழுத்தாளருமான

### திரு.பாலசுப்பிரமணியம் தனபாலன்

BA (Cey.), PGDE (Merit), Dip. in Psychology First Class, M.Phil in Education)

உப பீடாதிபதி (கல்வியும் தரமேம்பாடும் - யாழ்.தே.க.கல்லூரி)






### நூலாசிரியரைப் பற்றி
**திரு.பாலசுப்பிரமணியம் தனபாலசிங்கம் அவர்கள்**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, யாழ்ப்பாணம்தேசிய கல்வியற்கல்லூரி, தேசிய கல்வி நிறுவகப் பட்ட பின் கல்வி டிப்ளோமா யாழ்.பல்கலைக் கழகப்பட்டப் பின் கல்வி டிப்ளோமா ஆசிரியமாணவர்களுக்கு உளவியல் தொடர்பான கல்வியியல் கற்கைநெறிகளை நீண்ட காலமாகப் போதித்து வருகின்றார். அத்துறை சார்ந்த ஆய்வுக்கட்டுரைகள் பலவற்றை எழுதியுள்ளார். இக்கட்டுரைகள் கல்வி உலகில் வரவேற்பைப் பெற்றதுடன், பல சீர்திருத்தங்களுக்கும் வழிகாட்டியுள்ளன. அத்தகைய கல்விப் பின்புலம் கொண்ட திரு.பா.தனபாலன் பிரயோக உளவியல்II என்ற நூலை வெளியிடுகின்றமை இன்றைய தேவை ஒன்றினைப் பூர்த்தி செய்வதாகவுள்ளது.

இந் நூலாசிரியர் பேராதனைப்பல்கலைக்கழகத்தில் கலை மாணிப் பட்டத்தையும், இலங்கை தேசிய கல்விநிறுவகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமவையும், யாழ்ப்பாண பல்கலைக்கழகத் தில் கல்வியியல் முதுதத்துவமாணிப் பட்டத்தையும், அகில இந்திய முகாமைத்துவ நிறுவகத்தில் உளவியல் கல்வி தொடர்பான டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். தொடர்ந்தும் கற்றலில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றார். இது அவரைத் துலங்கும் கல்வியியலாளராக ஒளிர்வித்துக் கொண்டிருக்கின்றது. மேலும் இவர் வழிகாட்டல் ஆலோசனைச் சேவையையும் ஆற்றி வருகின்றார்.

இவர் ஒரு தசாப்தத்திற்கு மேலாக ஆசிரியராகப் பணியாற்றி 2000 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அங்கு விரிவுரையாளராகவும், கல்வியும் தர மேம்பாட்டிற்கும் பொறுப்பான உப பீடதிபதியாகவும் சிறப்பாக சேவையாற்றி வருகின்றார். இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து அது எதிர்கொண்ட பல்வேறு பிரச்சனைகளுக்கு பீடாதிபதி. கலாநிதி தி.கமலநாதன் அவர்களுடன் இணைந்து முகம் கொடுத்து கல்லூரியை வளர்த்து இன்றைய நிலைக்கு கொண்டு வந்தது வரை இவரது பங்கும் அர்ப்பண சேவையும் முக்கியமானது. கல்வியே அபிவிருத்தியின் இயந்திரமாகக் கருதப்படும் இன்றைய காலத்தில் முழு மூச்சாகக் கல்வியியலில் ஈடுபட்டு, கற்றல்-கற்பித்தல் துறைசார் உயர் கல்வி ஆய்வு மாணவர்களுக்கு சிறப்பாக வழிகாட்டிப் பணியாற்றி வரும் திரு.பா.தனபாலன் அவர்கள் கல்வித்துறையில் மேலும் மிளிர வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
புவியியல் முதுநிலைப் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**வெளியீடு:- கங்கை ஓவ்செற் பிரிண்டேர்ஸ்**
7/, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
விலை 200/= , இந்தியா 100/=, வெளிநாடுகளில் 20$ (U.S)
ஏக விநியோகஸ்தர்கள்:

## ஸ்ரீலங்கா புத்தகசாலை
243, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 2573




முதன் முறையாக
தொழிற்சாலையின்
5 வருட உத்தரவாதம்
License No : 50645
BS No : 5412:1966
License No : KM41240
Access Graphics
ஏக முகவர்கள்:
சென்ற் அந்தனிஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2324261-5, 2337283-5
பெக்ஸ்: 2446554
WATERTEC
Simply Better
முத்திரையை அவதானியுங்கள்
விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# பாரம்பரிய கலைகளைப் பாதுகாக்க இளந்தலை முறையினர் முன்வர வேண்டும்

## பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை வேண்டுகோள்



நல்லூர், ஏப்.24

பாரம்பரிய கலைகளைப் பாதுகாக்கவும் அதனை மீள மெருகூட்டவும் இளந்தலைமுறையினர் முன்வரல் வேண்டும்.

இவ்வாறு பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கலைஞர்கள் கௌரவிப்பு இறுவட்டு வெளியீட்டு விழாவில் பேசியு யாழ்.பல்கலைக் கழகத் தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கூறினார்.

கழகத் தலைவர் வைத்திய கலாநிதி வை. தியாகராசா தலைமையில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவில் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தொடர்ந்துபேசும் போது கூறியதாவது:-

நவீனத்துவம் கைத்தொழில் புரட்சி அதன்பின்னர் ஏற்பட்ட உயர் தொழில்நுட்ப வளர்ச்சியினால் இந்தக் கலைகள் ஓரளவு அழிந்துபோகக் கூடிய சூழ்நிலை பல பகுதிகளிலும் காணப்படுகின்றன.எங்களது நாட்டில் கூட இந்த நிலை உள்ளது. புதிய உத்திகளைக் கையாண்டு அவற்றிக்கு நவீனத்துவம் கொடுத்து வாழவைக்க இளம் தலைமுறை முயலவேண்டும். அநேக பல்கலைக் கழகங்களில் நாட்டார் வழக்கில் ஒரு முறை சார்ந்த கற்கைநெறியாக கற்பிக்கப்பட்டு பட்டங்கள் வழங்கப்படுகின்றது. இன்று சமூகத்தில் நிறையமாற்றங்கள் உண்டு. அதனைத் தடுத்து நிறுத்த முடியாது. எனவே, புதிய பாணியில் பாரம்பரிய கலைகளை உருவாக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

இந்தக் கலைகள் எமது தமிழினத்துக்கு கிடைத்த அருஞ்செல்வம். இக்கலையைப் பாதுகாப்பதில் மெற்றாஸ்மயிலும் அவருடன் இணைந்த கலைஞர்களும் இன்று பாரம்பரிய கலைகள் கழகத்தினூடாக செயற்படினும் ஒரு தனிமனிதனாக இருந்து இக்கலைகளைப் பேணுவதிலும் கலைஞர்களுக்கு உற்சாகமளிப்பதிலும் அவர் ஆற்றிவரும் பங்கு அளப்பரியது - என்றார்.

வைத்திய கலாநிதி வை. தியாகராசா தனது தலைமை உரையில் கூறியதாவது:-

எங்களுடைய கலைகள் மங்கி மறைந்து கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில் அந்தப் பாரம்பரியக் கலைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. அது ஆரம்பமான காலந் தொடக்கம் இன்றுவரை இந்தக் கலைகளுக்குப் புத்துயிர் அளிப்பதிலும் அனுபவம் வாய்ந்த கலைகளினூடாக இளந்தலைமுறைக்கு அவற்றைப் பயிற்றுவிப்பதிலும் கலைஞர்களைக் கௌரவிப்பதிலும் கழகம் முக்கிய பங்களிப்பை வழங்கி வருகிறது. எமது செயலாளர் அவர்கள் இதற்காகத் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியுள்ளார். எதிர்காலத்திலும் இக்கலையின் வளர்ச்சிக்காக வேண்டிய பணிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி பேசும் போது கூறியதாவது:-

எமது அடையாளமான இந்தப் பாரம்பரிய கலைகள் மீது இளந்தலைமுறையினர் அக்கறை காண்பித்தால்தான் அவை அழிவின் விளிம்பில் இருந்து மீள முடியும். மூத்த கலைஞர்களுக்கு எதிர்காலத்தில் இதனைக் கையளிக்கும் பொறுப்பு இருக்கிறது. கலைஞர்களுக்கு நாம் ஆற்றவேண்டிய பணிகள் அதிகமாக இருக்கிறது. எனவே, பிரதேசங்கள் தோறும் கலாசாரப் பேரவைகளை உருவாக்கியதுடன் அரச அதிபர் தலைமையில் மாவட்ட கலாசார பேரவையும் நிறுவப்பட்டுள்ளது.

மெற்றாஸ்மயில் அவர்கள் தனிநபராக பல தொண்டுகளைச் செய்து வருகின்றார். அவரிடம் இருந்து கற்கவேண்டியது நிறையவே உண்டு. ஒருங்கிணைப்புக் காரணமாக பல கலைஞர்களது பங்களிப்பைப் பெற்று பல்வேறு கலை நிகழ்வுகளை நடத்தியதன் மூலம் அவர்பெற்ற அனுபவங்களை நாங்கள் பகிர்ந்து கொள்ளவேண்டும்.இப்படியான நிகழ்வுகளுக்கு ஒவ்வொரு பிரதேச செயலகங்களும் தமது ஒத்துழைப்பை நல்கத் தயாராக உள்ளனர். இந்த நிகழ்வுகளில் பிரதேசங்களை மையப்படுத்தும் ஒத்துழைப்பும் உங்களுக்கு நிச்சம் கிடைக்கும் - என்றார். (111-204)

# இன்றைய மாணவர்கள் எதிர்காலத்தில் வளத்துடன் வாழ பள்ளிச் சேமிப்பு உதவும்

## தமிழீழ வைப்பக ஆளுகை மேலாளர் உரை

கிளிநொச்சி,ஏப்.24

மாணவர்கள் எதிர்காலத்தில் சிறப்பான பொருளாதார வளம் மிக்கவர்களாக வாழ வேண்டும் என்பதற்காகவே தமிழீழ வைப்பகத்தினால் பாடசாலைகள் தோறும் பள்ளிச் சேமிப்பு அலகு ஆரம்பித்து வைக்கப்படுகின்றது.

இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ வைப்பகத்தின் ஆளுகை மேலாளர் க.பாலகிருஷ்ணன்.

அண்மையில் மல்லாவி மத்திய கல்லூரியில் நடைபெற்ற பள்ளிச் சேமிப்பு அலகு ஆரம்பவைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:

எமது மாணவர்கள் தமது எதிர்காலத்தில் சிறப்பான பொருளாதார வளம் பெற்றவர்களாக வாழவேண்டும் என்ற நோக்கின் அடிப்படையிலேயே தமிழீழ வைப்பகம் பாடசாலைகள் தோறும் பள்ளிச் சேமிப்பு அலகை ஆரம்பிக்கின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவிப் பிரதேசத்தில் தமிழீழ வைப்பகம், இரண்டாவது பள்ளிச் சேமிப்பு அலகை ஆரம்பிக்கின்றது. தேசிய ரீதியாக தமிழீழ வைப்பகம் ஆரம்பிக்கும் ஐந்தாவது பள்ளிச் சேமிப்பு அலகு இதுவாகும்.

இந்தப் பள்ளிச் சேமிப்பு அலகு தமிழீழ வைப்பகத்தின் கிளைகள் இருக்கின்ற ஒவ்வொரு பிரதேசத்திலும் ஆரம்பிக்கவுள்ளது. அதன் முதற்கட்டமாக க.பொ.த.உயர்தரம் வரையுள்ள பாடசாலைகளில் இப்போது ஆரம்பிக்கப்படுகின்றது.

தமிழீழப் பிரதேசத்தில் இயங்கி வருகின்ற அரச மற்றும் தனியார் வங்கிகள் எமது மக்களிடம் பணத்தைச் சேமிப்பாகப் பெறுகின்றன. ஆனால் அந்தப்பணத்தைத் தமிழ் மக்களின் பிரதேசங்களின் அபிவிருத்திக்காக பயன்படுத்தாது, சிங்களப் பிரதேசங்களின் அபிவிருத்திக்காகவே செலவிடுகின்றன. தமிழீழப் பகுதிகளில் இயங்குகின்ற இந்த வங்கிகளில் - பொதுமக்கள், கடன் பெறுவதானால் பெரும் சிரமங்களை எதிர் கொள்ளவேண்டும். அப்படிக் கிடைத்தாலும் அதற்காக பெரும் நிபந்தனைகளும் உண்டு.

இந்த நிலையில் போரின் பெரும் தாக்கத்திற்குள் சிக்கி பொருளாதார நிலையில் பின்தங்கிப் போயுள்ளனர். இந்த மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த பொரு ளாதார வல்லுநர்களாக பொருளாதார மேம்பாடு உடையவர்களாக இருக்கவேண்டும். என்ற உயரிய சிந்தனையின் வெளிப்பாடே இந்தப் பள்ளிச் சேமிப்பு அலகின் உருவாக்கம்.

இந்தப் பள்ளிச் சேமிப்பு அலகை விஸ்தரிக்கும் திட்டம் தமிழீழ வைப்பகத்திடம் உள்ளது. அதன் அடுத்த கட்டமாக கிளிநொச்சி மாவட்டத்தின் முழங்காவில், விசுவமடு, பளை, பூநகரி ஆகிய பிரதசங்களிலும் வவுனியா மாவட்டம் புளியங்குளத்திலும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப் பட்டு வரு கின்றது என்று தெரிவித்தார். (த-307)(39)




### சிக்கனகடன் வழங்கும் சங்கங்களின் மூலம்

# விவசாயத்திலும் கால்நடை வளர்ப்பிலும் இளைஞர், யுவதிகள் ஈடுபடவேண்டும்

## உணவில் தன்னிறைவுகாண நீதிபதி தரும் ஆலோசனை



யாழ்ப்பாணம், ஏப்.24

இன்றைய நம் இளைஞர்களும் யுவதிகளும் கிராம மட்டத்திலான கடன் வழங்கும்சங்கங்களை நுழைவாயிலாகக் கொண்டு விவசாயத்திலும் தோட்டச் செய்கையிலும் கால்நடைவளர்ப்பிலும் கூட்டுறவு முறையில் ஈடுபடவேண்டும். அவ்வாறு செயற்பட்டால் எமது மக்களின் உணவுத் தேவைகளில் தன்னிறைவு பெறமுடியும்.

இவ்வாறு யாழ். மாவட்ட நீதிபதி இ.த. விக்னராஜா தெரிவித்தார். யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற சிக்கனக்கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மகளிர்தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்தகொண்டு அவர் உரை நிகழ்த்னார். நீதிவான் விக்னராஜா மேலும் கூறுகையில்:-

அண்ணல் காந்தியடிகள் கனவு கண்ட கிராம இராட்சியத்தை எமது இளைஞர் யுவதிகள் மீண்டும் மனம் வைத்தால் தோற்றுவிக்கமுடியும்.

எமது மாவட்ட பூளோகத் தன்மையை கவனத்தில் கொண்டால்பெருமளவு நிலம் விவசாய காய்கறி, பழத்தோட்டங்களுக்கான விளைநிலமாக காணப்படுகின்றது. எமது இளைஞர், யுவதிகளின் வேலை வாய்ப்பை நிறைவு செய்யும், மக்களின் பூரண உடல்நல சுகாதாரத்தைப் பேணவும் பொருளாதாரத்தில் தன்னிறவை அடையவும் கிராம மட்டத்தில் சிக்கன கடன் வழங்கும் சங்கங்களை நுழைவாயிலாகக் கொண்டு விவசாயத்திலும் காய்கறி, பழத்தோட்டச் செய்கையிலும் கால்நடைவளர்ப்பிலும் கூட்டறவு முறையில் உரியதிட்டங்களை வகுத்து செயற்படவேண்டும். எமது பகுதி மக்களின் பிரதான உணவான அரிசி, காய்கறி, பழங்கள், பால் என்பவற்றில்தன்னிறைவுகாண முடியும்.

இன்றைய சூழ்நிலை காரணமாக எமது மக்களில் பலர் வெளிநாடுகளில் சென்று வாழ்ந்து வருகின்றனர். ஆனால், அந்த மக்களின் பெரும்பாலானோர் தமது கல்வித் தகைமைக்கு ஏற்ப தொழில் பெறுவதில்லை என்பது கவனிக்கத்தக்க அம்சமாகும். வெளிநாடு சென்ற எம்மவரில் பலர் வெளிநாடுகளில் செய்யும்அதேதொழிலை எமது நாட்டில் இளைஞர், யுவதிகள் செய்வதற்கு வெட்கப்படுகிறார்கள். இது ஒரு சிந்தனைக்குரிய விடயமாகும். இத்தாழ்வு மனப்பான்மை எம்மவர்களை விட்டு அகலவேண்டும்.

இன்று வெளிநாட்டுஅரச சார்பற்ற நிறுவனங்கள் பல எமது பகுதியில் வருமான அதிகரிப்புத் திட்டங்களை செயற்படுத்த தேவையான நிதியை வழங்கத் தயாராக இருக்கின்றன. ஆனால், இந்த நிறுவனங்களிடமிருந்து எமது பகுதிக்கு பயனுள்ள வலிமையான திட்டங்களைச் சமர்ப்பித்து கிராமிய மட்டத்தில் செயற்படுத்த சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் முன்வரவேண்டும். இதற்கு இளைஞர், யுவதிகள் இச் சங்சங்களில்அங்கத்தவர்களாக சேர்ந்து செயற்பட வேண்டும்.

இன்று எமது பகுதியில் நவீன தொழில்நுட்ப விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக இளைஞர், யுவதிகள் தமது பொன்னான நேரத்தை அர்த்தமற்ற விடயங்களில் செலவிடுகின்றனர். இதனால் கலாசார சீர்கேடு ஏற்பட்டுள்ளதை அவதானிக்கலாம். இவ்வகையில் கலாசார சீர்கேடுகளை தவிர்த்து எமது சமூகத்தின் தொன்மையான கலாசாரத்தை பேணிப்பாதுகாக்கவேண்டும். மேலே குறிப்பட்ட விவசாய, காய்கறி, பழதோட்டங்கள், கால்நடை வளர்ப்புதிட்டங்களை கூட்டுறவு முறையில் செயற்படுத்துவதன் மூலம் இயற்கைப் பசளை ஊடாக சுத்தமான பால், அரிசி, காய்கறி, பழங்கள் போன்றவற்றை மக்கள்உட்கொள்ள வழி ஏற்படுத்தலாம். இது மட்டுமன்றி இளைஞர், யுவதிகளின் வேலைவாய்ப்பை பெருமளவில் நிறைவு செய்வதுடன் எமது பகுதி பொருளா தாரத்தை ஸ்திரநிலைக்குக் கொண்டு வருவது டன் எமது மக்கள் அனைவரும் நோய் அற்ற வலுலான சுகாதார ரீதியிலான வாழ்க்கை முறையை பின்பற்ற வழிசமைப்பதாக இருக்கும் என்று கூறினார். (ப-111)

# பின்தங்கிய கிராம அபிவிருத்தியே ஐ. நா. அ. திட்டத்தின் இலக்கு

யாழ்ப்பாணம், ஏப்.24

பின்தங்கிய பிரதேசங்களின் அபிவிருத்திக்கு உதவுவதனை இலக்காகக் கொண்டே எமது திட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப் படுகின்றன.

இவ்வாறு ஐ.நா.அபிவிருத்தி திட்ட நிகழ்ச்சித் திட்ட அதிகாரி யூட் வோல்டன் கூறினார்.

வேலணை செட்டிபுலம் பிரதேசத்தில் பன்னத்தொழில் மற்றும் தையல் பயிற்சிநெறி ஆரம்ப விழா செட்டிபுலம் கிராம அபிவிருத்தி சங்க செயலாளர் க.மார்க்கண்டுதாசன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட ஐ.நா.அபிவிருத்தி திட்ட நிகழ்ச்சித் திட்ட அதிகாரி யூட்வோல்டன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

வேலணை பிரதேச சபையின் வளர்ச்சி அபிவிருத்தியினை முன்னெடுத்து செல்ல நாம் செட்டிபுலம் பகுதிக்கு பாரிய பொது நோக்கு மண்டபத்தினையும் அதனையண்டிய பிரதேசத்தில் சந்தை ஒன்றையும் வீதி ஒன்றினையும் அபிவிருத்தி செய்து வருகின்றோம்.

இதற்காக 23 லட்சம் ரூபாவினை வழங்கி செயற்படுத்தி வருகின்றோம். இதனைவிட- இப்பிரதேசத்தின் அபிவிருத்திக்கு 25 வீடுகளை ஏழு கிராமங்களில் தெரிவுசெய்து அபிவிருத்தி செய்கின்றோம் என்றார்.

மேற்படி நிகழ்வில் வேலணை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அதிகாரி, ஐ.நா. அபிவிருத்தித்திட்ட நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் ச.செந்தூரன், செட்டிபுலம் அ.த.க. பாடசாலை அதிபர் ஏ.சேவியர், வேலணை பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர், பனை தென்னை அபிவிருத்தி விரிவாக்கல் அலுவலர் கா.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.தையல் பயிற்சி நெறிக்கான ஐ.நா.அபிவிருத்தித்திட்ட நிறுவனம் 10 புதிய தையல் இயந்திரங்களை வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (ப-185) (39)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் பஸ்நிலையம் முன் பாக ஆஸ்பத்திரி வீதியில் சகல வசதிகளும் கொண்ட ஒரு பரப்புக் காணியுடன் ஒரு மாடிக் கடைக் கட்டடம் (முன்புறம், பின் புறம் பாதைகள் கொண்டது) தொடர்பு: T.P.: 0713056177 (சி/49032)

## காணி விற்பனைக்கு

நல்லைக் கந்தனது ஆலய வீதியில் ஐந்து பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 222 - 3400 (49645)

சுன்னாகம் மயிலணியில் நல்ல அமைதி யான சுற்றாடலில் 4 பரப்புக் காணி விற்ப னைக்குண்டு. தொடர்பு: 071 4952674 (49675)

## வீடு வாடகைக்குத் தேவை

5 பேர் கொண்ட ஆசிரிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை. கொக்குவில், யாழ்.நகர் அண்டிய பகுதியில் விரும்பத்தக் கது. தொடர்பு: குமார் (ஆசிரியர்).T.P.: 077 65311167. (49726)

## வீடு வாடகைக்கு

கொக்குவில் மேற்கில் ஒரு சிறிய குடும் பத்திற்கு ஏற்ற வீடு வாடகைக்கு உண்டு. அரச ஊழியர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு:. V.தயா T.P.:0776 184661 (49712)

பருத்தித்துறை வீதி, நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்திற்கு அருகில் சகல வசதி களுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: 222 5739. (49734)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 24 வயது டைய, அனுஷம் முதலாம் பாதம், 2இல் செவ் வாய் பாவம் குறைந்த மணமகளுக்கு வெளி நாட்டில் பிரஜாவுரிமை உடைய மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: வி.இல.2858 மே/ப உதயன். (சி-49053)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப் பட்ட No.1 Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 24.04.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத் தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், கரன் - ஆலடி, உடுவில், சந்நிதி பாம்- தொண்டை மானாறு, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/48915)

## கெட்டிக்காரர்கள்- இமயம்

பேராதனைப் பல்கலைக் கழக நாடகப் பணியின் தொடர்ச்சியாக கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதிய 21 நவீன நாடகங்கள் கொண்ட இரண்டு நூல்கள் மாணவர்கள் படிப்பதற்கும் நடிப்பதற்கும் பொருத்தமானவை. (49495).

## தவறிவிட்டது

சங்குவேலி தெற்கு, மானிப்பாய் என்ற முகவரியை உடைய மாணிக்கவாசகர் வசீத ரன் என்பவருடைய தே.அ.அட்டை (870241950 V), விசேட அ.அட்டை (இல. 0905027794), சாரதி அனுமதிப்பத்திரம் (A12890558) ஆகியவை உரும்பிராய் மேற்குக்கும் இணுவில் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற் குறிப்பிட்ட முகவரியுடன் அல்லது 0773165558, 2229170 என்ற தொலைபேசி இலக்கங்களு டன் தொடர்பு கொள்ளவும். (49716)

தி.சூரியகாந்தன் என்பவரது வாகன சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், வரிப்பத்திரம் என்பன அடங்கிய பொலித் தீன் பை 21.04.2006 அன்று யாழ்.நகர்ப்பகு தியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0773317869 என்னும் தொலைபேசி இலக் கத்துடன் தொடர்பு கொள்ளவும். (49723)

சிவகுரு அகிலதாஸ் என்பவருடைய தொழில் அடையாள அட்டை 12.04.2006 முனீஸ்வரன் வீதியில் தவறிவிட்டது. கண் டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: 0776154027. (49733)

## பரிசுத்த ஆவிக்குரிய செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் 'பரிசுத்த ஆவியே! உமதுதிருநாமம் அர்ச்சிக்கப் படுவதாக. உமது அருட் கொடை களின் மூலம் என் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி, எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே. என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உறுதுணையான உமக்கு, இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக் காரணம் கொண்டும் உம்மில் இருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பே னென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் எமது முடிவில்லா மகிமையில் பங்குபெறவேண்டுகின்றேன்.

உங்கள் தேவை எவ்வளவு கடினமாக இருப்பினும் அடுத்தடுத்த 3 நாள்களுக்கு இச்செபத்தை உங்கள் தேவையைக் கேளாமல் சொல்லிவரின் உங்கள் தேவை நிறைவேறும்.

*ஓம் பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி!*

(48735)(26-39-11-45) **-ஓர் அடியான்.**

# மந்துவிலில் சில இடங்களுக்கு மின்சாரம்

தென்மராட்சி, ஏப்.24

மந்துவில் மேற்கின் சில பகுதிகளுக்கு அண்மையில் மின்வழங்கப்பட்டது.

செம்பாடு, சந்திரன்கேணி வீதி, விநாய கர் வீதி ஆகிய பகுதிகளுக்கே மின் வழங் கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் விடுத்த வேண்டுகோளை அடுத்து இப் பிரிவுகளுக்கு மின் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)(26)

# மே 9 ஆம் திகதியே ஓய்வூதியம்

தென்மராட்சி, ஏப்.24

ஓய்வூதியர்களுக்கான மே மாதத்திற் குரிய ஓய்வூதியக் கொடுப்பனவுத் திகதிகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன என்று ஓய்வூ தியப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மே மாதத்திற்குரிய ஓய்வூதியக் கொடுப் பனவுகளை மே ஒன்பதாம் திகதி செவ்வாய்க் கிழமை வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளு மாறு ஓய்வூதியம் வழங்கும் சகல திணைக் களங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் 24 ஆம் திகதிய (24-11-2005) 02/2005 இலக்க திறைசேரி செயற்பாடுகள் சுற்றறிக்கையில் மே மாத ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மே பத்தாம் திகதி புதன்கிழமை வழங்கப்படுமென திறை சேரி பிரதி செயலாளரி னால் அறிவிக்கப்பட் டருந்தது குறிப்பிடத் தக்கது. (ஐ-117)(26)


FAIR PHARMA (PVT) LTD
(Manufacturers of Ayurvedic Medicines)

ஆட்கொல்லி நோய்க்கு
100 நாள் சிகிச்சை
சிரோஸிஸ் - மஞ்சள் காமாலை
மஹோதரம்- ஹெப்படைடிட்ஸ் ஆகிய
ஈரல் தொடர்பான நோய்களை
வலியில்லாத எளிமையான
பக்கவிளைவுகள் அற்ற
சிகிச்சை மூலம் நீக்குகின்றோம்.
பூரண சுகம் கிடைக்கும்.




சிக்கனமான
ஆயுர்வேத சிகிச்சை
இலவச ஆலோசனைக்கு விஜயம் செய்யுங்கள்
Available On Line

1C, Level 5/East Tower, World Trade Centre, Col. 01.
Tel: 0094-11-5517897, 5551879, 5558442
Fax: 5517756 E-mail: fppvtl@lankabellnet.com
Website: www.fppvtl.org
A BOI Approved & ISO 9001-2000 QMS Certified Company


## ஆண் மேற்பார்வையாளர் தேவை

எமது இல்லத்தில் ஆண்பிள்ளைகளை கவனிப்பதற்கு ஓர் ஆண் மேற்பார்வையாளர் உடன்தேவை. சுயவிவரங் களை 30-04-2006 இற்கு முன் கிடைக்கும் வண்ணம் தபால் மூலமோ நேரடியாகவோ விண்ணப்பிக்கலாம்.

வயது 50இற்கு மேற்பட்டவராகவும், நல்லொழுக்கம் உள்ளவராகவும் இருத்தல்வேண்டும். குறைந்தது க.பொ.த. (சா/த.) சித்தியடைந்திருக்கவேண்டும். அரச சேவையினின்றும் ஓய்வுபெற்றவர் விரும்பத்தக்கது. உணவு, தங்குமிட வசதிகள் உண்டு. தொண்டுதியம் பேசித் தீர்மானிக்கப்படும்.

*ஸ்ரீ பரமானந்த சிறார் முதியோர் இல்ல ஆச்சிரமம், வதிரி, கரவெட்டி.*

தலைவர்
தர்மகர்த்தாக்கள் சபை.

(சி/49077)(26-39-11-45)

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 21 - 01 - 1929

மறைவு 11 - 03 - 2006

## அமரர் மயிலுப்பிள்ளை விஸ்வலிங்கம் (உடையார்)

*(ஓய்வு பெற்ற புகையிரத சாரதி - காங்கேசன்துறை)*

திதி: துவாதசி

எமது குடும்பத்தின் ஒளி விளக்கே! அன்பின் திருவுருவே!
பாசத்தின் உறைவிடமே! காலமெல்லாம் உன் நினைவில் - எம்முயிர்
கலந்து நிற்கத் துடிக்கும் ஐயா!
*உங்களின் ஆத்மா சாந்தியடைய பழனி முருகனை வேண்டி நிற்கின்றோம்.*

அன்னாரின் பிரிவுச் செய்திகேட்டு நேரிலும், தொலைபேசியிலும், தந்திமூல மும் எமது துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரி விப்பதுடன், பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு,

அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (24-04-2006) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்தர முகவரி:
புதுவீட்டு ஒழுங்கை,
காங்கேசன்துறை.

*தற்காலிக முகவரி:*
*துன்னாலை மத்தி, கரவெட்டி.*

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(பிரான்ஸ், லண்டன்)

(48938)(26-39-11-45)

## கும்பாபிஷேகம்

தென்மராட்சி, ஏப்.24

சாவகச்சேரி சப்பச் சிமாவடி ஸ்ரீசக்கர ஆழ் வார் ஆலய மகாகும் பாபிஷேகம் எதிர் வரும் மே மாதம் மூன் றாம் திகதி காலை 6.45 மணி முதல் நடைபெறவுள்ளது. (ஐ-117)(26)

## விக்கிரகம் பிரதிஷ்டை

சுழிபுரம், ஏப்.24

வழக்கம்பரை முத்துமாரிஅம்பாள் ஆலயத்தின் புதிய மூலஸ்தான அம் பாள் விக்கிரகம் பிர திஷ்டை செய்யும் கும்பாபிஷேகம் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை காலை நடைபெற வுள்ளது.

தற்போது இயந் திர பூசை தினமும் ஒருவர் உபயமாக நடைபெற்று வருகி றது. புதிய அம்பாள் விக்கிரகத்தை தென் னிந்திய சிற்பக் கலைஞர்கள் உரு வாக்கியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து ஒரு மண்டலம் கும்பாபி ஷேகம் நடைபெற வுள்ளது.

பின்னர் வரு டாந்த கொடியேற்ற திருவிழா நடை பெறும். (ஐ-28) (39)



அண்மையில் யாழ்ப்பாணம்
விஜயம் செய்த
ஸ்ரீஸ்ரீ
ரவிசங்கர்ஜியின்

**வாழும் கலைப்பயிற்சி
இலவச அறிமுக உரை**

நாள்: இன்று [24.04.2006] திங்கட்கிழமை மாலை 5 மணி
இடம்: கம்பன் கோட்டம், நல்லூர் பின்வீதி, நல்லூர்.

பயிற்சி நாள்கள்: 25.04.2006 முதல் 30.04.2006 வரை
பயிற்சிநேரம் : மாலை 5 மணி முதல் 7 மணி வரை

**அன்பில் மலருங்கள்! உங்களை உணருங்கள்!**

மேலும் தொடர்புகளுக்கு:
**0779059549, 0779059544, 0777157281**

(49684)

# மரண அறிவித்தல்

## கதிரிப்பிள்ளை வெங்கடாசலம்

**(Retired Head Guard C.G.R.)**

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப் பிடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை வெங்கடாசலம் அவர்கள் 21.04.2006 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை- லட் சுமிப்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற வர்களான நாகலிங்கம்- பாக்கியம் தம்பதியரின் அன்பு மரு மகனும் கோகிலாம்பாளின் அன்புக் கணவரும் சுகந் தினியின் (லண்டன்) அன்புத் தந்தையும் பிரபாகரனின் (லண் டன்) அன்பு மாமனும் சாய்ஈசன், செந்தூரன் ஆகியோரின் அருமைப் பாட்டனும் காலஞ்சென்ற குட்டித்தம்பி, காலஞ்சென்ற செல்ல முத்து, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சின்னத் தம்பி, துரைசாமி, மனோரஞ்சிதம் பூபாலசிங்கம், ஜெயரஞ்சிதம் குலசிங்கம், வசந்தரஞ்சிதம் நரேந்திரன், பாக்கியலிங்கம் (இந்தியா), ஜெயலிங்கம் (அமெரிக்கா), சோதிலிங்கம் (சம்பியா), வைகுந் தநாதன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2006) திங்கட் கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பி.ப.2.30 மணியளவில் பொறளை கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.5, இராமகிருஷ்ண இடம்,*
*வெள்ளவத்தை,*
*கொழும்பு-6,*
*தொ.பே. 2501237.*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

(சி/49076)(39-11-45)

# பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் மகாஜன்

# தனது தம்பியால் சுடப்பட்டு ஆபத்தான நிலையில்

இந்தியாவில் பாரதீய ஜனதாக் கட்சியின் பொதுச் செயலர் பிரமோத் மகாஜனை அவரது சொந்தத் தம்பியே துப்பாக்கியால் சுட்டார். இதில் படுகாயம் அடைந்துள்ள பிரமோத் மகாஜனுக்கு மும்பை மருத்துவமனையில் நான்கு மணி நேர அறுவைச் சிகிச்சை நடந்தது. தொடர்ந்து அவர் உயிருக்குப் போராடி வருவதாகவே டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

பா.ஜ. கட்சியில் பிரபலமானவரும் அதே நேரத்தில் சர்ச்சையின் நாயகனாகவும் விளங்கியவர் பிரமோத் மகாஜன். வாஜ்பாய் தலைமையில் 13நாள் அமைச்சரவை அமைந்த போது இராணுவ அமைச்சராக இருந்தவர். பின்னர் பா.ஜ.மீண்டும் பதவியை பிடித்த போது தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சராக இருந்தார். ஜனாதிபதியாக அப்துல் கலாமையே தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற ஒருமித்த கருத்தை அனைத்து கட்சியினரிடையேயும் ஏற்படுத்தியவர் மகாஜன்தான்.



சகோதரர் பிரவீன் மகாஜன் விசாரணைக்காக அழைத்துச்செல்லப்படுகிறார்.

ஆனால், கடந்த மக்களவைத் தேர்தலின் போது 'ஹைரெக்' முறையில் பிரசாரத்தை மேற்கொண்டதால் பா.ஜ. தோல்வியை சந்திக்க நேரிட்டது. இதற்கு பிரமோத் மகாஜன்தான் காரணம் எனக் கட்சிக்குள்ளேயும், வெளியேயும் கடும் விமர்சனங்களையும் பிரமோத் மகாஜன் சந்திக்க நேரிட்டது

இருப்பினும், 'பா.ஜவின் லட்சுமணன்' என்று வாஜ்பாயால் சமீபத்தில் பாராட்டுப் பெற்றவர். கட்சியின் இரண்டாம் மட்டத் தலைவர்களில் மிக முக்கியமானவர். வருங்காலத்தில் கட்சியை வழிநடத்தி செல்லும் நிர்வாகத் திறமை அவரிடம் உண்டு என்று பலராலும் பாராட்டுப் பெற்றவர்.

கட்சியில் புகழ் பெற்று இருந்தாலும், பிரமோத் மகாஜன் குடும்பத்தினர் பற்றி மற்றவர்களுக்கு அவ்வளவாகத் தெரியாது. அந்தளவுக்குக் குடும்பத்தினர் பற்றி வெளியே சொல்லாதவர் பிரமோத் மகாஜன். இவருக்கு இரண்டு சகோதரர்கள், இரண்டு சகோதரிகள் உள்ளனர். இதில் இளைய தம்பிதான் பிரவீன் மகாஜன். இப்படி ஒரு தம்பி இருப்பதே வெகு சிலருக்குத்தான் தெரியும். சமீபத்தில் பிரமோத் மகாஜன் மகள் திருமணம் நடந்த போது கூட தம்பி பிரவீன் மகாஜன் வரவில்லை. இவர்கள் இடையே 10 ஆண்டுகளுக்கு மேலாக சொத்து தகராறு இருந்து வருகிறது என தற்போது தகவல் வந்துள்ளது.

மும்பையின் மத்திய பகுதியான வொர்லியில் உள்ள பூர்ணிமா அடுக்கு மாடி குடியிருப்பில் 14ஆவது தளத்தில் பிரமோத் மகாஜன் வீடு உள்ளது. இந்த வீட்டுக்கு நேற்று காலை வந்த தம்பி பிரவீன் மகாஜன், அண்ணனுடன் சிறிது நேரம் சண்டை போட்டுவிட்டு சிறுகைத் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டுள்ளார். நான்கு தோட்டாக்கள் துப்பாக்கியில் இருந்து வெளிப்பட்டுள்ளன. இதில் மூன்று தோட்டாக்கள் பிரமோத் மகாஜனின் உடலில் பாய்ந்து அவரை நிலை குலையச் செய்துவிட்டன. தனது குடும்பத்தினருக்குத் தந்தை போல் இருந்து அனைவரையும் முன்னுக்குக் கொண்டு வந்தவர் தரையில் இரத்த வெள்ளத்தில் மிதந்தது. மனைவி மற்றும் உறவினர்களுக்குப் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது. உடன் அவர் மும்பையில் உள்ள இந்துஜா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.



பிரமோத் மகாஜன் பிரவீன் மகாஜன்



செய்தி அறிந்ததும் ஆஸ்பத்திரிக்கு வந்த தலைவர்கள்

ஜனாதிபதி, பிரதமர், பா.ஜ., தலைவர்கள், காங்கிரஸ் தலைவர் சோனியா, பாலிவூட் நடிகர், நடிகைகள் உட்பட நாட்டில் உள்ள முக்கிய பிரமுகர்கள் அனைவரும் இந்தச் சம்பவத்துக்குக் கடும் அதிர்ச்சி தெரிவித்துள்ளனர். அண்ணனை சுட்ட பின் பிரவீன் மகாஜன், மும்பை வொர்லி பொலீஸ் நிலையத்தில் துப்பாக்கியுடன் சரண் அடைந்து விட்டார். அவரைக் கைதுசெய்து கொலை முயற்சி வழக்குப் பதிவுசெய்துள்ளனர் பொலீஸார்.

துப்பாக்கியால் பலமுறை சுடப்பட்டதால் பிரமோத் மகாஜனின் உடலில் இருந்து அதிகப்படியான இரத்தம் வெளியேறிவிட்டது. அவருக்கு நான்கு மணி நேர அறுவைச் சிகிச்சை செய்துள்ள டாக்டர்கள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். வயிற்றுப் பகுதியில் அடுத்தடுத்து பாய்ந்த தோட்டாக்கள் பல உடல் உறுப்புகளைக் கடுமையாகச் சேதப்படுத்திவிட்டன. அவற்றை டாக்டர்கள் அறுவைச் சிகிச்சை மூலம் சரிசெய்து விட்டாலும், அவரது உடல் நிலை கவலைக்கிடமாகவே உள்ளது என்று தெரிவித்துள்ளனர். (ஐ)

# ஈராக்கிலிருந்து அமெரிக்கா விலகும் சூழ்நிலை; புதிய பிரதமர் நியமனத்துக்கு அதிபர் புஷ் வரவேற்பு

பக்தாத்,ஏப்.24

ஈராக்கில் மாதக்கணக்கில் இழுபறிப்பட்டு வந்த அரசியல் முட்டுக்கட்டை நிலைமை புதிய பிரதமர் நியமனத்தின்மூலம் ஒருவாறு சீரடைவதற்கான அறிகுறிகள் தோன்றியுள்ளன.

ஷியா இன அரசியல்வாதி ஜாவாத் அல்-மாலிக்கி ஈராக்கிய அதிபர் ஜலால் தலபானியால் புதிய அரசாங்கம் அமைக்கும்படி கேட்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே பதவியிலிருந்த பிரதமர் இப்ராஹிம் அல் ஜாபரி பதவியிலிருந்து ஒதுங்கிக் கொண்டதையடுத்து மாலிக்கி நியமிக்கப்பட்டுள்ளார்.

ஈராக் நாட்டை இன ரீதியிலான கோஷ்டி மோதல்களுக்கு இட்டுச் செல்லக்கூடிய சூழ்நிலை இப்போது தவிர்க்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்றது.

ஈராக்கில் ஏற்பட்டுள்ள இந்த புதிய சூழ்நிலையை அமெரிக்க அதிபர் வரவேற்றுள்ளார். "பற்றுறுதிகொண்ட ஈராக்கிய மக்களின் இந்த வரலாற்றுச் சாதனை அமெரிக்காவின் பாதுகாப்பை மேலும் 'வலுவாக்கியுள்ளது'' என்றூ அதிபர் புஷ் கூறியுள்ளார். ஈராக்கிய மக்களுக்குப் பாராட்டுத் தெரிவித்த அதிபர் புஷ் ஈராக்கியரின் ஜனநாயகத்தை நோக்கிய பாதையில் இது ஒரு மைல்கல் என்றார்.



புதிய பிரதமராகும் மாலிக்கி

ஈராக்கின் புதிய தலைவர்களுக்கிடையில் ஏற்படக்கூடிய ஒருங்கமைப்பானது அமெரிக்கத் துருப்புகளின் வெளியேற்றத்துக்கும் வழிவகுக்கக்கூடும் என்று அவர் சூசகமாகக் கூறினார்.

புதிய ஈராக்கிய அரசாங்கம் நாட்டின் பாதுகாப்புக்குப் பாரியவகையில் பொறுப்பேற்பதாய் இருக்கும் என்றும் அதிபர் புஷ் கூறினார்.

மாலிக்கி புதிய பிரதமராக நியமனம் பெற்றதையடுத்து புதிய அமைச்சரவையை உருவாக்குவதற்கு அவருக்கு 30 நாள் அவகாசம் இருப்பதாகக் கருதப்படுகின்றது. அவரது அமைச்சரவை உறுப்பினர்களை நாடாளுமன்றம் தனித்தனியே பெரும்பான்மையாக அங்கீகரிக்கவேண்டும்.

ஈராக்கிலுள்ள ஷியா இனத்தவர்கள், சுனி, குர்திஷ் இனத்தவர்களுடன் மதச் சார்பற்ற அரசியல்வாதிகளின் ஆரவையும் புதிய பிரதமர் கோருவார் என்று தெரிகிறது.

பிரதமர் மாலிக்கி தமது முதலாவது கொள்கை விளக்கவுரையில் தீவிரவாதிகளின் குழுக்கள் யாவும் நட்புடன் பாதுகாப்புப்படைகளில் இணைந்துகொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ஆயுதங்கள் அரசாங்கத்தின் கைகளில் இருக்கவேண்டும். ஆயுதப்படைகளில்தீவிரவாத இயக்கங்கள் இணைவதற்குச் சட்டம் இடம் தருக்கின்றது என்று அவர் கூறினார்.

ஷியா தாவாக் கட்சியைச் சேர்ந்தவராய் இருந்த மாலிக்கி, சதாம் ஹுசேனால் மரண தண்டனை விதிக்கப்பட்டதால் 1980ஆம் ஆண்டு சிரியாவுக்கு ஓடினார். அமெரிக்க படையெடுப்பின் பின்னர் நாடுதிரும்பினார். (ப)

உலக அரங்கில்

# நேபாள மன்னர் அழைப்பை எதிர்க்கட்சிகள் நிராகரித்தன

## நாடு முழுவதும் போராட்டம் நீடிக்கிறது

காத்மண்டு,ஏப்.24

நேபாள மன்னர் விடுத்த அழைப்பை நேபாள எதிர்க்கட்சிகள் நிராகரித்துவிட்டன.

தலைநகரில் புதிதாக ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வந்துள்ளது. சனிக்கிழமை அறிவிக்கப்பட்டிருந்த ஊரடங்கை 100 ஆயிரம் மக்கள் புறக்கணித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். அதனால் புதிதாகக் கடுமையான ஊடங்கு அமுலுக்கு வந்தது.

ஆர்ப்பாட்டக்காரர் மீது பொலீஸார் ரப்பர் குண்டுகளால் தாக்குதல் நடத்தியதில் 150 பேர் வரை காயமடைந்தனர்.

சகல கட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பாக மன்னர் ஜியானேந்திரா விடுத்த அழைப்பை அரசியல் கட்சிகள் நிராகரித்துத் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களை நடத்திவருகின்றன. மன்னரின் ஜனநாயகத் திட்டத்துக்கு எதிரான போராட்டத்தில மாவோ கிளர்ச்சியளர்களும் சேர்ந்து கொண்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் குடியரசு ஒன்று ஏற்படவேண்டும் என்றே விரும்புகிறார்கள். கடல் போல் மக்கள் வெள்ளம் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்வதானது நிலச் சுவாந்தர் ஆட்சி முறையை முழுமையாக அவர்கள் விரும்பவில்லை என்று மாவோக்கள் கூறுகிறார்கள். (ப)

# ஜேர்மனி, உஸ்பெகிஸ்தானுக்கு இந்தியப் பிரதமர் விஜயம்

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஜேர்மனி, உஸ்பெகிஸ்தான் நாடுகளுக்கு 5 நாள் பயணமாக சனிக்கிழமை புறப்பட்டுச் சென்றார்.

இந்தப் பயணத்தின் மூலம் ஜேர்மனி மற்றும் உஸ்பெகிஸ்தான் நாடுகளுடனான இந்தியாவின் உறவு மேலும் வலுப்படும் என்று பயணத்துக்கு முன்பாக பிரதமர் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஐரோப்பியாவில் மிகமுக்கிய நாடாகத் திகழ்வது ஜேர்மனி. அந்த நாட்டுக்குப் பயணம் மேற்கொள்வதன் மூலம் இந்தியாவுடனான ஜேர்மனியின் உறவு மேலும் வலுப்பெறும். சர்வதேச விவகாரங்களில் பங்கெடுக்கும் நாடுகளில் முக்கியமானது ஜேர்மனி.



சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் பிரதமர் மன்மோகன் சிங்கை டில்லியில் அவரது அரசு இல்லத்தில் சந்தித்து வழியனுப்பும்போது....

இந்தியாவின் முக்கிய வர்த்தக கூட்டாளிகளில் ஜேர்மனியும் ஒன்று. ஜேர்மனியில் நடைபெறும் கண்காட்சியில் இந்தியா பங்கேற்கிறது. பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட பல்வேறு இந்திய நிறுவனங்கள் இந்தக் கண்காட்சியில் பங்கேற்கின்றன.

ஜேர்மனியைப் போலவே மத்திய ஆசியப் பகுதியில் முக்கிய நாடாக விளங்குவது உஸ்பெகிஸ்தான். அந் நாட்டுக்குச் செல்வதன் மூலம் அரசியல், பொருளாதாரம், இராணுவம் உள்ளிட்ட துறைகளில் தொடர்பு வலுப்படும் என்றார் பிரதமர். (ஐ)



யாழ்ப்பாணம், நீராவியடி சைவபரிபாலன சபை மண்டபத்தில் 'தாயகம்' சிறுவர் இல்ல சிறார்களினால் நேற்று நடத்தப்பட்ட திருநாவுக்கரசுநாயனார் குருபூசை நிகழ்ச்சியில் மாணவி ஒருத்தி உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவ, மாணவிகள் மற்றும் ஏனையோர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:நேசன்)


Shanida Vasanawa

சீட்டிழுப்பு இல. 1703

22.04.2006 ஆம் திகதி சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள் சுப்பர் எண்

11 20 41 42 (09)

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 301032934 இலிருந்து 301046255

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 20,00,000/-வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 20,00,000/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 22 | 5,000/- | 1,10,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 359 | 1,000/- | 3,59,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,143 | 500/- | 5,71,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 17,220 | 40/- | 6,88,800/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 16,441 | 20/- | 3,28,820/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,44,683 | 10/- | 24,46,830/- |
| மொத்தம் | | | 65,04,950/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம், பைசிக்கிள் | 5 | 1,20,000/- | 6,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 2,79,875 | | 71,04,950/- |

தொடர் இல. 201116205 க்கு மேற்பட்ட ஜதா நிற டிக்கெட்டுக்கள் 2006 ஏப்ரல் 26 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை
சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 26,53,650/-

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் பைசிக்கள் அடங்கிய பரிசு முறியை வென்றெடுத்த 5 டிக்கெட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 301040979-2-52 |
| மொனராகலை | 301039593-7-19 |
| களுத்துறை | 301040055-8-20 |
| இரத்தினபுரி | 301042075-9-17 |
| ஹம்பாந்தோட்டை | 301035746-6-71 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி கொழும்பு-03


## பண்டத்தரிப்பில் சனிக்கிழமை இரவு 2 வீடுகளில் கொள்ளை

வலி.மேற்கு, ஏப்.24

பண்டத்தரிப்பு பற்றீமாதா ஆலயத்திற்கு அருகில் உள்ள இரண்டு வீடுகளில் ஒரே இரவில் கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றன.

கடந்த சனிக்கிழமை நள்ளிரவு ஒரு மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளன.

அப்பகுதியைச் சேர்ந்த திருமதி இரத்தினம் றெஜீனாம்மா என்பவரது வீட்டிற்குள் வீட்டின் கதவு, ஜன்னல்கள் என்பவற்றை கொட்டன் தடிகளால் அடித்து உடைத்து விட்டு நுழைந்த கொள்ளையர்கள் வீட்டில் உள்ளவர்களை கொட்டன்களால் தாக்கி அவர்கள் அணிந்திருந்த நகைகளை அபகரித்ததுடன் வீட்டில் இருந்த தங்க நகைகளையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

சுமார் 50 பவுண் நகைகள், ஒளிப்படக் கருவி, வீடியோ டெக், கையடக்கத் தொலைபேசி போன்றனவே கொள்ளையிடப்பட்டுள்ளன.

அதே இடத்திலும் மற்றொரு வீட்டிலும் இதேசமயம் கொள்ளை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொள்ளைகள் தொடர்பாகப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135-203)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப்.24

மீசாலை மேற்கு கரும்பி மாவடி கந்தசாமி ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர் வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு கும்பாபிஷேக காரியாரம்பம், கணபதி ஹோமம், கிராம சாந்தி, சாந்தி ஹோமம், வாஸ்து சாந்தி போன்ற பல்வேறு கிரியைகள் இடம் பெறும்.

மாலை 5.30 மணிக்கு மிருந்கங் கிரகணம், ரக்ஷா பந்தனம், கும்பஸ்தாபனம் போன்ற கிரியைகளும் இரவு 9.30 மணிக்கு ஸ்தூபிஸ்தாபனமும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 8மணி தொடக்கம் கிரியைகளும் இடம்பெறும்.

காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம் பெறும்.

மறுநாள் புதன் கிழமை அதி காலை 5.02 மணிமுதல் கிரியைகள் நடைபெறும். தொடர்ந்து மகா அபிஷேகம், விசேட பூசை என்பன இடம் பெறும். (ஐ-202)

## பணிநிலை வேண்டுகை

### தமிழீழ நிர்வாக சேவை- ஊடக ஆய்வுப் பிரிவு

தமிழீழ நிர்வாக சேவை ஊடாக ஆய்வுப் பிரிவில் கீழ்க்காணும் பணி நிலைக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

தகுதியும், திறமையும், ஆளுமையும், ஆர்வமும் கொண்ட இருபாலாரும் இப்பணிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

இப்பணிநிலைகளில் தம்மால் சிறப்பாக கடமையாற்ற முடியும் என நம்பும் அனைவரும் தமது சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்கள் மற்றும் கல்வித் தகுதி, அனுபவ ஆவணங்களுடன் இம்மாதம் 28.04.2006, 30.04.2006 ஆகிய திகதிகளில் முற்பகல் 10 மணிக்கு 'தமிழீழ நிர்வாக சேவை, நடுவப்பணியகம், கிளிநொச்சி' என்னும் முகவரியில் நேரில் சமுகமளிக்குமாறு வேண்டுகின்றோம்.

### பணிநிலைகள்

1. மொழிபெயர்ப்பாளர்கள் (ஆங்கிலம்- தமிழ், சிங்களம்-தமிழ்)
2. தேசிய -சர்வதேச அரசியல் மற்றும் வரலாறு தொடர்பான தேடல்- ஆய்வு செயற்பாடுகளில் விருப்பார்வம் மற்றும் ஆளுமை கொண்டவர்கள்.
3. தேசிய- மற்றும் பன்னாட்டு அரச- அரச சார்பற்ற அமைப்புகள் , அவற்றின் செயற்பாடுகள், பணிகள் குறித்த விடயங்களில் அறிவுடையோர்.
4. தேசிய- சர்வதேச பொருளாதார வளர்ச்சி மற்றும் கட்டுமானங்கள் குறித்த விடயங்களில் அறிவுடையோர்.
5. ஆங்கில மற்றும் சிங்கள இணையத்தளங்களை தேடல் உணர்வுடன் மதிப்பீடு செய்யக்கூடியவர்கள்.
6. கணனி தட்டச்சாளர்கள்.

*தேர்வு செய்யப்படுவோருக்கு அவர்களின் திறமை, தகைமை ஆர்வ முனைப்பு ஆகியவற்றின் மதிப்பீட்டின் அடிப்படையில் கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் வசதிகள் வழங்கப்படும்.* (சி/49078)(39.45)

## அனைவருக்கும் காப்புறுதி: அரசாங்கம் தீர்மானம்

வடக்கு - கிழக்கு உட்பட நாட்டில் உள்ளசகல மக்களுக்கும் சமூக பாதுகாப்புச் சபை மூலம் காப்புறுதி வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

நாட்டில்சகல மக்களினதும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவே இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ள என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் விருது வழங்கும் வைபவத்திலும் புதிய சமூகப் பாதுகாப்புக் காப்புறுதித்திட்ட அறிமுக நிகழ்விலும் செய்மதி ஊடாகத் தொடர்பு கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இத்தகவலைத் தெரிவித்தார்.

அரச, தனியார் துறைகளில் பணியில் உள்ளவர்களுக்கு காப்புறுதி திட்டங்கள் ஏற்கனவே நடைமுறையிலுள்ளன. சுயதொழிலில் ஈடுபடுபவர்களுக்கும் முறைசாரத் தொழிலாளர்களுக்கும் காப்புறுதி இல்லை. இவர்களுக்கு சிறந்த வாய்ப்பினை சமூக பாதுகாப்பு சபை மூலம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கபபட்டுள்ளது என்றார் ஜனாதிபதி. (ஐ-202)

## இருதய அஞ்சலி

யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் ந. பரமசிவம்
அவர்களின் அன்பு மாமி

**திருமதி தம்பிராசா நல்லம்மா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
யா/ யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்.

(49739)
(54-11-17)

## மரண அறிவித்தல்கள்

### குலவீரசிங்கம் மகாலெட்சுமி



வேலணை வடக்கு, ஆத்திசூடி வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குலவீரசிங்கம் மகாலெட்சுமி அவர்கள் (22-04-2006) சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜரட்ணம் -மனோன்மணி தம்பதியரின் சிரேஷ்ட மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா-இராசம்மணி தம்பதியரின் மருமகளும் குலவீரசிங்கத்தின் (லண்டன்) அன்பு மனைவியும் மோகன் (லண்டன்), குலச்செல்வன் (லண்டன்), ஸ்ரீகௌரி (லண்டன்), ஜெயஸ்ரீ (லண்டன்), வாணிஸ்ரீ (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் சிவகௌரி (லண்டன்), மகேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் பரநிருபசிங்கம், அருந்தவநாதன் (ஆஸ்திரேலியா), உஷாதேவி(ஆஸ்திரேலியா), யோக லெட்சுமி, ஜெயலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பூம்பாவை, மகாதேவன், சங்கரலிங்கம், முருகவேள், செல்வராணி, யோகேஸ்வரி (ஆஸ்திரேலியா), செல்வராசா (ஆஸ்திரேலியா), மகேந்திரன் (பழனிவேல் அன்சன்ஸ்), சயந்தகுமார் (வர்த்தகர்) ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற குழந்தைவேலு, நாகராஜேஸ்வரி, ரேணுகாதேவி (லண்டன்), சசிகலா ஆகியோரின் சகோதரியும் தவீனா, கரிஷ்மா, ராகுல், வருண் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் திரு திருமதி மணிவாசகம் (கொழும்பு), திரு திருமதி தேவராசா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.44 சீனிவாசகம் வீதி,*
*கொட்டடி, யாழ்ப்பாணம்.*
*தொ.பே.2082043636*
*(லண்டன்).*

(49736)
(26.45)

தகவல்:
*இ.பரநிருபசிங்கம்*
*(சகோதரர்).*

### திருமதி கந்தசாமி சிவபாக்கியம்



திருமதி கந்தசாமி சிவபாக்கியம் அவர்கள் 22.04.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் நீதிமன்ற ஒழுங்கை, மல்லாகத்தை வசிப் பிடமாகவும் கொண்ட சிவசம்பு கந்தசாமி என்பவரின் அன்பு மனைவியாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**நீதிமன்ற ஒழுங்கை,**
**மல்லாகம்.**

(49737)
(54-11-17)

தகவல்:
**சி,கந்தசாமி** (கணவர்).

### திருமதி தம்பிராசா நல்லம்மா
(வாரிவளவு, காரைநகர்)



காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகவும் வாரிவளவை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது பனிக்கர்வளவு, திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி தம்பிராசா நல்லம்மா அவர்கள் நேற்று (23.04.2006) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் கந்தையா - தெய்வானை தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற அம்பலவாணர் தம்பிராசா (ராஜா அன் சன்ஸ் - கண்டி) அவர்களின் அன்பு மனைவியும் தேசோமயானந்தசிவம், சோமசுந்தரம், திருமதி நகுலேஸ்வரி பரமசிவம், விக்கினேஸ்வரன் (Teacher Queens College U.K.), தவேந்திரன் (நோர்வே), மகேசன் (பொறியியலாளர், U.K.) ஆகியோரின் அன்புத் தாயும் கங்காதேவி, கமலாதேவி, பரமசிவம் (அதிபர், யாழ்ற்ரன் கல்லூரி), நிர்மலாதேவி, சாந்தி, சசிகலா ஆகியோரின் அன்பு மாமியும் சிவமயூரன் (மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்), சிவசிந்துஜா, சதீஷன், பாஸ்கரன், சிவசங்கர், கஜராஜா, விஸ்வராஜா, ரகுராஜா, சிவகணேசன், சிவானி, அபிராமி, மயூரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், சிதம்பரம், பரிமளம், வள்ளியம்மை, பரமநாதர் மற்றும் பொன்னம்மா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2006) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

72/53, பனிக்கர் வளவு,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(49738)
(54-11-17)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# 2011ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடர்; நடத்துவதற்கு ஆசியா- ஆஸி. பலப்பரீட்சை

துபாய், ஏப்ரல் 24

2011 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலக்கிண்ணத் தொடரை நடத்துவதற்கு ஆசியா, அவுஸ்திரேலிய நாடுகளிடையே பெரும் போட்டி நிலவுகின்றது.

எதிர்வரும் 2007 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடர் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ளது. அடுத்ததாக, 2011 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரை இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகள் இணைந்து நடத்துவதற்கு முடிவு செய்தன. இதற்காக ஐ.சி.சியிடம் முறைப்படி உரிமையும் கோரி இருந்தன. இந்தச் சூழலில் அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து நாடுகளும் இணைந்து இந்தத் தொடரை நடத்துவதற்கு முடிவு செய்துள்ளமையால் புதிய சிக்கல் உருவாகியுள்ளது.

ஐ.சி.சி. விதிமுறைப்படி ஒரு முறை உலகக்கிண்ணத் தொடரை நடத்திய நாடு, அதற்குப் பிறகு மூன்று உலகக்கிண்ணத் தொடர்கள் முடிவடைந்த பின்னர் தான் மீண்டும் உரிமை கோர முடியும். இந்த ரீதியில் பார்த்தால் அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து இணைந்து 1992 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரை நடத்தியது. இதன் பிறகு 1996, 1999, 2003 என மூன்று தொடர்கள் முடிவடைந்து விட்டன. இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் இணைந்து 1996 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரை நடத்தியது. 1999, 2003, 2007 க்குப் பின்பு இப்போது மீண்டும் உரிமை கோரி இருக்கின்றன.

எனவே, ஐ.சி.சி. விதி முறைப்படி ஆசியா, அவுஸ்திரேலியா இரண்டுமே 2011 உலகக்கிண்ணத் தொடரை நடத்துவதற்கு தகுதியுடையன. இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் சஹாரியார் கான் கூறுகையில்:-

2011 ஆம் ஆண்டுக்கான உலகக்கிண்ணத் தொடரை நடத்துவதிலிருந்து விலகுவதற்கு அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய நாடுகள் மறுத்து விட்டன. கடைசியாக 1992 ஆம் ஆண்டு தொடரை நடத்தியதால் தங்களுக்கே வாய்ப்பு வழங்கவேண்டும் என வலியுறுத்துகின்றன. இதேபோல் மூன்று தொடர் முடிந்த பின்பு தான் ஆசிய நாடுகளும் உரிமை கோருகின்றன. ஆசிய நாட்டில் தான் அதிக கிரிக்கெட் ரசிகர்கள் உள்ளனர். இது தவிர இங்கிருந்து தான் ஐ.சி.சிக்கு அதிக வருமானமும் கிடைக்கின்றது. எனவே, ஆசியாவுக்குத் தான் வாய்ப்பு அளிக்க வேண்டும் எனத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:-

''2011 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரை நடாத்துவதற்கான ஆசியா மற்றும் அவுஸ்திரேலியா உரிமை பற்றி எதிர்வரும் 30 ஆம் திகதி துபாயில் நடக்க இருக்கும் ஐ.சி.சி செயற்குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது. இதில் தொடரை நடத்தும் இடம் பற்றி அறிவிக்க வாய்ப்புள்ளது.

ஆசியாவுக்கு வாய்ப்புக் கிடைத்தால் இந்தியாவில் 22 ஆட்டங்களும், பாகிஸ்தானில் 16 ஆட்டங்களும், இலங்கையில் 9 ஆட்டங்களையும் நடத்த முடிவு செய்து கொண்டுள்ளன. அரையிறுதி மற்றும் இறுதி ஆட்டங்கள் நடத்தும் இடம் பற்றி இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை இந்த நான்கு நாடுகளும் உலகக்கிண்ணத் தொடரை நடத்துவதற்கு அனைத்து விதத்திலும் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளன'' எனத் தெரிவித்தார்.

# இங்கிலாந்தின் சவாலிற்கு இலங்கை வீரர்கள் தயார்

லண்டன், ஏப்ரல் 24

இங்கிலாந்து அணியின் கடும் சவாலை எதிர்கொள்வதற்கு இலங்கையணி வீரர்கள் தயார் நிலையில் இருப்பதாக அவ் அணியின் பயிற்சியாளர் ரொம் மூடி தெரிவித்துள்ளார்.

10 வாரச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு இங்கிலாந்து சென்றுள்ள இலங்கைக் கிரிக்கெட் அணி முதல் இரு வாரங்களிலும் தயார்ப்படுத்தல் பயிற்சிகளில் ஈடுபட்டுவருகின்றது. அதன் பின்னர் மே மாதம் 11 ஆம் திகதி முதல் டெஸ்ட் ஆட்டம் லோட்ஸில் நடைபெறுகின்றது.

இந்நிலையில் இந்தச் சுற்றுலா தொடர்பாக லோட்ஸில் பத்திரிகையாளர்களிற்கு ரொம் மூடி பேட்டியளித்தார். அதில் அவர் தெரிவித்ததாவது ''நிலைமைகள் இலங்கையணிக்குச் சாதகமாகவே உள்ளன. ஒரு சில விடயங்களில் எம் வீரர்களிடம் குறைகள் காணப்படுகின்றன. அவற்றை முன்னேற்றி நாங்கள் சவாலிற்கு தயாராக உள்ளோம். புது முக வீரர்கள் சிலரை இத்தொடரிற்காக அழைத்து வந்துள்ளோம். அவர்களிற்கு வெளிநாடுகளில் ஆடிய அனுபவம் கிடையாது. உள்நாட்டில் அவர்கள் காட்டிய திறமையை இங்கு வெளிப்படுத்துவார்கள் என்ற நம்பிக்கையுள்ளது'' என்று தெரிவித்தார்.

டெஸ்ட் தொடரில் கடைசியாக இவ்விரு அணிகளும் 2004 ஆம் ஆண்டு இலங்கையில் மோதின. அத்தொடரில் இலங்கையணி 1:0 என்ற ரீதியில் இங்கிலாந்து அணியை வீழ்த்தியிருந்தது. தற்போது இங்கிலாந்து சென்றுள்ள இலங்கையணியில் முன்னணி வீரர்களான மாவன் அத்தப்பத்து காயம் காரணமாகவும் சனத் ஜெயசூரியா டெஸ்டிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டதாலும் இடம் பெறவில்லை. இது தொடர்பாகக் கருத்துக்கூறிய ரொம் மூடி:- ''அவர்கள் இடம்பெறாத தில் சாதகமும்முள்ளது பாதகமும்முள்ளது. அவர்கள் இருவரும் சிறந்த வீரர்கள்தான். அவர்கள் இடம்பெறாததன் மூலம் இளம் வீரர்களிற்கான கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இலங்கை கிரிக்கெட்டின் எதிர்காலத்திற்கு இது உதவிகரமாக அமையும்'' என்றும் கூறினார்.

# கில்கிறிஸ்ட் அதிரடி; ஆஸி. வெற்றி!

சிட்டஹொங், ஏப்ரல் 24

சிட்டஹொங்கில் நேற்று நடைபெற்ற பங்களாதேஷ் உடனான முதல் ஒருநாள் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 4 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

பங்களாதேஷ் அணி நிர்ணயித்த 196 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய ஆஸி. அணிக்கு ஆரம்ப வீரரான கில்கிறிஸ்ட் 46பந்துகளில் 5 சிக்ஸர்களுடன் 76 ஓட்டங்களை விளாசி சரியான அடித்தளம் அமைத்துக் கொடுத்தார். இவர் ஆரம்ப விக்கெட்டுக்காக 11 ஓவர்களில் கட்டிச்சுடன் இணைந்து 96 ஓட்டங்களைப் பகிர்ந்தார்.

கில்கிறிஸ்ட், அப்துல் ராஸாக்கின் பந்தில் எல்.பி.டபிள்யூ ஆக ஆஸி. அணி ஆட்டம் காணத் தொடங்கியது. தொடர்ந்து கட்டிச் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த பொண்டிங் 14 ஓட்டங்களுடனும் சைமன்ஸ் ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும் ஆட்டமிழந்தனர். இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்த ஹசே 36 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்க ஆஸி அணி 6 ஓவர்கள் மீதமிருக்க வெற்றியைப் பெற்றது.

முன்னதாக முதலில் ஆடிய பங்களாதேஷ் அணி சார்பாக அணித்தலைவர் ஹபிபுல் பஸார் 52 ஓட்டங்களைப் பெற்றார். 80 ஆவது ஒருநாள் ஆட்டத்தில் பங்கேற்கும் பஸாரின் 11 ஆவது அரைச் சதம் இதுவாகும். இவர் பிரட் ஹொக்கின் பந்தில் கில்கிறிஸ்ட்டினால் 'ஸ்ரம்ப்' செய்யப்பட்டு வெளியேறினார். பஸார் 6 ஆவது விக்கெட்டில் காலித் மசூத்துடன் இணைந்து 54 ஓட்டங்களைப் பகிர்ந்தார்.

இந்த ஆட்டத்தில் இதுவே பங்களாதேஷ் அணியின் அதிகூடிய இணைப்பாட்டமாகவும் இருந்தது.

பிரட்லீயும் நதன் பிரக்கனும் ஆரம்பத்தில் பங்களாதேஷை அச்சுறுத்தினர். இருவரும் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தி ஓட்டக்குவிப்பைக் கட்டுபடுத்தினர். சுழற்பந்து வீச்சாளரான பிரட் ஹொக் 37 ஓட்டங்களிற்கு மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினார். கடைசி இரு விக்கெட்டுகளையும் தனது ஒரு ஓவரிலேயே பிடுங்கினார் சைமன்ஸ். இறுதியில் மூன்று ஓவர்கள் மீதமிருக்க பங்களாதேஷ் 195 ஓட்டங்களிற்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. (ம)

# இலங்கை அரசின்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

போது படையினரின் சமூகம் இந்த இடத்தில் இருந்ததை மறுக்க முடியாது.

எனவே இவ்வாறான கொடூர நிகழ்வுகள் தமிழ் பேசும் மக்கள் வாழும் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நடைபெறுவது உடன் நிறுத்தப்படவேண்டும். கடந்த ஏழு வாரங்களில் 65 படுகொலைகள் நடைபெறுவதற்கு அரசே பொறுப்பாக உள்ளது. இந்நிலை தொடருமானால் மீண்டும் இலங்கையில் போர் ஏற்படுவது தவிர்க்கமுடியாத தாகும். இதனால் தமிழ்பேசும் மக்கள் மட்டு மல்ல சிங்கள அப்பாவி மக்களும் பாதிக்கப்படுவதுடன் இலங்கை அரசும் ஆட்டம் காணும் நிலை ஏற்படும் என்பதை இலங்கை அரசு உணரத் தவறக் கூடாது.

எனவே தமிழ் மக்கள் தொடர்ந்தும் கொலைகளையும் துன்புறுத்தல்களையும் பொருளாதார அழிவுகளையும் அனுபவிக்காமல் சர்வசேத சமூகம் விரைந்து தீர்வு காணப்படுவதற்கு ஒழுங்கு செய்ய வேண்டும். அன்றேல் தமிழ் பேசும் மக்கள் தங்களது சுயநிர்ணய உரிமையை அனுபவிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிசெய்தல் வேண்டும். இலங்கை அரசின் கபடநாடகத்தை இனிமேலும் தமிழ் மக்கள் பொறுத்திருக்கமாட்டார்கள் என்பதை உணர்த்துவதற்கு காலம் உருவாகுவது தவிர்க்க முடியாததே.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-13)

# பிலியந்தலையில்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றும் பிரார்த்தனை வழிபாட்டில் பக்தர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது காலை 9 மணியளவில் பௌத்த தேரர்கள் சகிதம் தடிகளுடன் வந்த நூற்றுக்கும் அதிகமானோர் தேவாலயத்தினுள் நுழைந்து தேவாலயத்தைச் சேதப்படுத்தியுள்ளனர். பிரார்த்தனை வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்களில் இருபதுக்கும் அதிகமானோர் அடித்துக் காயப்படுத்தப்பட்டனர்.

பக்தர்கள் வந்திருந்த வாகனங்களும் அடித்து நொறுக்கப்பட்டன. தேவாலயத்தை விட்டு வெளியேறுமாறும், இனிமேல் தேவாலயத்திற்கு வரவேண்டாம் என்றும் தேரர்கள் அவர்களுக்கு உத்தரவிட்டனர்.

அப்போது அங்கு வந்து சேர்ந்த பொலீஸார் நிலைமையை ஓரளவு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர். தாக்கியவர்களை விட்டுவிட்டுத் தாக்கப்பட்டவர்களை மாத்திரம் அவர்கள் பொலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர் என்றும் கூறப்பட்டது.

நிலைமையைக் கட்டுப்படுத்த மூன்று பொலீஸார் மாத்திரமே சென்றனர் என்றும் அதனால் தாக்குதல் நடத்திய எவரையும் பொலீஸாரால் கைது செய்யமுடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

விசாரணைக்கு வருமாறு சம்பந்தப்பட்ட தேரர்களை பொலீஸார் அழைத்தும் கூட அவர்கள் பொலீஸ் நிலையம் செல்வதற்கு மறுத்து விட்டனர் என்றும் கூறப்படுகிறது. (க)


## மரண அறிவித்தல்

### குருநாதன் ஜனார்த்தனன் (ஜெனா)

சுன்னாகம் மேற்கு, கொத்தியாவத்தையைப் பிறப்பிடமாகவும் குளுக்கண்டி லேன், கட்டப்பிராய், கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட குருநாதன் ஜெனார்த்தனன் (ஜெனா) அவர்கள் நேற்று (23.04.2006) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் குருநாதன் - கமலாசினி (மல்லிகா) தம்பதியரின் மகனும் தர்சி, மதன், ஜெனகன், நிருசன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சுரேஸ்கரன் (சுரேஸ் - ஜேர்மனி) அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று மாலை இடம்பெற்று, இருபாலை செக்கடி மயானத்திற்கு பூதவுடல் இறுதிக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குளுக்கண்டி லேன், கட்டப்பிராய். (சி-49081) (30) தகவல்: குடும்பத்தினர்.

## வீடு தேவை

கணனிப் பயிற்சி மற்றும் ஆங்கில வகுப்புகளை நடத்திவரும் அரசசார்பற்ற நிறுவனமொன்றின் பயிற்சி நிலைய, நிர்வாக பணிகளுக்காக வீடு/ கட்டடம் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு யாழ். நகரப் பகுதிக்குள் தேவைப்படுகிறது. உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 021 4591982

## ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
பரத், மல்லிகா கபூர் நடித்த
அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது
10.30,2.30,6.30,9.30 ரிக்கற் முற்பதிவு செய்துகொள்வலாம்.

## நாகம்ஸ் சுன்னாகம்

ஜீவா, சந்தியா மற்றும் பலர் நடித்த
டிஸ்யும்
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00, 10.00

## நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

எஸ்.ஜே.சூர்யா, நயன்தாரா, விவேக் நடித்த
கள்வனின் காதலி
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா சண்முகநாதன்



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வட்டு. தென்மேற்கு, வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சண்முகநாதன் (முன்னாள், மட்டக்களப்பு கரடியனாறு விவசாய ஆராய்ச்சி நிலையக் களஞ்சியக்காப்பாளர்) அவர்கள் நேற்று (23.04.2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அளவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் நேசமலரின் அன்புக் கணவரும் நாகரஞ்சினி (கணக்காளர், சிங்கப்பூர்), மயூரன் (பங்காளர்-ஸ்ரீராஜ் பயண சேவை) ஆகியோரின் அன்புத் தந்தையும் கமலநாதன் (ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்), திருமதி க.ஸ்கந்தநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் யோகநாதன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), திருமதி கமலாதேவி செல்வக்குலச்சந்திரன் (லண்டன்), லீலாதேவி, விமலாதேவி ஆகியோரின் மைத்துனரும் திருமதி இரத்தினசபாபதி மாணிக்கம் ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2006) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு. தென்மேற்கு, வட்டுக்கோட்டை. (சி-49080) (30) தகவல்: ச.மயூரன் (குமரன்-மகன்).

### கந்தையா மகாதேவன்



(ஓய்வுபெற்ற கரணி அதிகாரி, உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஒட்டுசுட்டான்)

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் ஏழாலையை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா மகாதேவன் அவர்கள் நேற்று (23.04.2006) ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - வாடாமலர் தம்பதியரின் அன்பு மகனும் பாக்கியத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், ஏழாலை) அன்புக் கணவரும், காலஞ்சென்ற கனகரட்ணம், மாணிக்கவாசகர் (நியூஸிலாந்து), கெங்காதரன் (ஓய்வுபெற்ற அதிபர்), சரோஜினி தேவி ஆகியோரின் சகோதரரும் சாந்தினி (இந்தியா), குமுதினி (ஆசிரியர், கற்சிலைமடு), மணிவண்ணன், மதிவண்ணன் ஆகியோரின் தந்தையும், சந்திரன் (கனடா), சதீஸ்குமார் (சொலிடார், பரந்தன்), சிவாஜினி (ஆசிரியர், கனகபுரம் ம.மகாவித்தியாலயம்), யமுனா (ஆசிரியர், விசுமடு ம.மகாவித்தியாலயம்) ஆகியோரின் மாமனும், கோவர்த்தனன், ஜனார்த்தனன், சரண்ஜன், சதுர்ஜன், அபர்ணா, அபிமன்யு ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (24.04.2006) திங்கட்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணிக்கு ஏழாலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வளர்மதி இல்லம், ஏழாலை வடக்கு, ஏழாலை. (49742) (30) தகவல்: குடும்பத்தினர்.

# வெலிகந்தைப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சமர்

வெலிகந்தைப் பகுதியில் நேற்றுக்காலை ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் - இனந் தெரியாத ஆயுததாரிகளுக்குமிடையே சிறிது நேரம் நேரடி மோதல் இடம்பெற்றிருக்கிறது.

மட்டக்களப்பு - பொலனறுவை எல்லையில், வெலிகந்த மேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீலங்காப் படையினரின் சோதனைச் சாவடி மீது நேற்றுக்காலை 6.30 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தினர் என்று கூறப்பட்டது. இதில் 2 படையினர் படுகாயமடைந்தனர்.

கைக்குண்டு வீச்சைத் தொடர்ந்து படையினருக்கும் குறித்த ஆயுததாரிகளுக்குமிடையே சுமார் 20 நிமிடநேரம் துப்பாக்கிச் சமர் நீடித்தது. எனினும் இந்த நேரடி மோதலில் எவருக்கும் சேதங்கள் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து படையினர் அப்பகுதியைச் சுற்றிவளைத்துத் தேடுதல் மேற்கொண்டனர். (க)

## கந்தளாயில் சடலங்கள் மீட்பு

திருகோணமலை, கந்தளாய் பொட்டன் காடு பகுதியிலிருந்து 2 இளைஞர்களின் சடலங்கள் நேற்றுக் காலை மீட்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் இரவு மேற்படி பொட்டன்காடு பகுதியில் துப்பாக்கிப் பிரயோகச் சத்தங்கள் கேட்டன எனப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டுச் காயங்களுடன் காணப்பட்ட இந்த சடலங்கள் நேற்றுமாலைவரை அடையாளம் காணப்படவில்லை. பெரும்பாலும் அவை தமிழர்களுடையவையாக இருக்கலாம் எனக் கருதப்பட்டது. கந்தளாய் பொலீஸார் இது தொடர்பிலான விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (க)

## சயனைட் அருந்த இளைஞர் முயற்சி

கொழும்பு,ஏப்.24

பொலனறுவையில் பயணிகள் பஸ் ஒன்றில் நேற்றிரவு படையினர் சோதனையிட்ட போது அதில் பயணித்த இளைஞர் ஒருவர் 'சயனைட்' அருந்தி உயிரை மாய்க்க முயன்றார் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்றும் -

அவருடன் பயணித்த மற்றொரு இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் - மேலும் கூறப்பட்டது.

## ஆய்வுப் பட்டறை

சாவகச்சேரி,ஏப்.24

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட பகுதியினை அபிவிருத்தி செய்வது தொடர்பான திறன் அபிவிருத்தி ஆய்வுப் பட்டறை இன்று முதல் மூன்று தினங்கள் பிரதேச சபையின் தலைமைச் செயலகத்தில் காலை 8 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை நடைபெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம், ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் இந்தப் பயிற்சிப் பட்டறை நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-31-13)

## திருகோணமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதல் சம்பவத்தையடுத்து அப்பகுதியில் உள்ள சிங்கள மக்கள் பாதுகாப்பின் நிமித்தம் இடம்பெயர்ந்துள்ளனர் எனப் பொலீஸ் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக திருகோணமலை மாவட்ட பிரதிப் பொலீஸ்மா அதிபர் றொகான் அபயவர்த்தன கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

திருகோணமலை கோமரங்கடவலைப் பகுதியில் 6 சிங்களப் பொதுமக்கள் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என எமக்கு உறுதிசெய்யப்படாத தகவல்கள் கிடைத்துள்ளன. இத்தாக்குதலை விடுதலைப் புலிகள்தான் செய்திருப்பார்கள். அப்பகுதிக்கு இராணுவத்தினரை உடனடியாக அனுப்பியுள்ளோம். இப்பகுதி காட்டுப் பகுதி என்பதனால் பொலீஸாரை உடனடியாக அனுப்ப முடியவில்லை - என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இச்சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. எழிலன் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

திருமலையில் எங்கு தாக்குதல் நடைபெற்றாலும் விடுதலைப் புலிகள்மீது படையினர் குற்றம்சுமத்துவது வழமை. ஆனால், இக் கொலைச் சம்பவத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. - எனத் தெரிவித்துள்ளார். (க)

## சுற்றிவளைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலீஸாருக்குத் தெரிவித்தனர் எனக் கூறப்பட்டது.

கொல்லப்பட்ட இளைஞரின் சடலம் மேலதிக விசாரணைக்காக சுடப்பட்ட இடத்தில் நேற்றுக்காலை காணப்பட்டது.

விமானப் படையினரின் சுற்றிவளைப் பின்போது சந்தேகத்தின் பேரில் ஆறு தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரே பின்னர் சுடப்பட்டார் என்றும் மற்றொரு தகவல் தெரிவித்தது. (க)

## மட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெக்டர் எம். மூர்த்தி (வயது 54), சார்ஜன்ட் எம்.ஐ.ஜெமீல் (வயது 38), பொலீஸ் கான்ஸ்டபிள் கே.புவிச்சந்திரன் (வயது 35) ஆகியோரே படுகாயமடைந்தனர். தற்போது மட்டக்களப்பு வைத்தியசாலையில் இவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து நேற்று மட்டக்களப்பு நகரில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. நகருக்கு வந்திருந்த மக்கள் சிதறி ஓடினர். வர்த்தக நிறுவனங்கள் இழுத்து மூடப்பட்டன. போக்குவரத்தும் தடைப்பட்டது.

சம்பவத்தையடுத்து நகருக்குள் மேலதிகமாக வரவழைக்கப்பட்ட இராணுவத்தினர், பொலீஸாரின் உதவியுடன் சுற்றிவளைப்புத் தேடுதலொன்றை நடத்தினர். நகரிலிருந்த மக்களிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டதாகத் தெரிவித்த பொலீஸார் இவ்விடயம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லையென்றும் கூறினர். (க)

## புலிகள் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''விடுதலைப் புலிகளைத் தடை செய்வது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் எம்முடன் தொடர்புகளை ஏற்படுத்தி அறிவித்திருக்கிறது. இது விடயத்தில் நாம் அவர்களுடன் தொடர்புபட்டிருக்கிறோம். ஏற்கனவே சில தடைகளை விதித்துள்ள ஐரோப்பிய ஒன்றியம் இம்முறை கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும்'' - என்றார் கலாநிதி பாலித்த கொஹன்ன.

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் மீது தடை விதிக்குமாயின் அது இப்போதைய அமைதி முயற்சிக்கான நல்லெண்ணம் உருவாகுவதைப் பாதிக்காதா என்று கேட்டதற்குப் பதிலளித்த கலாநிதி பாலித்த கொஹன்ன, இப்போது அமைதி முயற்சிகளுக்கான நல்லெண்ணம் என்ற ஒன்று இருந்தால் அல்லவா இனிமேல் பாதிப்புறுவதற்கு எனக் கூறினார்.

விடுதலைப் புலிகளின் நீண்ட வாதங்களுக்குப் பின்னர், 10பேர் செல்லக்கூடிய ஹெலிகொப்டர் வசதியைப் புலிகளின் கிழக்குத் தளபதிகளின் போக்குவரத்துக்கு வழங்க அரசு முடிவு செய்ததாகக் குறிப்பிட்ட சமாதான செயலகப் பணிப்பாளர், இந்த அறிவிப்பின் பின்னர் கூட அமைதி முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை என விசனம் தெரிவித்தார். (க)

## நிழல் யுத்தம் நிஜ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது பீரங்கித் தாக்குதல்கள் மூலம் பாதுகாப்பு அரண் வழங்கினர் என்பதைப் புலிகளின் உறுப்பினர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

திருகோணமலையில் தமிழ் மக்களால் பெரிதும் மதிக்கப்பட்ட தலைவரான விக்னேஸ்வரனின் படுகொலையுடன் நிலைமை மிக மோசமாகியிருக்கின்றது. இராணுவப் புலனாய்வுப் பிரிவுக் கூட்டுடன் செயற்படும் துணை இராணுவப் படைகளே இந்தப் படுகொலையின் பின்னணியில் இருந்துள்ளன என்பதை நம்புவதற்கு எங்களிடம் சான்றுகள் உள்ளன.

அரச கட்டுப்பாட்டில் உள்ள வடக்கு -கிழக்கில் துணைப் படைகளின் வன்முறைகள் எவ்வாறு கொடூரமாக உள்ளன என்பதை இந்த நிகழ்வுகள் துலாம்பரப்படுத்துகின்றன. அப்படியிருந்தும், துணைப்படைகள் இல்லவே இல்லை என்று ராஜபக்ஷ நிர்வாகம் தொடர்ந்தும் நம்பமுடியாத அறிவிப்புகளை விடுத்துவருகின்றது. உண்மையை அப்பட்டமாக மூடி மறைக்கும் வகையிலான அரசின் இந்த மறுப்பு, ஜெனீவா உடன்பாட்டை அர்த்தமற்றதாகவும் அபத்தமானதாகவும் மாற்றியிருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அவர்களது ஆதரவாளர்களுக்கும் எதிரான தமது வன்முறை முன்னெடுப்புகளின் அங்கமாக ஆயுதம் தாங்கிய தமிழ்த் துணைப்படைக் குழுக்களை, இலங்கை அரசுப்படைகள் பாதுகாத்து, ஊக்குவித்து, உதவியளித்து வருகையில் முழு மோதல் நிறுத்தத்துடன் கூடிய உண்மையான சமாதானம் எவ்வாறு சாத்தியமாகும்?

துணைக் குழுக்களின் வன்முறை களும், அவற்றைக் கட்டுப்படுத்த அரசு மறுத்து வருவதுமே சமாதானத்துக்கான பெரும் அச்சுறுத்தல்கள் என நாம் கருதுகின்றோம்.

இப்போது இந்த வன்முறைகள், பழி வாங்கும் படுகொலைகள் என்ற வடிவத்தில் தமிழ்ப் பொதுமக்கள் கொடூரமாகக் கொன்றொழிக்கப்படும் மோசமான முகத்தை எடுத்திருக்கின்றன.

தமிழர் பிரதேசத்தில் இப்போது நிலைமை குழப்பகரமாகியிருக்கின்றது. இந்த அசிங்கமான நாசகார யுத்தத்தில் தொடர்ந்து இடம் பெறும் பழிவாங்கும் படுகொலைகள் நாட்டைப் பயங்கரமான இனப் போருக்குள் ஆழ்த்தப்போகின்றன.

இந்நிலையில், அடுத்த சுற்று ஜெனீவாப் பேச்சில் எது குறித்துக் கலந்துரையாடுவது என்பதுதான் இன்றுள்ள மிகப்பெரிய கேள்வியாகும்.

முதல் சுற்று ஜெனீவாப் பேச்சுகளின் போது முழு அளவில் மதித்துப் பேணப்படும் என தரப்புகளினால் ஏற்று உறுதியளிக்கப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கை, இப்போது உடைந்து சிதறிக் கொண்டிருக்கின்றது. சம்பந்தப்பட்ட பாத்திரங்கள் இடையே பரஸ்பர நம்பிக்கையீனம், சந்தேகம், விரோதம் என்பன அதிகரித்து வருகின்றன.

சமாதானத்தை நாடுவதில் இந்த அரசு நேர்மையான இதய சுத்தியோடும், தீவிரமான பற்றுறுதியோடும் உள்ளதா என்பதில் எங்களுக்கு ஆழ்ந்த சந்தேகம் உண்டு.

தமிழ்த் துணைக் குழுக்களின் விடயத்தில் ராஜபக்ஷ ஆட்சி உண்மை விசுவாசமின்றிச் செயற்படுகின்றது.

பாதுகாபபுச் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷவின் இராணுவக் கணிப்பின்படி தமிழர்களுக்கு இடையில் பரஸ்பரம் போரை மூளச் செய்வதற்கு கருணாகுழு ஒரு மிகப் பெரிய சொத்து.

ஆகவே, இராணுவத் தீர்வை ராஜபக்ஷ நிர்வாகம் கைவிடவில்லை என நாம் திடமாகக் கருதமுடியும்.

பாதுகாப்புக் கட்டமைப்பிற்குள் கடும் தீவிரப் போக்குடைய யுத்த வல்லூறுகளை நியமித்தமை -

அமைதிப் பேச்சுகளில் இணங்கிவராத கடும் நிலைப்பாட்டைக் கைக்கொண்டமை-

நோர்வே அனுசரணைப் பணிக்கு எதிராகக் காட்டப்பட்ட எதிர்ப்பு மற்றும் சந்தேகப் போக்கு -

விடுதலைப் புலிகளை 'பயங்கரவாத அமைப்பாக' சித்திரித்து சர்வதேச ரீதியில் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்மப் பிரசார நடவடிக்கைகள் -

- இவை போன்றவை, 'மஹிந்த சிந்தனை' இராணுவப் போக்கு மனப் பொறிக்குள் சிக்குண்டுள்ளது என்பதை வெளிப்படுத்துகின்றன.

அடுத்த சுற்றுப் பேச்சுகள் வடக்கு-கிழக்கு பொருளாதார அபி விருத்தி பற்றியனவாக அமையவேண்டும் என்று அரசின் சில அமைச்சர்கள் யோசனை கூறுகின்றார்கள். தமிழர் பிரதேசத்தில் நிலவும் மிக மோசமான பாதுகாப்பு நிலைமையில் இத்தகைய ஆலோசனை அபத்தமானதாகும். போர் அச்சுறுத்தலினால் ஏற்பட்டிருக்கும் ஸ்திரமற்ற சூழ்நிலையில் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியாது.

மேலும், வடக்கு-கிழக்கில் தனது 'விடுவிக்கப்பட்ட பிரதேசம்' என்று தான் கூறும் பகுதிகளில் தனது ஆட்சி நிர்வாகக் கட்டுப்பாட்டை ராஜபக்ஷ அரசு கிரமமாக இழந்து வருகின்றது. அங்கு சட்ட - ஒழுங்கு முறைமை சீர்குலைந்து சாதாரண தமிழ்ப் பொதுமக்களை அரசினால் இனிமேல் காப்பாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அரச படைகள் அங்கு தாம் ஆக்கிரமித்திருக்கும் தமிழர் பிரதேசங்களை அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் முரட்டுத்தனமான பலப் பிரயோகத்தின் மூலம் ஆட்சி செய்கின்றன.

யாழ்ப்பாணத்திலும், ஆக்கிரமிப்புக் குள்ளான ஏனைய தமிழ் நகரங்களிலும் ஜெனரல் சரத் பொன்சேகாவின் கொடுங்கோல் நிர்வாகம் பொது மக்களின் நம்பிக்கையை கிரமமாக இழந்து வருவதுடன் பொது மக்கள் கிளர்ந்தெழுவதற்கான சாதகமான சூழ்நிலையையும் ஏற்படுத்தி வருகின் றது.

இரண்டாம் சுற்று ஜெனீவாப் பேச்சுகளில் தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு அடிப்படையான விடயங்களும் எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்ற யோசனையும் அரச வட்டாரங்களினால் முன்வைக்கப்படுகின்றது.

'மஹிந்த சிந்தனை' என்பது ஒரு குறுகிய கருத்துலகம் என்பதும், சிந்தனையில் விரியும் கொள்கைகளுக்கோ, திட்டங்களுக்கோ அதில் இடமில்லை என்பதும் எங்களுக்கு நன்கு தெரியும்.

பேரினவாத - தீவிரப்போக்கு சக்திகளோடு இணைந்து கொண்டு, இறுக்கமான ஒற்றையாட்சி அரசமைப்பைத் தூக்கிப் பிடித்து, தமிழ் மக்களின் தாயகம் மற்றும் பிரதேச சுயாட்சிக் கோட்பாடுகளை எதிர்த்து வரும் இந்த அரசினால் இனப் பிணக்குக்கு நீதியான, நியாயமான தீர்வு ஒன்றைத் தரமுடியாது.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை இந்தப் பிணக்கு நிலையில், இராணு மோதல்கள் தணிந்து, பொது மக்களுக்கு இயல்பு வாழ்க்கை கிட்டுவதே இன்றைய சூழ்நிலையில் முக்கியமானதாகும். யுத்தநிறுத்த உடன்பாட்டை பயனுள்ள வகையில் நடைமுறைப் படுத்துவதன் மூலமே அது சாத்தியமாகும்.

தற்போதைய சூழ்நிலை காரணமாக - குறிப்பாக பயண ஒழுங்குப் பிரச்சினை காரணமாக - பேச்சுகள் ஏப்ரல் 24ஆம் திகதியில் பெரும்பாலும் நடைபெறா. பயண ஒழுங்குப் பிரச்சினை தீர்க்கப்பட்டால் பேச்சுக்காக பிறிதொரு திகதி குறித்தொதுக்கப்படலாம். - என்று தெரிவித்துள்ளார் பாலசிங்கம். (க)

## இருபாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகளுடன் வந்த பொதுமகன் ஒருவரின் மோட்டார் சைக்கிளை மிரட்டிப் பறித்துச் சென்றனர் என்றும் -

இதன்பின்னர் சிலர் வந்து கொலையாளிகள் கைவிட்ட மோட்டார் சைக்கிளை எடுத்துச்சென்றனர் என்றும் -

அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

யாழ். நாவாந்துறைப் பகுதியில் பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் நாவாந்துறை, அபூபக்கர் வீதியைச் சேர்ந்த அமிர்தநாதன் கெனடி (வயது 35) என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் அபூபக்கர் வீதியில் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இவரைச் சுட்டனர் என்று கூறப்பட்டது.

இந்த நபர் கடந்த வருட இறுதியில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுடப்பட்டு, படுகாயமடைந்து, பின்னர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று குணமடைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-க-15-86)(22)






இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.04.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை,
௨006 மே

வெளியீடு 02

# மாதிரி வினாப்பத்திரம்

## கணக்கீடு - I

திரு. S.கொலின். B.B.A.-திருகோணமலை.

(கணக்கீடு - I, பகுதி - II இன் வினாக்கள் இங்கு பிரசுரமாகின்றன.)

## பகுதி -II

முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1.
a. பங்குடமை என்றால் என்ன என்பதை வரையறை செய்வதுடன் பங்குடமையின் சிறப்பு அம்சங்களைத் தருக.
(1 புள்ளி)

b. அமல், கமல் இருவரும் பங்குடமை ஒன்றின் பங்காளர்கள். இவர்கள் பங்குடமையில் உள்ளீடு செய்த மூலதனத் தொகையின் விகிதமான 3:2 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களையும் ஏற்றுக்கொள்வதுடன் மூலதனங்களுக்கு 8% வட்டியும் பங்குடமையில் முழுநேரப் பங்காளனான அமல் வருடாந்தம் ரூ. 40,000 சம்பளத்தையும் எடுத்துக் கொள்கிறார். இருவரில் எவர் விலகிச் சென்றாலும் அவருக்குச் செலுத்த வேண்டிய தொகை கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டு 20% வட்டி செலுத்தப்படும். மேலே சொல்லப்பட்ட விடயங்களுக்கு 1890 ஆம் ஆண்டுப் பங்குடமைச் சட்டத்தின் ஏற்பாடு களையும், பிரிவுகளையும் குறிப்பிடுக.
(2 புள்ளிகள்)

c. இலாப நட்டங்களை 3:2 எனப்பகிரும் பங்குடமையில் சுனில், பஸில் இருவரும் பங்காளர்கள். இவர்களது பங்குடமையில் டேவிட் என்பவர் புதிய பங்காளனாக அனுமதிக்கப்பட்டார். புதிய இலாபநட்ட விகிதம் 5:3:2 என தீர்மானிக்கப்பட்டது. இத்திகதியில் பங்குடமையின் நன்மதிப்பு ரூ.100,000 என மதிப்பிடப்பட்டது.
I. புத்தகங்களில் நன்மதிப்பு கணக்கு மீதி ரூ.20,000 காணப்பட்டது எனவும் நன்மதிப்பின் தற்போதைய பெறுமதியில் 50% ஏடுகளில் காட்டப்படும்.
II. புத்தகங்களில் நன்மதிப்பு கணக்கு மீதி ரூ.120,000 காணப்பட்டது எனவும், புதிய பங்குடமையின் புத்தகங்களில் நன்மதிப்புக் கணக்கீடு பேணப்படமாட்டாது.
III. புதிய பங்காளன் நன்மதிப்புத் தொகையை காசாக கொண்டுவர அதில் 50% ஐ பழைய பங்காளர்கள் தொடர்ந்தும் நிறுவனத்தில் ஈடுபடுத்தினர்.
மேலே சொல்லப்பட்ட ஒவ்வொரு விடயத்தையும் தனித்தனி விடயமாகக் கருதி நாட் குறிப்பைத் தயார் செய்க.

d. இலாப நட்டங்களில் 3:2 எனப்பகிரும் பங்குடமையில் சீலன், தீபன் இருவரும் பங்காளர்கள் இவர்களது பங்குடமையின் ஒப்பந்தங்கள் வருமாறு.
I. மூலதனத்திற்கு 10% வட்டி வழங்கப்படும்.
ஒவ்வொரு பங்காளர்களுக்கும் வருடாந்தம் ரூ. 20,000 சம்பளம் வழங்கப்படும்.
இப்பங்குடமையில் 2005 ஜூலை முதலாம் திகதி அமலன் என்பவர் புதிய பங்காளனாக அனு மதிக்கப்பட்டார். இவர் மூலதனமாக ரூ. 160,000ஐ பங்களிப்புச் செய்தார். சீலன், தீபன், அமலன் ஆகியோரிடையே இலாபநட்ட விகிதம் 5:3:2 என மாற்றியமைக்கப்பட்டதுடன் பங்குடமையின் ஏனைய ஒப்பந்தங்களும் புதிய பங்காளனுக்கும் உரித்துடையது. புதிய இலாப நட்ட விகிதத்திற்கேற்ப சீலன் ரூ 40,000ஐ மூலத்னமாக உள்ளீடு செய்தார். அமலனின் வருடாந்த இலாபம் ரூ.20,000 ஆக இருக்குமென சீலன் உறுதிப்படுத்தினார்.
2005 ஜனவரி 1 இல் பங்குடமையின் ஐந்தொகை வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| மூலதனம் சீலன் | 240,000 | வினியோக வாகனம் | 180,000 |
| தீபன் | 200,000 | தளபாடம் | 150,000 |
| நடைமுறைக்கு சீலன் | 18,000 | இரும்பு | 80,000 |
| தீபன் | 2,000 | கடன் பட்டோர் | 50,000 |
| சென்மதிகள் | 60,000 | காசும் வங்கியும் | 60,000 |
| | 520,000 | | 520,000 |

மேலதிக தகவல்கள்:
நிறுவனம் இரட்டை பதிவு முறையில் காலக் கேடுகள் பேணிவரவில்லை. 31.12.2005 சொத்துக்களும் பொறுப்புகளும் வருமாறு.

| | |
|---|---|
| விநியோக வாகனம் | 320,000 |
| தளபாடம் | 300,000 |
| இருப்பு | 100,000 |
| கடன்பட்டோர் | 100,000 |
| காசும் வங்கியும் | 80,000 |
| சென்மதிகள் | 100,000 |

II. விற்பனைகள், செலவுகள், வருமானங்கள் அனைத்தும் எக்காலப்பகுதிக்கும் ஒரே விகிதமாகவே ஏற்பட்டிருந்தது.
III. பற்றுக்கள் பின்வருமாறு செய்யப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| சீலன் மாதாந்தம் | - காசு | 2,000 |
| | - பொருள் | 500 |
| தீபன் மாதாந்தம் | - காசு | 1,500 |
| அமலன் | | 12,000 |

**வேண்டப்படுவது:**
1. 31.12.2005 இல் முடிவடைந்த வருடத்திற்கான தேறிய இலாபக் கணிப்பு கூற்று.
2. 31.12.2005 இல் முடிவடைவதற்கான இலாபநட்ட பகிர்வுக் கணக்கு.
3. பங்காளர் மூலதனக்கணக்கும், நடைமுறைக்கணக்கும்.
4. 31.12.2005இல் உள்ளபடியான ஐந்தொகை.

2) அ).வாகனங்களின் உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் ஒரு வியாபாரத்தையும், வாகனங்களின் பழுதுகளைத் திருத்தி வழங்கும் சேவையையும் நட்த்தி வரும் வியாபார அமைப்பிலிருந்து பின்வரும் விபரங்கள் எடுக்கப்பட்டது.

| | உபகரணம் + | உதிரிப்பாகம் + | வருமதிகள் + | காசுமீதி = | மூலதனம் + | சென்மதி |
|---|---|---|---|---|---|---|
| 1. | +40000 | | | | +40000 | |
| 2. | | +45000 | | -30000 | | +15000 |
| 3. | | | +24000 | | +24000 | |
| 4. | | -20000 | | +30000 | +10000 | |
| 5. | | | | | -4000 | +4000 |
| 6. | | | -2000 | | -2000 | |
| 7. | | -10000 | +15000 | | +5000 | |
| 8. | -1000 | | | | -1000 | |

1) 1ஆம், 2ஆம் இலக்க கொடுக்கல் வாங்கல்கள் மட்டும் தேறிய இலாபத்தைப் பாதிக்க வில்லை என எடுத்துக்கொண்டு ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலையும் நிரல் படுத்துக.
(4 புள்ளிகள்)
2) வருமானக் கூற்றைத் தயார் செய்க? (2 புள்ளிகள்)

ஆ) சிவராமன் என்பவரால் 2005 டிசம்பர் 15ஆம் திகதி தனது நிறுவன இருப்புகளை அறியும் பொருட்டு இருப்பு கணக்கெடுப்பை மேற்கொண்டபோது ரூ. 124,000 மீதியை காட்டியது. இதனால் தனது நிதியாண்டு முடிவுத் திகதியான 2005 டிசம்பர் 31 இல் இருப்பை மதிப்பிடத் தவறியிருந்தார். இவர் கொள்விலையுடன் 25% இலாபம் சேர்த்து பொருள்களை விற்பனை செய்வது வழக்கம்.
I. 15/12/2005 இலிருந்து 31/12/2005 வரை பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றது.

| | | | |
|---|---|---|---|
| விற்பனைகள் | 149,000 | கொள்வனவுகள் | 86,000 |
| விற்பனை திரும்பல் | 5,000 | கொள்வனவு திருப்பம் | 7,000 |
| பொருள்பற்று | 6,000 | நன்கொடை பொருள்கள் | 4,000 |

மேலே காட்டப்பட்ட விற்பனைகளில் ரூ.24,000 பட்டியல் விலையான பொருள்கள் மட்டும் விற்பனை விலையில் 25% இலாபம் சேர்த்து விற்பனை செய்யப்பட்டது. மிகுதி பொதுவான இலாப எல்லைப்படியே விற்பனை செய்யப்பட்டது.

II. விற்பனை செய்யப்பட்ட ரூ. 10,000 பட்டியல் விலையான பொருள்கள் 31/12/2005 வரை நிறுவனத்திலிருந்து எடுத்துச் செல்லப்படாதது கவனத்தில் கொள்ளப்படவில்லை.
**31/12/2005 இல் இருப்பை மதிப்பீடு செய்க.** (4 புள்ளிகள்)

3) அ.வரையறுக்கப்பட்ட றோயல் ஓடு உற்பத்திக் கம்பனி விசேட வகையான தகடு ஒன்றைப் பயன்படுத்தி கூரைத்தகடுகள் உற்பத்தியை மேற்கொள்கின்றது. இதற்கு ஓர் அலகு தகடு பயன்படுத்தப்பட்டு ஒருகூரை தகடு உற்பத்தி செய்யப்படுகின்றது. ஒரு கூரை தகடு உற்பத்தி செய்யப்படுவதற்கான நேர்கிரயங்கள் வருமாறு:

| | |
|---|---|
| மூலப்பொருள் (தகடு) | ரூ. 40 |
| உற்பத்திக் கூலி | ரூ. 20 |
| ஏனைய நேர்க்கிரயம் | ரூ. 10 |
| | ரூ. 70 |

30 ஜூன் 2005இல் முடிவடைந்த ஆறு மாதங்களுக்கான தகவல்கள் வருமாறு:
01/01/2006 இல் இருப்புகள்

| | | |
|---|---|---|
| மூலப்பொருள் | 500 அலகுகள் | |
| முடிவுப் பொருள் | | |
| தொழிற்சாலை | 400 அலகு | - ரூ. 36,000 |
| வியாபாரப் பகுதி | 600 அலகு | - ரூ. 54,000 |
| நேரில் மூலப்பொருள் | | ரூ. 5,000 |

| | |
|---|---|
| மூலப்பொருள் கொள்வனவு | 9000 அலகு |
| உற்பத்தி செய்யப்பட்ட கூரைத்தகடுகள் | 8000 |
| களவு போன மூலப்பொருள்கள் | 200 அலகு |
| நேரில் மூலப்பொருள் கொள்வனவு | 42,000 |
| தொழிற்சாலை மேந்தலைகள் | 80,000 |
| இயந்திர பெறுமானத் தேய்வு | 40,000 |

30 ஜூன் 2005இல் இருப்பு

| | |
|---|---|
| மூலப்பொருள் | ? |
| முடிவுப் பொருள் | |
| தொழிற்சாலை 1000அலகு | ? |
| வியாபார பகுதி | ? |
| நேரில் மூலப்பொருள் | 7000 |

**தயாரிக்க வேண்டியது:**
**1. 30/06/2005 முடிவடைந்த வருடத்திற்கான உற்பத்திக் கணிப்பீடு.**
(6 புள்ளிகள்)

ஆ. தனிவியாபாரியான சேரன் என்பவரின் பரீட்சை மீதி 31/03/2006 இல் சமப்படாத காரணத்தால் தொங்கல் கணக்கின் மூலம் தற்காலிகமாக சமப்படுத்தப்பட்ட பரீட்சை மீதியின்படி தேறிய இலாபம் தயாரிக்கப்பட்டது. பின்னர் பின்வரும் தவறுகள் நிரல் படுத்தப்பட்டன.
I. கொள்வனவு கிரயப் பட்டியல் 12,000/- கொள்வனவு நாளேட்டில் 10,000/- எனப் பதியப்பட்டது.
II. வாகனப் பராமரிப்பு செலவு ரூ. 6,000 வாகனக் கணக்கில் பதியப்பட்டது.
III. காசேட்டின் பெறுவனவாக கழிவு நிரல் ரூ.4,000 பெற்ற கழிவு கணக்கிற்கும் செலவுப் பக்க கழிவு நிரல் ரூ. 5,000 கொடுத்த கழிவு கணக்கிற்கும் மாற்றப்பட்டுள்ளது.
IV. சேகருக்குத் திருப்பிய ரூ. 3,000 பொருள்கள் ஏடுகளில் சேகரால் திருப்பப்பட்ட பொருளாக பதியப்பட்டுள்ளது. (4 புள்ளிகள்)

4. அ.வங்கி கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கும் படிமுறைகள் எவை? (1 புள்ளி)
ஆ.வங்கி கணக்கிணக்கக் கூற்றை தயாரிப்பதனால் ஏற்படும் அனுகூலங்கள் இரண்டு தருக. (1 புள்ளி)
இ. வரையறுக்கப்பட்ட இம்ரான் கம்பனியின் காசேட்டுப்படி வங்கிமீதியும், வங்கி கூற்றுப்படி வங்கிமீதியும் 31 டிசம்பர் 2005 இல் சமப்படாது காணப்பட்டது. பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றது.
1. 31/12/2005 இல் வங்கி கூற்றுப்படி செலவு மீதி 86,000/-
2. வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட 28,000/- காசோலை வங்கிக் கூற்றில் செலவு ஏற்படுத்தப்படவில்லை.
3. கொள்வனவு செய்யப்பட்ட 1,000/- காசோலை வங்கிக் கூற்றில் 2,000/- என வரவு எழுதப்பட்டது.
4. பின்வரும் விடயங்கள் வங்கிக் கூற்றில் மட்டும் பதியப்பட்டது.
a. செலவில் எழுதப்பட்ட வட்டி 6,000/-
b. வரவில் எழுதப்பட்டுள்ள அறவீடுகள் 1,000/-
c. நேரடி வைப்பு 5,000/-
5. வங்கி கூற்றில் வரவு எழுதப்படாத காசோலைகள் 21,000/-

**தயாரிக்க வேண்டியது:**
**1. வங்கி கூற்றுப்படி வங்கிமீதியில் இருந்து திருத்திய காசேட்டுப்படி வங்கி மீதியைக் காண்க?**
**2. காசேட்டில் காணப்படும் தவறுகளைத் திருத்தம் செய்க?** (5 புள்ளிகள்)

ஈ. 31/12/2005 இல் உள்ளபடியான ஐந்தொகை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மூலதனம் | | 200,000 | தளபாடம் | 200,000 | |
| + தேறிய இலாபம் | | 150,000 | தேய்மான ஏற்பாடு | 60,000 | 140,000 |
| | | 350,000 | | | |
| பற்றுக்கள் | | 30,000 | வாகனம் | 150,000 | |
| | | 320,000 | தேய்மான ஏற்பாடு | 50,000 | 100,000 |
| நீண்டகாலக்கடன் | | | | | |
| வங்கிக்கடன் | | 50,000 | இருப்பு | | 50,000 |
| குறுங்காலக் கடன் | | | கடன்பட்டோர் | 60,000 | |
| சென்மதியாளர் | 26,000 | | ஐயக்கடன் ஏற்பாடு | 4,000 | 56,000 |
| சென்மதி சம்பளம் | 4,000 | 30,000 | காசுமீதி | | 54,000 |
| | | 400,000 | | | 400,000 |

மேலே காட்டப்பட்டுள்ள ஐந்தொகையில் பின்பற்றப்பட்டுள்ள கணக்கீட்டு எண்ணக் கருக்கள் 6 ஐ பெயரிட்டு கணக்கில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு உதாரணம் தருக.

5) அ.வரையறுக்கப்பட்ட சிவனேசன் கம்பனியின் ஏடுகளின்படி 01/01/2005 இல் விற்பனை பேரேட்டு மீதிகளை நிரல்படுத்தியபோது ரூ. 84,000/- வரவு மீதிகளையும் ரூ. 4,000/- செலவு மீதியையும் காட்டியது. ஆனால் 31/12/2005 இல் விற்பனை பேரேட்டு மீதியை நிரல்படுத்தியபோது ரூ. 176,000/- வரவு மீதியையும் ரூ. 5,000/- செலவு மீதியையும் காட்டியது. இத்திகதியின்படி தயாரிக்கப்பட்ட கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கின் வரவு மீதி விற்பனை பேரேட்டு மீதிகளின் பட்டியலுடன் இணங்கவில்லை.

**31/12/2005 இல் முடிவடைந்த வருடத்திற்கான கொடுக்கல், வாங்கல் வருமாறு:**

| | |
|---|---|
| விற்பனை நாளேடு | 362,000 |
| விற்பனை திரும்பல் நாளேடு | 26,000 |
| கடன்பட்டோர்க்கு கொடுத்த கழிவு | 14,000 |
| பதிவழிக்கப்பட்ட அறவிடமுடியாதக் கடன் | 4,000 |

| | |
|---|---|
| கடன்பட்டோரிடம் பெறப்பட்ட காசும் காசோலையும் | 244,000 |
| வருமதி உண்டியல் | 10,000 |
| மறுக்கப்பட்ட காசோலை | 11,000 |
| கொள்வனவு பேரேட்டுக்கு எதிராக மாற்றப்பட்டது | 5,000 |

பின்வரும் தவறுகள் நிரல்படுத்தப்பட்டது.

1. விற்பனைத் திரும்பல் நாளேடு 2,000 மிகையாக கூட்டப்பட்டுள்ளது.
2. மோகன் என்ற வருமதியிடம் பெறப்பட்ட காசு ரூ. 3,000 மோகன் கணக்கில் வரவில் எழுதப்பட்டது.
3. கடன்பட்டோர் ஒருவருக்கு கொடுத்த கழிவு 1,000 தனிப்பட்ட நபர்கணக்கில் மட்டும் பதியப்பட்டது.
4. விற்பனை பேரேட்டில் காணப்பட்ட வரவு மீதி ரூ. 4,000 தவறவிடப்பட்டிருந்தது.
5. பதிவழிக்கப்பட்ட அறவிடமுடியாதக் கடன் ரூ. 2,000 தனிப்பட்ட நபர் கணக்கில் மட்டும் பதியப்பட்டது.
6. விற்பனை நாளேட்டில் காணப்பட்ட ரூ. 6,000 உருப்படியொன்று தனிப்பட்ட நபர் கணக்கில் ரூ. 4,000 எனப் பதியப்பட்டது.

**1) மேலே காட்டப்பட்ட தவறுகளைத் திருத்தமுன் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு.**
**2) கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியை செம்மையாக்கல் கணக்கு.**
**3) செம்மையாக்கப்பட்ட கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியை விற்பனைப் பேரேட்டு மீதியுடன் இணக்கம் செய்க.** (7புள்ளிகள்)

ஆ. ஒரு வியாபார அமைப்பின் சில்லறை காசாளனுக்கு வழங்கப்பட்ட முற்பணம் ரூ. 3,000 ஆகும். பின்வரும் விபரங்கள் எடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| 01/01/06 இல் சில்லறை காசு மீதி | 2,600 |
| 02/01/06 வண்டி கூலி செலுத்தப்பட்டது | 300 |
| 03/01/06 தபால் செலவு | 200 |
| 05/01/06 பொதிகட்டல் செலவு | 350 |
| 07/01/06 உபகரண செலவு | 250 |
| 10/01/06 தேநீர் செலவு | 300 |
| 14/01/06 பொதிகட்டல் செலவு | 340 |
| 20/01/06 பதிவுத் தபால் செலவு | 260 |
| 24/01/06 வண்டி கூலி | 250 |

28/01/06 சில்லறை காசாளரின் பணம் மீள்நிரப்புச் செய்யப்பட்டது.
சில்லறைக் காசேட்டைத் தயார் செய்க.

6) அ.வரையறுக்கப்பட்ட சுசில் கம்பனி 2002 ஜனவரி 01 இல் 640,000/- விலையில் ஓர் இயந்திரத்தைக் கொள்வனவு செய்தது. இதன் இழிவுப் பெறுமானம் 10,000/- எனவும் பாவனைக்காலம் 06 வருடங்கள் எனவும் கணக்கிடப்பட்டது. இதனால் நிறுவனம் சொத்திற்கு ஒடுங்குபாக முறையில் 50% தேய்விற்கு ஏற்பாடு செய்யத் தீர்மானித்து அதனை நடைமுறைப்படுத்தியது. ஆனால், 01/01/2004 இல் இந்த இயந்திரம் பின்வரும் செலவில் விருத்தி செய்யப்பட்டது.

| | |
|---|---|
| புதிய கருவி கொள்வனவு | 250,000 |
| புதிய கருவிக்கான கொள்வனவு வரி | 50,000 |
| பொருத்தல் செலவு | 30,000 |
| பரீட்சார்த்த உற்பத்தி செலவு | 10,000 |

இந்த விருத்தி செய்தலினால் சொத்தின் பாவனைக்காலம் அத்திகதியிலிருந்து 04 வருடங்களால் அதிகரிக்கும்.

1. 2002 ஆம் ஆண்டிற்குரிய பெறுமானத்தேய்வு யாது?
2. 31/12/2003 இல் ஐந்தொகையில் இயந்திரம் எவ்வாறு காட்டப்படும் எனத் தருக?
3. 2004 ஆம் ஆண்டுக்குரிய பெறுமானத்தேய்வு யாது?
4. 31/12/2004 இல் முடிவடைந்த வருடத்திற்கான பின்வரும் கணக்குகள். இயந்திரக்கணக்கு இயந்திரதேய்மான ஏற்பாட்டுக் கணக்கு
5. 31/12/2003 இல் இயந்திரம் ரூ. 241,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டது என எடுத்துக்கொண்டு சொத்து முடிவு செய்தலுக்கான நாட்குறிப்பு யாது? (7 புள்ளிகள்)

ஆ.31/12/2005 இல் காணப்பட்ட கடன்பட்டோர் மீதி ரூ. 124,000/-. இக்கடன்பட்டோர் தொடர்பாக பின்வரும் தீர்மானங்களை அந்த நிறுவனம் தீர்மானித்தது.

I. ரூ. 4000 ஐ அறவிடமுடியாத கடனாகப் பதிவழித்தல்.
II. அறவிடுதல் கடினமாக உள்ள ரூ. 5,000 இற்கு 100% விசேட ஏற்பாடு செய்தல்.
III. மீதி கடன்பட்டோரில் காலப் பகுப்பாய்விற்கேற்ப பின்வருமாறு பொது ஏற்பாடு செய்யப்பட்டது.

| காலம் | தொகை | ஐயக்கடன் ஏற்பாட்டு அளவு |
|---|---|---|
| 1 மாதம் | 45,000 | 2% |
| 2 மாதம் | 30,000 | 5% |
| 3 மாதம் | 40,000 | 10% |

IV. அறவிடமுடியாதக் கடன் தொடர்பான சீராக்கல் ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கினூடாகச் செய்யப்பட்டது.
V. ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கில் விசேட ஏற்பாடு ரூ. 3,000 பொது ஏற்பாடு ரூ.4,000 கொண்ட ரூ 7,000 மீதியாக காணப்படுகின்றது என எடுத்துக் கொண்டு ஐயக் கடன் ஏற்பாட்டுக் கணக்கைத் தயார் செய்க. (3 புள்ளிகள்)

(கணக்கீடு - II இல் பகுதி -I இன் வினாக்கள் 01.05.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்.)

## விடைக்குறிப்புகள்

வெளியீடு 01

## கணக்கீடு -II

திரு. D.SAM - யாழ்ப்பாணம்.

(கணக்கீடு - II விடைக்குறிப்புகளின் தொடர்ச்சி இங்கு பிரசுரமாகின்றது)

(7) வருமான வரி :

| | தொகை (ரூபா) |
|---|---|
| நிகழாண்டு | 336 |
| சென்றாண்டுச் சீராக்கம் | 20 |
| | 356 |

(8) அசாதாரண விடயங்கள் :

| | தொகை (ரூபா) |
|---|---|
| அழிவு நட்டம் | 20 |

(9) பங்கிலாபம் :

| பிரேரித்தது : | தொகை (ரூபா) தேறியது | தொகை (ரூபா) வரி | தொகை (ரூபா) மொத்தம் |
|---|---|---|---|
| முன்னுரிமைப் பங்கு | 108 | 12 | 120 |
| சாதாரண பங்கு | 430.06 | 47.78 | 477.84 |
| | 538.06 | 59.78 | 597.84 |

(10) ஆதன் பொறி இயந்திர உபகரணம் :
10.1 பகுப்பு :

| | கிரயம் | | | ஏற்பாடு | | | | மீதி |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆரம்பம் | முடிவு | இறுதி | ஆரம்பம் | நி.ஆண்டு | முடிவு | இறுதி | |
| | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | (ரூபா) |
| நிலம் | 7 000 | - | 7 000 | - | - | - | - | 7 000 |
| கட்டடம் | 3 200 | 800 | 2 400 | 1 280 | 240 | 160 | 1 360 | 1 040 |
| அலுவலக உபகரணம் | 1 600 | - | 1 600 | 640 | 240 | - | 880 | 720 |
| மோட்டார் வாகனம் | 2 400 | - | 2 400 | 720 | 480 | - | 1 200 | 1 200 |
| தளபாடம் பொருத்தி | 1 200 | - | 1 200 | 360 | 240 | - | 600 | 600 |
| | 15 400 | 800 | 14 600 | 3 000 | 1 200 | 160 | 4 040 | 10 560 |

10.2 கட்டடம் 10%, அலுவலக உபகரணம் 15%, தளபாடம பொருத்தி 20%, மோட்டார் வாகனம் 20% நேர் கோட்டு முறையில் தேய்விடப்பட்டுள்ளது

(11) முதலீடுகள் :

| | தொகை (ரூபா) |
|---|---|
| நிலையான வைப்பு | 400 |

(12) அருவச் சொத்துக்கள் :

| | தொகை (ரூபா) |
|---|---|
| நன்மதிப்பு | 540 |

(13) கடன்பட்டோர் :

| | தொகை (ரூபா) |
|---|---|
| கடன்பட்டோர் | 184 |
| ஐயக்கடன் ஏற்பாடு | (18.4) |
| | 165.6 |

(14) காசு :

| | தொகை (ரூபா) |
|---|---|
| காசு | 20 |
| வங்கி | (49.6) |
| | (29.6) |

(15) பங்கு மூலதனம் :
பகுப்பு :

| | அனுமதித்தது தொகை (ரூபா) | வழங்கியிறுத்தது தொகை (ரூபா) |
|---|---|---|
| @ 10/= 8% மு.ப | 6 000 | 2 000 |
| @ 10/= சா.ப | 10 000 | 4 778.4 |
| | 16 000 | 6 778.4 |

(16) ஒதுக்கங்கள் :

| | தொகை (ரூபா) |
|---|---|
| பொது ஒதுக்கம் | 416 |
| பங்குவட்டம் | 1600 |
| பகிரப்படாத இலாபம் | 1 391.76 |
| மறுமதிப்பீட்டு ஒதுக்கம் | 400 |
| ஆரம்பச் செலவு | (540) |
| | 3 267.76 |

(17) வட்டி செலுத்தவேண்டிய கடன்கள் :

| | தொகை (ரூபா) |
|---|---|
| 12% தொகுதிக் கடன் | 1 600 |

(18) சென்மதிச் செலவுகள் :

| | தொகை (ரூபா) |
|---|---|
| நிகழாண்டு வரி | 112 |
| பிரேரித்த பங்கிலாபம் (தேறியது) | 538.06 |
| பங்கிலாப வரி | 59.78 |
| தொகுதிக்கடன் வட்டி | 8 |
| | 717.84 |

செய்கை :

பகிர் க/கு

| | | | |
|---|---|---|---|
| பொது ஒதுக்கம் | 80 | இந்தாண்டு இலாபம் | 1 389.6 |
| பங்கிலாபம் | 597.84 | சென்றாண்டு இலாபம் | 680 |
| பகிரப்படாத இலாபம் | 1 391.76 | | |
| | 2 069.6 | | 2 069.6 |

விற்ற சரக்கின் கிரயக் கணிப்பீடு :

| | ரூபா |
|---|---|
| ஆரம்ப இருப்பு | 360 |
| கொள்வனவு | 8 572 |
| வெளித்திரும்பல் | (32) |
| உள்வந்த வண்டிக் கூலி | 240 |
| இறுதியிருப்பு | (660) |
| | 8 480 |

வினா இல : 2

(அ)

(1)
600 x 4 = 2 400
300 x 5 = (1 500)
ரூபா 900 அல்லது 600 x 1.50 = ரூபா 900

(2)

| | | ரூபா |
|---|---|---|
| 4 000 x 4 | = | 160 000 |
| 1 000 x 5 | = | (50 000) |
| | = | 110 000 |
| ஒதுக்கல் நிலுவை | | (900) |
| | | 109 100 |

அல்லது ஊழியர்
20 000 X 4 = 80 000
விகிதாசாரம் 20 000 X 4 = 80 000
10 000 X 5 = (50 000)
30 000
ஒதுக்கல் நிலுவை = (900) 29 100
109 100

(3)

| | | ரூபா |
|---|---|---|
| 1 000 x 3 | = | 3 000 |
| 1 400 x 3 | = | 4 200 |
| 600 x 3 | = | 1 800 |
| | | 9 000 |

(4)

| | | ரூபா |
|---|---|---|
| அழைப்பு 4 0000 x 12 | = | 480 000 |
| ஒதுக்கல் நிலுவை | = | (900) |
| | = | 479 100 |
| அழைப்பு நிலுவை | | (9 000) |
| | | 470 100 |

(5)

நாட்குறிப்பு

| | வரவு (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| ❖ மனுஒதுக்கற் க/கு | 360 000 | |
| சாதாரண பங்கு மூலதனக் க/கு | | 160 000 |
| பங்கு வட்டக் க./கு | | 200 000 |
| (ஒதுக்குதல்) | | |
| ❖ 1 ஆம் அழைப்புக் க/கு | 120 000 | |
| சாதாரண பங்கு மூலதனக் க/கு | | 120 000 |
| (அழைப்பு விடல்) | | |

(ஆ)

பறிமுதல் மீளவழங்கற் க/கு

| | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| 1 ஆம் அழைப்பு | 3 000 | சாதாரண பங்கு மூலதனம் | 7 000 |
| சாதாரண பங்கு மூலதனம் | 10 000 | வங்கி | 8 000 |
| பங்குவட்டம் | 2 000 | | |
| | 15 000 | | 15 000 |

(இ) (i) ஒரு சொத்தின் பயன்தரு ஆயுட்காலம் மீது அதன் தேய்மானமிடத் தகுந்த தொகையை ஒழுங்காக ஒதுக்கீடு செய்தல்.
(ii) ஒரு சொத்தின் எஞ்சிய பெறுமதி கழிக்கப்பட்ட கிரயம் அல்லது கிரயத்திற்காக நிதிக் கூற்றுக்களில் பதில் வைத்த வேறு தொகை
(iii) தொழில் முயற்சியின் முழுமையான கட்டுப்பாடல்லாத ஒன்று அல்லது பல நிச்சயமற்ற எதிர்கால நிகழ்ச்சிகள் ஏற்படுகை அல்லது ஏற்படாமையால் உளதாம் தன்மையை உறுதிசெய்யும் கடந்தகால நிகழ்வுகளிலிருந்து உருவாகும் ஓர் கடப்பாடு.
(iv) ஒப்பந்தமொன்றின் கீழ் பெறலாமென எதிர்பார்க்கக்கூடிய பொருளாதார பயன்களிலும் பார்க்க அதன் கீழ் ஏற்படும் கடப்பாடுகளை நிறைவேற்றத் தேவையான தவிர்க்க முடியாத கிரயங்கள் அதிகமாகவுள்ள ஓர் ஒப்பந்தம்.

(கணக்கீடு - II இன் விடைக்குறிப்புகளின் தொடர்ச்சி 01.05.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்.)

(திரு. B.S. பசில் (B.B.A.) யாழ். அவர்களின் வணிகக்கல்வி II இல் பகுதி - II இன் விடைக்குறிப்புகளின் தொடர்ச்சி 01.05.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் எதிர்பாருங்கள்.)